
கல்கி
KALKI 11.1.2004
ரூ.6.00
உற்சாகமாய்
ஒற்றைக்
காலில்..!
பொங்கல் சிறப்பிதழ்
இலவச இணைப்புடன்


PARLE
தாத்தா ஆகட்டும் இல்ல பேரன்.
ஆண்டாண்டு காலமாக எங்களுக்குப்
பிடித்தமான சுவை, பார்லே-ஜீ
உலகின் மிக அதிகமாக விற்பனையாகும் பிஸ்கட்டுகள்.
Parle-G
Visit: www.parleproducts.com
everest/2004/PP/1 tm



கல்கி
25.1.04
இதழில்...
கோடி கோடி மின்னல்கள்
பூஞ்சிட்டு நடையில் ராஜேஷ்குமார் எழுதும்
புதிய தொடர்கதை ஆரம்பம்!

# நடக்குமென்பார்:

### மேஷம்

- எதிர்பாராத பயணம் உண்டு.
- தெய்வபலம் அதிகரிக்கும்.
- புதிய வேலை முயற்சிகளில் வெற்றி உண்டு.
- எதிர்பார்க்கும் நல்ல செய்தி வந்து சேரும்.
- வர வேண்டிய பணம் வந்து சேரும்.
- குடும்பத்தில் குதூகலம் நிறைந்திருக்கும்.
- வழக்கு விவகாரங்களில் நன்மை உண்டு.

### ரிஷபம்

- எடுத்த காரியத்தில் வெற்றி உண்டு.
- எதிர்பாராத சந்திப்பு நிகழும். இதனால் பயன் உண்டு.
- இதுவரை இருந்து வந்த சலசலப்பு பிரச்னைகள் அகலும்.
- சிலருக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் கிடைக்கும்.
- கொடுக்கல் வாங்கல் கை கொடுக்கும்.
- வரவுக்கு அதிகமாக செலவுகள் ஆகும்.
- பெண்களுக்கு தங்கள் எண்ணம் ஈடேறும்.

### மிதுனம்

- பணவசதி தாராளமா இருக்கும்.
- புதியவங்க அறிமுகம் கிடைக்கும்.
- சிறு சிறு பிரச்னைகள் ஏற்பட்டு விலகும்.
- வேலை விஷயமாக வெளியூர்/வெளிநாடு போக வாய்ப்பிருக்கு.
- குடும்பத்தில் தாமதமாகிவந்த சுப காரியங்கள் இப்போது நிறைவேறும்.
- சொந்த விவகாரத்தில் இதுவரை இருந்த தடைகள் விலகும்.

### கடகம்

- எடுத்த காரியம் திட்டமிட்டபடி நிறைவேறும்.
- எதிர்ப்புகள் மாயமாகும்.
- மனத்தில் துணிவு, தன்னம்பிக்கை பிறக்கும்.
- தாமதமாகி வந்த பதவி உயர்வு இப்போது கிடைக்கும்.
- புதிய வேலை முயற்சிகள் கைகூடும்.
- கொடுக்கல், வாங்கல் கை கொடுக்கும்.
- கடன் தொல்லைகள் மறையும்.
- சிலர் புதிய வீடு, மனை வாங்க வாய்ப்பிருக்கு.

### சிம்மம்

- செலவுகள் அதிகரிக்கும்.
- உத்தியோகத்தில் சிறு சிறு பிரச்னைகள் ஏற்பட்டு விலகும்.
- எல்லா வகையிலும் நிதானம், பொறுமை அவசியம்.
- புதிய முயற்சிகளை தள்ளிப் போடவும்.
- எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும்.
- வீடு, மனை வாங்க வாய்ப்பிருக்கு.
- பெண்களுக்குப் புதிய பொருள் சேர்க்கை நிகழும்.

### கன்னி

- பணவசதி தேவைக்கேற்ப கிடைக்கும்.
- இதுவரை இருந்து வந்த தடைகள், குறுக்கீடுகள் விலகும்.
- பதவி உயர்வு, இட மாற்றம் கிடைக்கும்.
- புதிய முயற்சிகளில் நன்மை உண்டு.
- கொடுக்கல் வாங்கல் சுமுகமாக இருக்கும்.
- குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் மறையும்.
- வழக்கு விவகாரங்களில் நன்மை உண்டு.
- கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ், பாராட்டு கிடைக்கும்.

### துலாம்

- எதிர்ப்புகள் மறையும்.
- துணிவு தன்னம்பிக்கை அதிகரிக்கும்.
- பண நடமாட்டம் தாராளமாக இருக்கும்.
- சிக்கலான காரியத்தைக்கூட சாதுர்யமாக நிறைவேற்றுவீங்க.
- குடும்பத்தில் ஒற்றுமை நிலவும்.
- பெண்களுக்கு பொன், பொருள் ஆபரணச் சேர்க்கை நிகழும்.
- கல்யாணமாகாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்புத் தேடி வரும்.



விருச்சிக ராசிக்காரரான அர்ச்சனாவுக்கு எதிர்ப்புகள் விலகும்.

### விருச்சிகம்

- உத்தியோகத்தில் இது வரை இருந்து வந்த சிக்கல் விலகும்.
- புதிய வேலை முயற்சிகளில் நன்மை உண்டு.
- எதிர்ப்புகள் விலகும்.

# நடக்கும்!

- வெளிநாட்டிலிருந்து நல்ல செய்தி தேடி வரும்.
- குடும்பத்தில் சுபமங்கள காரியங்கள் நடக்க வாய்ப்பிருக்கு.
- தேவைக்கேற்ப பணவசதி கிடைக்கும்.
- ஏற்றுமதி, இறக்குமதியில் நல்ல லாபம் உண்டு.
- எதிலும் நிதானம், பொறுமை அவசியம்.

### தனுசு

- எடுத்த காரியத்தில் வெற்றி உண்டு.
- முக்கியமானவர்களின் ஆதரவு கிடைக்கும்.
- பணவசதிக்குப் பஞ்சமில்லை.
- இதுவரை தாமதமாகிவந்த விஷயங்கள் இப்போது நிறைவேறும்.
- புதிய வேலை முயற்சிகளில் நன்மை உண்டு.
- வழக்கு விவகாரங்களில் நன்மை கிடைக்கும்.
- பெண்களுக்கு எல்லாவகையிலும் உற்சாகமான வாரம்.

### மகரம்

- எடுத்த காரியத்தில் வெற்றி உண்டு.
- எதிரிகள் ஓடிப் போவார்கள்.
- குழப்பங்கள் விலகும்.
- சிறு சிறு பிரச்னைகள் ஏற்படலாம்.
- பொறுமை அவசியம்.
- சுயதொழில் பண்றவங்களுக்கு ஆதாயம் உண்டு.
- கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு.
- பெண்களுக்குத் தங்கள் எண்ணம் நிறைவேறும்.

### கும்பம்

- எடுத்த காரியம் திட்டமிட்டபடி நிறைவேறும்.
- இதுவரை தாமதமாகிவந்த காரியங்கள் இப்போது முடியும்.
- எதிர்பாராத பயணம் உண்டு.
- புதிய வேலை முயற்சிகளில் நன்மை உண்டு.
- சிலருக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் கிடைக்கும்.
- எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும்.
- கலைத்துறையைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ், பாராட்டு கிடைக்கும்.

### மீனம்

- தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும்.
- புதியவர்கள் அறிமுகம் கிடைக்கும். அவர்களால் நன்மை விளையும்.
- சிறு சிறு பிரச்னைகள் ஏற்பட்டு விலகும்.
- செய்யும் வேலையில் விழிப்புடன் இருத்தல் அவசியம்.
- பேச்சில், நிதானமும், கனிவும் அவசியம்.
- செலவு கட்டுக்கடங்காது.
- குடும்பத்தில் கருத்து வேறுபாடு ஏற்படலாம் என்பதால் வீண் விவாதங்களைத் தவிர்த்து விடுங்கள்.



**கல்கி**

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இண்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

**Bharathan Publications Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

-நிஜமான குட்டிக்கதை



# உற்சாகமாய் ஒற்றைக் காலில்..!

சினிமாவில் ஒரு ஃபிரேமிலாவது முகத்தைக் காட்டிவிட மாட்டோமா என்று ஒற்றைக் காலில் நிற்கும் இளைஞர்களுக்கு மத்தியில், ஒற்றைக் காலுடன் சினிமாவுக்குள் நுழைந்திருக்கிறார் இருபது வயது குட்டி. விதவிதமான ஹீரோக்களைச் சந்தித்த தமிழ் சினிமாவுக்கு, இந்த ஹீரோ முற்றிலும் மாறுபட்டவர். 'நாழிகை பார்த்து நட்சத்திரம் பார்த்து, வலது காலை எடுத்து வைத்து வா!' என்று சென்டிமெண்ட் பார்க்கிற தமிழ் சினிமாவில், குட்டியைப் பார்த்து, ''இடது காலை எடுத்து வைத்து வா!'' என்று இருகரம் நீட்டி அழைத்து அவரை அறிமுகப்படுத்துகிறார், தயாரிப்பாளர், இயக்குனர் கேயார்.

நான்காண்டுகளுக்கு முன் விபத்தொன்றில் வலது காலை இழந்த குட்டி, ஒற்றைக் காலில் விடாமல் இரண்டு மணி நேரம் நடனமாடி அசத்துகிறார். உள்நாடு, வெளிநாடு என்று இதுவரை ஐயாயிரம் மேடைகள் ஏறிய குட்டியின் கதை, தன்னம்பிக்கை நிரம்பிக் கிடக்கும் பெரிய கதை. இதைப் படிக்கிற ஒவ்வொரு இதயத்திலும் விழும் உற்சாக விதை. இனி குட்டி பேசுவதைக் கேளுங்கள்!



"எனது சொந்த ஊர் கும்பகோணம். அங்கே பிறந்து, சென்னையில் வளர்ந்தேன். அப்பா கீ போர்டு பிளேயர். அண்ணன் சினிமா டான்சர். வடபழனி கோவிலை ஒட்டிய மசூதி தெருவில்தான் எங்கள் வீடு. அப்பா என்னை இசையின் பக்கம் திருப்ப நினைத்தார். ஆனால்



• இயக்குநர் சேயாருடன்...

இசையில் இருந்த தாளம் என்னை ஈர்த்தது. அண்ணன் வீட்டில் தினசரி டான்ஸ் பயிற்சி செய்வதைப் பார்த்து, நானும் மெல்ல மெல்ல சுயமாகவே டான்ஸ் பழகினேன். மேடைகளிலும் குழுவோடு ஆடத் தொடங்கினேன். அங்கே கிடைத்த கைதட்டல்கள் தந்த உற்சாகம், வெற்றிகரமான டான்சராக வேண்டும் என்ற லட்சியத்தை எனக்குள் எரியச் செய்தது. இந்த நேரத்தில்தான் எதிர்பாராத விபத்து. நான் கண் விழித்துப் பார்த்தபோது எனது வலது காலை, தொடை வரை வெட்டி எடுத்திருந்தார்கள். பதினைந்து வயதில் காலை இழந்தபோது, மனதுக்குள் நடுக்கம். குடும்பத்திற்கு பாரமாகி விடுவோமோ என்ற கலக்கம். ஆனால் வீட்டில் என்னை யாருமே புறக்கணிக்கவில்லை. மாறாக, என்னை அதிகமாக கவனித்துக் கொண்டார்கள். ஒரு தவழும் குழந்தையாக என்னை நடத்தியபோது சங்கடப்பட்டேன். இன்னொரு பக்கம், எப்போதும் என்னைச் சுற்றிச் சூழ்ந்திருக்கும் நண்பர்கள் யாரும் என்னை நெருங்கி வரவில்லை. என்னை வந்து பார்த்தால், எங்கே நான் வருத்தப்படுவேனோ என்று ஒதுங்கிப் போனார்கள். இதற்கெல்லாம் நான் கலங்கிவிடவில்லை. வானொலியிலும், தொலைக்காட்சியிலும் துள்ளி ஆட வைக்கும் பாட்டுக்களைக் கேட்கிறபோதும், பார்க்கிறபோதும், எழுந்து ஆட வேண்டும் என்று கால்கள் துடிக்கும். ஏன் செயற்கைக் கால் பொருத்தக் கூடாது என்று முயற்சித்தபோது, முழுத் தொடையும் எடுக்கப்பட்டு விட்டதால், அதற்கு வாய்ப்பில்லை என்றார்கள். இதைக் கேட்டு வீட்டில் எல்லோரும் இடிந்து போனார்கள். ஆனால் நான் அசைந்து கொடுக்கவில்லை. ஒற்றைக் காலில் ஏன் ஆடிப் பழகக் கூடாது என்று எண்ண ஆரம்பித்தேன். எண்ணத்திற்கு மெல்ல மெல்ல செயல் வடிவம் கொடுக்கத் தொடங்கினேன். ஒவ்வொரு முறையும் விழுவதும், அடிபடுவதும், இரத்தம் சிந்துவதுமாகத் தொடர்ந்த இரண்டாண்டு முயற்சியின் இறுதியில், ஒற்றைக்காலிலேயே ஆடும் திறமை கை வந்தபோது புதிதாய்ப் பிறந்துவிட்ட உணர்வு.





"நண்பர்கள் மீண்டும் வரத் தொடங்கினார்கள். வீட்டில் எல்லோரது அழுகையும் நின்று போனது. எங்கள் தெருவில் இருந்த பிள்ளையார் கோயிலில் விநாயகர் சதுர்த்தி விழாவுக்கு நண்பர்கள் ஏற்

• 'டான்ஸர்' படத்தில்

பாடு செய்திருந்தார்கள். மேடையில் இசை நடன நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. நான் கொஞ்சமும் எதிர்பார்க்காத நேரத்தில், என்னைச் சூழ்ந்துகொண்ட நண்பர்கள், அப்படியே குண்டுக்கட்டாகத் தூக்கிப் போய் மேடையில் விட்டு, "நீ இப்போ ஆடியே ஆகணும்" என்றார்கள். எனக்குக் கொஞ்சம் அதிர்ச்சி, நிறைய மகிழ்ச்சி. என்னை மறந்து ஒற்றைக் காலில் ஆடிக் கொண்டிருந்தேன். கைதட்டலும் விசிலும் காதைப் பிளக்க, எனது வாழ்க்கையில் எதிர்பாராத திருப்புமுனை.

''அதன் பிறகு எண்ணற்ற மேடை நிகழ்ச்சிகள். கடந்த இரண்டாயிரமாவது ஆண்டு சென்னை காமராஜர் அரங்கில், காஞ்சிபுரம் ஸ்ரீ காமாட்சி சில்க்ஸ் நிறுவனம், ஊனமுற்றவர்களுக்கான கலை நிகழ்ச்சிகளை நடத்தியது. அந்த விழாவுக்கு சிறப்பு விருந்தினராக வந்திருந்தார் கேயார். எனது நடனத்தைப் பார்த்த அவர், மேடைக்கு வந்து, ''எனது அடுத்த படத்தின் கதாநாயகன் குட்டிதான்'' என்று அறிவித்தார். அரங்கமே கை தட்டி ஆர்ப்பரித்தது. என்னை நானே கிள்ளிப் பார்த்துக் கொண்டேன்.

''கடந்த இரண்டு வருடமாக உழைத்து, எனது நிஜ வாழ்க்கையை ஒட்டிய யதார்த்தமான கதையை, கேயார் உருவாக்கி இருக்கிறார். நடன நிகழ்ச்சிகள் மூலம் எனக்கு எவ்வளவு வருமானம் வருமோ, அதை ஒவ்வொரு வாரமும் ஊதியமாகக் கொடுத்து விடுகிற அந்தப் பிதாமகன், நான் குதிரையேற்றம், மோட்டார் சைக்கிளிங், சண்டைப் பயிற்சி போன்றவற்றைப் பழக வேண்டும் என்று ஏற்பாடு செய்தார். அவர் என் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை எண்ணி, ஆறுமாத காலத்தில் இந்தப் பயிற்சிகளை வெற்றிகரமாக முடித்துவிட்டு, முதல் கட்டப் படப்பிடிப்பிலும் நடித்துத் திரும்பிவிட்டேன்.

''ஒரு மனிதனின் வெற்றிக்கு உடல் ஊனம் ஒரு தடையல்ல என்பதுதான் கதையின் மையம். இரண்டு கால்களும் உள்ள ஹீரோக்கள் செய்வதை, நான் இந்த ஒற்றைக் காலுடன் 'டான்ஸர்' படத்தில் செய்து வருகிறேன். உழைப்பின் மறுபெயர் அதிர்ஷ்டம் என்பதை உணர்ந்திருக்கிறேன். எனக்கு யாரும் அனுதாபம் காட்டுவதை விரும்பவில்லை. கேயார் போல அரவணைக்கிற உள்ளங்கள்தான் வேண்டும். பெரிய ஹீரோக்களுக்கு இருக்கிற வரவேற்பை, தமிழ்மக்கள் எனது படத்திற்கும் தருவார்கள் என்று நம்புகிறேன். எனது நம்பிக்கை பொய்த்ததில்லை'' என்கிறார் உற்சாகக் குட்டி.

- விஷுவல்தாசன்

அட்டை, படங்கள்: ஸ்ரீஹரி மற்றும் 'டான்ஸர்' படத்திலிருந்து

''சீரியல் நடிகைக்கு சம்பளம் பாக்கி வைக்காதீங்க ஸார்!''

''ஏன்?''

''உணர்ச்சிகரமான காட்சியில கண்ணீர் பாக்கி வச்சுடறாங்க!''

- அம்பை தேவா





''அரசு ஒயின்ஷாப்' திறப்பு விழாவிற்கு வந்த தலைவரிடம், குழந்தைகளுக்குப் பெயர் வைக்கச் சொன்னது தப்பாயிடுச்சுங்க...''

''எப்படி?''

''பையனுக்கு 'நெப்போலியன்'னும், பொண்ணுக்கு 'கல்யாணி'ன்னும் பேர் வச்சுட்டார்...!''

- புதூர் கோவலன்

*Wish you all a happy & prosperous New Year 2004*

ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை

**P.R. JEWELLERY**

GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES

102, USMAN ROAD, T. NAGAR, CHENNAI - 600 017.

PH: 2434 4442, 2432 7764 TUESDAY HOLIDAY

**P.R.** ஜுவல்லரியில் ராசிக்கல் மோதிரம் வாங்கி அணிந்து பயன்பெறுங்கள். ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ. 400/-

(10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)

# இனிய பொங்கல் வாழ்த்துக்கள்!

ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை **P.R.**ஜுவல்லரி. எங்கு ஜோதிடம் பார்த்தாலும் எங்களிடம் வந்து ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ. 400/-க்கு வாங்கிப் பயன்பெறுங்கள். உடனடியாகக் கிடைக்கும். கல் ஒரிஜினல் என முழு உத்திரவாதம் தருகிறோம். தங்கத்தில் 2 கிராம் முதல் 8 கிராம் வரை ரூ. 1800/- முதல் ரூ. 5000-ம் வரை உடனடியாகக் கிடைக்கும். தபால் எழுதினால் முழு விவர பாம்லட் இலவசமாக அனுப்புகிறோம்.

குறிப்பு : ராஜ் டீ.வி.யில் தினசரி காலை 6.55 மணிக்கு சிறப்புப் பேட்டியைப் பார்க்கவும்.

## ரிமோட்

# புரூஸ்லீக்கு அவமானம்!



புத்தாண்டு டீவி நிகழ்ச்சிகளில் மன்மத ரோசாவும், மன்மத ராசாவும் ஹைலைட்ஸ்! ஜெயா டீவி, 'காலை மலரி'ல் தனுஷ் பேட்டியையும், பத்து மணிக்கு சாயாசிங் பேட்டியையும் ஒளிபரப்பியது. "மன்மதராசா சூப்பர்ஹிட் ஆகும் என்று நினைக்கவில்லை. ஐ ஜஸ்ட் கான்ட் பிலீவ்" என்று கண்களை விரித்து ஆச்சரியத்தில் மாய்ந்து போனார் சாயா. அடுத்த ஸ்கோர் வாங்கியது 'எல்லாம் ஸ்ரீநிவாஸ்' நிகழ்ச்சி. வெகு நிறைவு!



குறைவாகவே பேட்டி அளிப்பவராக இருக்கட்டும். விஜய் பல வருடங்களுக்கு முன்பே திரையில் அறிமுகமானவர். இன்று முன்னணி நடிகர். அவரிடம் தொடர்ந்து 'உங்க முதல்பட அனுபவம்' என்பதிலிருந்து, 'சிறப்பு வணக்கம் தமிழகத்தில்' ரமேஷ் பிரபா உப்புசப்பில்லாத கேள்விகளையே கேட்க, விஜய்யும் எதிர்பார்த்த பதில்களையே குறள் அளவில் கூற, நிகழ்ச்சி டல்லடித்தது.

இன்னும் வெற்றி மமதை தனுஷின் தலைக்குள் ஏறிவிடவில்லை. 'ஃபைட்டிங்கில் உங்களை புரூஸ் லீயோடு ஒப்பிடுகிறார்களே' என்ற கேள்விக்கு, "ஐயோ, அது அவருக்குச் செய்கிற அவமானம். இப்படியெல்லாம் ஒப்பிடுவாங்களோன்னு தெரிஞ்சுக்கிட்டுதான் அவர் செத்துப் போயிட்டாரோ என்னவோ. எங்களுக்குள் கொஞ்சம் உருவ ஒற்றுமை இருக்கிறது, அவ்வளவுதான்". சன் டீவியின் இந்தப் பேட்டியின் தொகுப்பு,

குறிப்பிடும்படி அமைந்திருந்தது.

"மோனலிஷா என் மோனலிசா' படத்தில் எனக்கு டு பீஸ் உடை. எனக்கு அதை அணிந்து நடிக்கக் கூச்சமாக இருந்தது. இருபத்தியொரு டேக் வாங்கியது. இயக்குனர் ராஜேந்தருக்குக் கடும் கோபம். 'என்னம்மா, என் ஃபிலிமை யெல்லாம் வேஸ்ட்டாக்குறியே' என்றார். அவர் மனைவி உஷா மட்டும் கருணையோடு, இயக்குனர் மற்றும் ஒளிப்பதிவாளரைத் தவிர, எல்லோரையும் வெளியே போகவைத்துவிட்டு ஷூட் பண்ண வைத்தார். அப்போதும் நடுக்கம்தான். அங்கே கொஞ்சம் பேர்தான் என்றாலும், திரையில் வெளியாகும்போது நிறையப் பேர் பார்ப்பார்களே!" என்ற மும்தாஜிடம் (ஆம்!) மமதி அப்படி ஒரு கேள்வியைக் கேட்டிருக்க வேண்டாம். "அதற்குப் பிறகு அதுபோன்ற சிக்கல்களை எப்படிச் சமாளித்தீர்கள்?" சட்டென மும்தாஜ், "அப்படிப் பட்ட உடை என்றால் வேண்டாம் என்று முதலிலேயே கூறி விடுவேன்" என்றார் கொஞ்சம் கூட அசராமல்.

"இரண்டு நிமிடம்தான் பேச வேண்டும். தனுஷைப் பற்றி எதுவும் பேசக்கூடாது. நமது பழைய நட்பான நினைவுகளைத்தான் நினைவு கூர வேண்டும் என்று கஸ்தூரி ராஜா என்னிடம் நிபந்தனை இட்டார்'' என்றார் குஷ்பூ.



* 'எல்லாம் ஸ்ரீநிவாஸ்' நிகழ்ச்சி

ஆனால் (அந்நாளில் இன்றைய மன்மதராசாவுக்கு இணையான 'ஒத்தைரூபா தாரேன்' பாட்டுக்கு நடனமாடிய) குஷ்பூ, தனுஷுக்கு வாழ்த்துக்களைக் கூறிவிட்டு இறங்கிவிட்டார். தனுஷின் முதலிரண்டு படங்களின் வெற்றிவிழாவான இது, கஸ்தூரி ராஜாவின் குடும்ப விழாவாக இருந்தது. இயக்குனர் செல்வராகவன் சென்ஸிபிளாக பேசியது குறிப்பிடத்தக்கது.

2004ன் கனவுக்கன்னி யாராக இருக்கக் கூடும் என்று நேயர்களிடம் வோட்டுப் போடச் சொன்னார் விஜயசாரதி. ஜோதிகா, த்ரிஷா, சிநேகா என்று எல்லோரும் உற்சாகமாய்க் கூக்குரல் எழுப்பிய போது, இரண்டே இரண்டு இளைஞர்கள், ஷாலினி, சிம்ரன் என்று அழுத்தந்திருத்தமாகச் சொன்னார்கள்! அஜீத், தீபக் கோபப்படாமல் இருப்பார்களாக!



- ஆதர்ஷ்



# அரசு நிலத்தை

தி.மு.க. ஆட்சியில் 1996 - 2001ல் நடந்ததாகச் சொல்லப்படும் ஊழல்களையும், முறைகேடுகளையும் தோண்டியெடுத்து வழக்குப் போட்டு வருகிறது கண்காணிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறை. கலைஞர் ஆட்சியில் அமைச்சர்களாக இருந்த பெரும்பாலோர் மீது, சொத்துக் குவிப்பு வழக்குகள் போடப்பட்டுள்ளன. இந்த வழக்குகள் தொடர்பாகவும், புது வழக்குகளைப் பதிவு செய்வது பற்றியும், லஞ்ச ஒழிப்பு போலீஸ் ஓவர் டைம் செய்து வருகிறது. முதல்வர் ஜெயலலிதா மாதம் ஒரு முறை ஆய்வுக் கூட்டம் நடத்தி, விசாரணை மற்றும் வழக்குகளின் போக்கைத் துரிதப்படுத்தி வருகிறார். இந்த வகையில் இப்போது பரபரப்பாகப் பேசப்படுவது அரசு நிலத்தை, முன்னாள் அமைச்சர் பொன்முடி அபகரித்தார் என்ற குற்றச்சாட்டுதான். இது பற்றி லஞ்ச ஒழிப்பு போலீஸ் வட்டாரத்தை தட்டிப் பார்த்தோம்.

"சைதாப்பேட்டை நீதிமன்றங்களின் பின்னால் இருக்கும் குடியிருப்புப் பகுதி ஸ்ரீநகர் காலனி. இங்கு நார்த் அவென்யூவில் கதவு எண் 108ல் பெரிய பங்களா ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. பங்களா அமைந்துள்ள மனையின் பரப்பளவு சுமார் ஒன்றரை கிரவுண்ட். இந்த மனை பொன்முடியின் மாமியார் சரஸ்வதியின் பெயரில் வாங்கப்பட்டிருக்கிறது. இந்த மனை வாங்கல் விவகாரம் நேர்மையான முறையில் நடக்கவில்லை. அரசுக்குச் சொந்தமான நிலம், போலி ஆவணங்கள் தயார் செய்யப்பட்டு, மனை கைமாறியிருக்கிறது" என்கிறார்கள் லஞ்ச ஒழிப்பு போலீஸ் அதிகாரிகள்.

பொன்முடியின் மாமியார் வாங்கியுள்ள மனைப் பகுதி நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டப்படி, அரசு கையகப்படுத்திய நிலம் என்கிறார்கள். இந்த நிலத்தை, சமீபத்தில் மறைந்த பிரபல டாக்டர் பி. ராமமூர்த்தியிடம் இருந்து 30.4.81ல் அரசு எடுத்துக் கொண்டுள்ளது. ஆனால் இந்த மனைப்பகுதி கிராம நத்தம் என்றும், தாம் அதை அனுபவித்து வருவதாக, 'கண்ணப்பன்' என்பவர் பெயரில் போலி ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளதாகவும் சொல்கிறது போலீஸ். இந்த 'கண்ணப்பன்', சரஸ்வதிக்கு விற்றதாக அடையார் துணை பதிவு அலுவலகத்தில், 1998 மற்றும் 1999ம் வருடங்களில் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. பத்திரங்களில் சாட்சிக் கையெழுத்துக்களை வட்டத் திமுக.வினர் போட்டிருக்கிறார்களாம். கண்ணப்பன் என்ற நபரே கிடையாது. இந்த விவகாரத்தில் முறைகேடுகளும், தில்லுமுல்லுகளும் நடந்திருக்கின்றன. பொன்முடி, அமைச்சர் என்ற

முறையில் செல்வாக்கைப் பயன்படுத்தி, அரசு நிலத்தை அபகரிக்கும் இந்தத் தில்லு முல்லுக்குத் துணை போயிருக்கிறார். அதிகாரத்தில் உள்ளவர்கள் துணையில்லாமல் இந்த ஃபோர்ஜரி வேலைகள் நடக்க வாய்ப்பில்லை" என்று சொல்கிறார் ஒரு போலீஸ் அதிகாரி.

இப்போது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, தீவிர விசாரணையை நடத்தி வரும் போலீஸ், இந்த விவகாரத்தில் பொன்முடியையும் விசாரித்துள்ளது. சர்ச்சைக்குரிய இந்த மனைப் பகுதியில் கட்டடம் கட்ட, 15.12.2002 அன்று ஸ்டாலின் மேயராக இருந்த போது மாநகராட்சியின் அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. "சர்ச்சைக்குரிய இந்த நிலத்தில் கட்டடம் கட்ட எப்படி அனுமதி கொடுக்கப்பட்டது?" என்று மாநகராட்சி அதிகாரிகளிடம் கேட்ட போது, "கொடுக்கின்ற ஆவணங்களை வைத்து அனுமதி கொடுக்கிறோம். அந்த ஆவணங்கள் போலியா, உண்மையா என்று ஆராய்வது எங்கள் வேலையல்ல" என்கிறார்கள்.

இந்த குறிப்பிட்ட மனைப் பகுதியின் தற்போதைய மதிப்பு எழுபது லட்ச ரூபாய் இருக்குமாம்.

இந்தக் குற்றச் சாட்டு பற்றி பொன்முடி என்ன சொல்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ள அவரைத் தொடர்பு கொண்டோம். "என் மாமியார் வாங்கிய நிலம் இது. என்னை இந்த விவகாரத்தில் தொடர்பு படுத்துவது அரசியல் பழிவாங்கல்" என்று முடித்துக் கொள்ள இருந்தவரை, நமது கேள்விகளால் தொடரச் செய்தோம். "என்னுடைய மாமியார் வசதியுள்ளவர். நில புலன்களுக்குச் சொந்தக்காரர். ஃபோர்ஜரி செய்து நிலம் வாங்க வேண்டுமென்ற அவசியம் எங்கள் குடும்பத்துக்குக் கிடையாது. மிக முக்கியமாக, அமைச்சராக இருந்த நான் சர்ச்சைக்குரிய நில விவகாரத்தில் எப்படித் துணை போக முடியும்? கலைஞர் தலைமையின் கீழ் இருந்த அந்த ஐந்து வருடங்களும் நெருப்பு வளையத்துக்குள் இருப்பது போல் மிகுந்த கவனத்துடனும், விழிப்புடனும் இருந்தோம்.

லஞ்ச ஒழிப்பு போலீஸ் சொல்லும் நிலத்தின் சர்வே நம்பரும், என் மாமியார் வாங்கியுள்ள மனையின் சர்வே நம்பரும் வேறு வேறு. "கடந்த தீபாவளிக்கு ஒரு வாரம் முன்பு அரசு நிலத்தில் வீடு கட்டியுள்ளீர்கள். ஒரு வாரத்தில் உங்கள் தரப்பு பதில் தேவை. இல்லையேல் வீடு இடிக்கப்படும்" என்று மாநகராட்சியிலிருந்து நோட்டீஸ் கொடுத்தார்கள். உடனே என் மாமியார், வழக்கறிஞர் மூலமாக, மாநகராட்சி சொல்லும் சர்வே நம்பரையும், மனை அமைந்துள்ள சர்வே நம்பரையும் குறிப்பிட்டு, வித்தியாசம் இருப்பதை விளக்கி பதிலளித்தார். ஆனால் இந்த பதிலைப் பெற்றுக் கொண்டதாகவே காட்டிக் கொள்ளாமல், தீபாவளியன்று இடிக்க வந்து விட்டார்கள். உடனே நீதிமன்றத்துக்குச் சென்று தடை வாங்கினோம். இதுதான் இந்த விவகாரத்தில் தற்போதைய நிலை. மாநகராட்சி இப்போது விழித்துக் கொண்டிருக்கிறது. மற்றபடி 'கண்ணப்பன்' என்ற இல்லாத நபரின் பெயரில் போலி ஆவணங்கள் தயார் செய்யப்பட்டது, என்று குற்றம் சாட்டப்படுவது குறித்து நான் பதில் சொல்ல விரும்பவில்லை. வாங்கப்பட்டது அரசுக்குச் சொந்தமான நிலம் அல்ல என்ற நிலையில், இது போன்ற குற்றச்சாட்டுக்களுக்குக் கொஞ்சமும் அடிப்படையே இல்லை. என் அரசியல் செயல்பாடுகளை முடக்க வேண்டும் என்று பொய் வழக்கு போடுகிறார்கள். கடந்த இரு வருடங்களில் ஆறு வழக்குகள். எதிலும் குற்றப் பத்திரிகை எனக்குக் கொடுக்கப்படவில்லை. அதிலும் குறிப்பாக, விழுப்புரம் தி.மு.க. மாநாட்டை எழுச்சியாக நடத்தி முடித்த பின், எங்கள்மீது வழக்கு போடுவதென்பது முழு வேகத்துடன் தொடர்கிறது" என்கிறார் பொன்முடி.

# அபகரித்தாரா பொன்முடி?

- கௌசி

படம் : மீடியா ராமு







# விடியாத புகைமூட்டம்!

ஓவிய முகாம்களில் ஒரு சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது புகழேந்தியின் 'புகைமூட்டம்' கண்காட்சி.

"ஒவ்வொருவருக்கும் சமூகப் பொறுப்பு இருக்கிறது. கலை இலக்கிய படைப்பாளிகள், படைப்புகளாக அதை வெளிப்படுத்துகிறார்கள். எனது ஓவியங்களும் அதைத்தான் செய்கின்றன. சமூக நிகழ்வுகளை ஓவியங்களாகச் சொல்வதன் மூலம் மக்களைச் சிந்திக்கத் தூண்டுகிறேன்'' என்கிறார் புகழேந்தி.

குஜராத் மதக் கலவரம், பொடா போன்ற அடக்குமுறைச் சட்டங்கள், அமெரிக்க ஆதிக்கம், ஈராக் துயரம், காவிரி வறட்சி, விவசாயிகளின் வாழ்க்கை என்று அடுக்கடுக்காக துயரங்களையும் துன்பங்களையும், ஆக்ரோஷமாக வெளிப்படுத்தியிருக்கிறது இவரது ஓவியங்கள்.

"உலகம் முழுவதும் ஒரு தெளிவற்ற புகைமூட்டம் நிலவி வருகிறது. இந்த மூட்டம் விலக வேண்டும்' என்கிற ஆதங்கத்தைத்தான் எனது படைப்புகள் வெளிப்படுத்துகின்றன'' என்று சொல்லும் புகழேந்தியின் இந்த ஓவியங்கள், கண்காட்சிக்காக ஆஸ்திரேலியாவுக்குச் செல்லப் போகிறதாம்!

• அப்பு




# பொலிடிகல் புற்றுநோய்!

தேர்தல் வேட்பாளர்கள் தங்கள் சொத்துக் கணக்கைச் சமர்ப்பிக்க வேண்டும் ; கிரிமினல் குற்ற வழக்கைச் சந்திப்பவர்கள் தேர்தலில் நிற்கக் கூடாது - இவ்விரு நடைமுறைகளைச் சட்டமாக்க நாடாளுமன்றத்தில் மசோதா கொண்டு வரப்பட்டபோது, கட்சிப் பாகுபாடு இன்றி, அதை அத்தனைப் பேரும் எதிர்த்து வாக்களித்தனர். நாடே அதிர்ந்து போயிற்று. மத்திய தேர்தல் கமிஷன் உச்சநீதிமன்றத்தில் முறையிட்டு, வேட்பாளர்களின் சொத்துவிவரம், கிரிமினல் பின்னணி, முதலியவற்றை அறிந்து கொள்ளும் உரிமை வாக்காளருக்கு உண்டு என்பதை நிலைநாட்ட வேண்டியிருந்தது.

நமது அரசியல்வாதிகள் நேர்மையாக நடந்து கொள்ளவோ, நேர்மையை ஆதரிக்கவோ விரும்பவில்லை என்பதையே இச்சம்பவம் காட்டுகிறது. இந்நிலையில் தலைமைத் தேர்தல் ஆணையர் லிங்டோ, அரசியல்வாதிகளைப் புற்றுநோய்க்கு ஒப்பிட்டுப் பேசியது ஒன்றும் மிகையாகிவிடாது. ஆனால், ஜனநாயக அமைப்பைக் கட்டிக் காத்து, அதில் முழு நம்பிக்கை கொள்ள வேண்டிய ஒரு நபர், மீடியாவிடம் - அதுவும் அயல்நாட்டுத் தொலைக்காட்சியில், தமது தேசத்தையும், அதன் ஜனநாயக அமைப்பையும் விட்டுக் கொடுத்து விமர்சிப்பது வரவேற்கத் தக்கதல்ல.

பத்திரிகைகள், தொலைக்காட்சிகளில் பேட்டி காணப்படுவோர், பரபரப்பான பதில்களை வரவழைக்கும் கேள்விக்கணைகளால்




கல்கி

2004 ஜனவரி 11
சுபானு மார்கழி 27
மலர் : 62
இதழ் : 24



தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




துளைக்கப்படுவது சகஜம். மூத்த, அனுபவப்பட்ட அதிகாரியாக இருக்கக் கூடிய ஒருவர், இத்தகைய கேள்விகளை உணர்ச்சிவசப்படாமல் சந்தித்து, பொறுப்புடன் பதில் சொல்வது அவருடைய பணிக்கால சவால்களுள் ஒன்று.

இன்றைய இந்தியாவில், தேர்தல் கமிஷன் தலைவருக்கு வேறு பல பணிகளும் காத்திருக்கின்றன :


தேர்தல்களை அறிவித்து முறைப்படி நடத்துவது பெரிய காரியம் இல்லை. ஆனால் தேர்தல் பிரசாரத்திலும் வாக்களிப்பிலும், ஜனநாயக விரோதப் போக்குகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை ; தகிடுதத்தங்களையும் தடுத்து நிறுத்த முடியவில்லை.

ஜாதி - மத அடிப்படையில் வாக்கு கேட்பது ; வேட்பாளர்களையே அந்த அடிப்படையில் தேர்ந்தெடுப்பது ; ஆளும் கட்சியாயின் அரசு இயந்திரத்தைப் பிரசாரத்துக்கு மறைமுகமாகப் பயன்படுத்துவது, தேர்தல் நெருங்க, அரசுச் செலவில் விளம்பரங்கள் வெளியிடுவது, நலத் திட்டங்களைத் தேர்தலையொட்டி அறிவிப்பது, நிறைவேற்றுவது - இவையும், இவை போன்ற செயல்களும் ஜனநாயக விரோதம்.

தேர்தல் தினத்தில் கள்ளவோட்டு, கட்டாய வோட்டு, லஞ்சம் (அல்லது பொருள்) கொடுத்துப் பெறும் வோட்டு, என்று குறுக்கு வழியிலும் திருட்டு வழியிலும், வெற்றி பெற முயற்சி செய்வது குற்றம்.

இந்தச் சவால்களைத் தேர்தல் நெருங்கும்போது மட்டுமே கவனித்து நடவடிக்கை எடுக்க முற்படுவதற்குப் பதிலாக, நன்னடைத்தை விதிகள் எனத் தற்போது இருக்கும் நெறிமுறைகளைச் சட்டமாக்கவும், தேர்தலை நேர்மையாக நடத்தும் வகையில் அர்த்தமுள்ள தேர்தல் சீர்திருத்தங்களைக் கொண்டு வரவும், தேர்தல் கமிஷன் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

இதற்கான புதிய மசோதாக்களோ சட்டத்திருத்தங்களோ, நாடாளுமன்றத்தில்தான் நிறைவேற்றப்பட வேண்டும். ஆனால், இன்றைய அரசியல்வாதிகள் யாருமே இதற்கான முயற்சியோ முனைப்போ கொள்ளமாட்டார்கள். சொத்துக் கணக்கை முன் கூட்டியே சமர்ப்பிக்கும் விதிமுறைக்காக தேர்தல் கமிஷன் உச்சநீதிமன்றத்தை அணுகியதுபோல், இதர




தேர்தல் சீர்திருத்தங்களுக்கும் உச்சநீதிமன்றத்தை அணுகி, அதன் ஆணையைப் பெற்று, நாடாளுமன்றத்தை ஒரு நிர்பந்தத்தில் ஆழ்த்தலாம்.

குறிப்பாக, தேர்தல் செலவுகளுக்கான உச்சவரம்பு, பிரசார விதிமுறைகள், ஒருவர் தேர்தலில் நிற்பதற்கான அடிப்படைத் தகுதிகள் போன்ற விஷயங்களை மறுபரிசீலனை செய்து, கடந்த ஐம்பதாண்டுக்கும் மேற்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் திருத்தி அமைக்கலாம்.

இதனினும் முக்கியம், வழிகாட்டு நெறிகள் அல்லது நன்னடத்தை விதிகள் என்ற பிரிவில் வருவனவற்றைச் சட்டமாக்குவதற்கான முயற்சிகளில் தீவிரமாக இறங்குவது.

நெறிமுறைகள் சட்டமாகாது என உச்ச நீதிமன்றமே தீர்ப்பளித்திருப்பதால், இன்றையச் சூழலில் அனைத்து அரசியல்வாதிகளும், இந்தத் தீர்ப்பில் புகலிடம் தேடிக் கொண்டு தவறுகளைத் தொடர்வார்கள். இதை மாற்றியாக வேண்டும்.

இந்த மாற்றங்களையெல்லாம் மக்கள் விரும்புவார்களா? மக்கள் கேட்கிறார்களா? என்று ஆராய்வதற்கான நேரமும் அவசியமும் இன்று இல்லை. பெரும்பான்மை மக்கள், கல்வி அறிவு இல்லாத பாமரர்கள். இவர்கள் அரசியல்வாதிகளால் ஏய்க்கப்படுகிறார்கள். சிந்திக்கும் திறனும் அறிவாற்றலும் உடைய மத்தியதர வர்க்கமோ, அரசியல்வாதிகளிடம் நம்பிக்கை இழந்து, ராமனாண்டால் என்ன, ராவணனாண்டால் என்ன, என்கிற நிலைக்கு வந்துவிட்டது.

இது நமது ஜனநாயக அமைப்புக்குப் பேரபாயம். உண்மையில், தட்டிக் கேட்க ஆளில்லாத இந்த மந்த நிலைதான், அரசியல்வாதிகள் துளிர்த்துப் போய்த் தவறுகளை இழைக்கத் துணிவு தருகிறது. தட்டிக் கேட்கும் சிறுபான்மையை அலட்சியப்படுத்தித் தவறைத் தொடரும்படிச் செய்கிறது.

இதற்கெல்லாம் முடிவு ஏற்பட்டு, தேர்தல்களில் தரமான நபர்கள் வேட்பாளர்களாக நிற்பதற்கும், நேர்மையான முறையில் தேர்தல் நடப்பதற்கும், தேர்தல் கமிஷன் வழிகாண வேண்டும்.

புற்றுநோய்க்கு மருந்தில்லை என்று ஒதுங்கியிருந்து புலம்புவதைக் காட்டிலும், 'மருந்தைக் கண்டுபிடிக்கிறேன் பார்' என்று களத்தில் குதிப்பது பலன்தரும். ●

# பஞ்ச துவாரகா யாத்ரா

Somnath



Dwaraka



## GUJARAT TOURISM

Pancha Dwarka Yatra

*(A Govt. of Gujarat Undertaking)*

Tourism Complex, Wallajah Road, Chennai - 600 002.

Tel No. 25366613 Res : 24794159 E-mail : gujarattourism@vsnl.net

**12 நாள் கொண்ட புனித யாத்ராவில்** பார்க்கும் இடங்கள் - தாகோர் துவாரகா, துவாரகா, பெய்ட்துவாரகா, கங்கரோலி, சோம்நாத் , ஜோதிர்லிங்கம், உதயப்பூர் மற்றும் இதர இடங்கள். கட்டணம் **ரூ.7550/-** (AC டிரான்ஸ்போர்ட்). (கைடு சர்வீஸ், சிறப்பு வழிபாடு வசதிகள் உட்பட) புறப்படும் தேதி : 26.01.04

**16 நாள் கொண்ட பஞ்சதுவாரகா யாத்திரையில்** 12 நாட்கள் யாத்திரையில் உள்ள இடங்கள் மற்றும் பரோடா, பாவாகாட், சித்துபூர் (மாத்ருகயா), அம்பாஜி, மௌண்ட்அபு, புஷ்கர். கட்டணம் ரூ.10,750/- (AC டிரான்ஸ்போர்ட்) தேதி : 20.03.04 & 19.04.04

சென்னை - அகமதாபாத் மற்றும் திரும்புதல் நவஜீவன் எக்ஸ்பிரஸ் II SL மூலம். அகமதாபாத் மற்றும் இதர இடங்கள் சுற்றிப் பார்க்க - குஜராத் சுற்றுலாத்துறை சொகுசு பேருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**இதர விவரங்களுக்கு Deputy Manager (Marketing) -ஐ மேலே குறிப்பிட்டுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்.**

Amar Tours, Salem : Ph.2416647 or Cell : 9842713222 ★ Sree Sudha Travels, Bangalore : Ph.6529289, 94481 19290 ★ Travel Times, Coimbatore Ph : 25391542



## ஆஹா! நெய் வாசம் மூக்கை துளைக்குதே!




**SENBAGAM GHEE**

செண்பகம் பிராண்ட்

சுத்தமான நெய்

Available in Tins , Cans & Pouches

15kg,5kg,2kg,1kg,1/2kg,200g,100g, 50g.

**SRI DHANALAKSHMI & CO**

**SENBAGAM** BRAND PURE **GHEE**

18, M.G. PUDUR I STREET,
TIRUPPUR-641 604.
PHONE : 0421-2213557
CELL : 98430 91557

நீங்கள் கேட்டவை - தராசு

# சூரியன் – தாமரை பிரிவு யாருக்கு லாபம்?

● ஆர். விஸ்வநாதன், சென்னை - 4

? 2003ம் ஆண்டு முடியும் தருணத்தில் தங்களை ஆனந்தப்பட, அதிர்ச்சியுறச் செய்த நிகழ்வுகளைக் கூற முடியுமா?

! ஆனந்தம் - இந்திய அணியின் ஆஸ்திரேலிய வெற்றி; அதிர்ச்சி - ஈரான் நில நடுக்கம்.

● சுறுசுறுப்புத் திலகம், சென்னை - 15

? 'அரசியல்வாதிகள் சமுதாயத்தின் புற்றுநோய் போன்றவர்கள், புற்றுநோய்க்கு இன்னும் சரியான மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை...' என்று விங்டோ சொல்லியிருப்பது குறித்து...?

! ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடிக்கப்படும் புற்று நோய்களுள் தொண்ணூறு சதவிகிதத்தைக் குணமாக்கிவிட முடியும். விழிப்புணர்வு மக்களிடம்தான் வேண்டும்.

● உமா பாலமுரளி, சென்னை - 92

? டிசம்பரில் இசைவிழா நடத்துவதற்குப் பதில் கோடையில் நடத்தினால் இன்னும் அதிகக் கூட்டம் வருமே...?

! டிசம்பரில் நடத்தக் காரணங்கள் : குளுகுளு சூழ்நிலை, மார்கழி, வழிபாட்டுக்கான மாதம்; கிறிஸ்துமஸ் விடுமுறையை முன்னிட்டு நிறையப் பேர் அயல்நாடுகளிலிருந்து வருவது. அது சரி, வருடத்தின் இதர நாட்களிலும் ஸ்ரீராம நவமி சீரீஸ், கோகுலாஷ்டமி சீரீஸ் என்று நடந்து கொண்டுதானே இருக்கு!

● ஆர். அப்துல் சலாம், திருச்சி - 21

? பா.ஜ.க.வுடனான கூட்டணி நீடிக்கும் என்று டாக்டர் ராமதாஸ் அறிவித்துள்ளாரே...?

! தேர்தல் வரையா, அல்லது அதற்கு அப்புறமும் நீடிக்குமான்னு சொல்லலை பார்த்தீங்களா..! டாக்டர், கட்டி பழுக்கும் போதுதான் கத்தியை எடுப்பார்.

● கே. கணபதி, சென்னை - 11 ❐


? அன்னியச் செலாவணி எக்கச்சக்கமாகக் குவிந்துவிட்டதால் இனி இந்தியா



• ...போட்டி!



• 'அவசரப்...



• 'பழுத்த' அனுபவம்!



• கோபத் தீர்ப்பு!

யாரிடமும் கடன் கேட்கத் தேவையில்லை என நிதியமைச்சர் கூறியிருப்பது நல்ல அறிகுறியா..?

! ஏற்கெனவே வாங்கியுள்ள ஏராள கடனுக்குத் தாராளமான வட்டி கொடுத்துக்கிட்டுத்தான் இருக்கோம். ஒண்ணு, இப்ப குவிஞ்சிருக்கற அன்னியச் செலாவணியை வைச்சு அந்தக் கடனை அடைக்கணும் அல்லது அதைவிட லாபகரமா முதலீடு செய்யணும். இரண்டுமில்லாம காலத்தைப் போக்கிக்கிட்டிருந்தா, குவிந்துள்ள அந்நியச் செலாவணியே பெரிய பாரமாகிப்போகும்.

● ஆர். ராமசுப்ரமணியர், திருவாரூர்

? நரசிம்மராவுடன் சந்திரா சாமியும் விடுதலையாகிவிட்டாரே? இனி அரசியலில் ஏதாவது மாற்றங்கள் நிகழுமா..?

! சரிதான்! நீங்க என்ன ஜாஃபர் ஷெரீஃப் கிட்ட திருநீறு வாங்கிட்டு வந்திங்களா? இப்படியொரு கேள்வி! சாமியைத் தேடி சாமியும், ரிடையர்மென்டைத் தேடி ராவும் போய்ச் சேர்ந்தாச்சு; மக்கள் வழக்கையும் அவங்களையும் மறந்து போயாச்சு. இனி காங்கிரஸ் சோனியாவைச் சுற்றித்தான்.

● வசீகரன், சென்னை

? நாற்பது தொகுதிகளையும் கைப்பற்றத் திட்டமிடும் 'ஜெ'வின் துணிச்சல் எப்படி...?

! இந்தத் தன்னம்பிக்கையை எதிரணியினர் குறைத்து மதிப்பிட்டுவிடக்கூடாது.

● ஜி. ஹரிபாலாஜி, வேம்படிதாளம்

? எனக்குப் போட்டி தனுஷ்தான் என்று கூறுகிறாரே சிம்பு...?

! "சபாஷ்! சரியான போட்டி!" என்று சொல்லுமளவுக்கு இருவருமே இன்னும் வளர்ச்சி அடையவில்லையே!

● ஜோ. ஜெயக்குமார், நாட்டரசன் கோட்டை

? 'நல்ல மாமனாருக்கு (வாஜ்பாய்) மோசமான மகள் (தமிழக அரசு). அந்த மகளுடன் வாழ்க்கை நடத்த தி.மு.க. (கணவன்) தயாராக இல்லை' என்று தி.மு.க., தேசிய ஜனநாயக கூட்டணியிலிருந்து விலகியதற்குக் காரணம் (உதாரணம்) சொல்லியிருக்கிறாரே?

! சாதுவாக, நல்ல மாமனாராக இருந்தால் போதாது. தப்பு நேரும்போது தட்டிக் கேட்கும் பெரியவராகவும் இருக்க வேண்டும் என்பதை உணர்த்தும் இந்த அறிக்கை, பா.ஜ.க. தரப்பில் பேசப்பட்டதற்குத் தரப்பட்ட சரியான பதிலாகும்.

● ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்

? 'பேரழிவு அணு ஆயுதத் தொழில் நுட்பங்களை வெளிநாடுகளுக்கு அளிக்க மாட்டோம் என்ற உறுதி மொழியை முஷாரஃப் காப்பாற்றுவார்' என அமெரிக்கா நம்பிக்கை தெரிவித்துள்ளதே...?

! அதெல்லாம் பாகிஸ்தான் ஒண்ணும் தர வேண்டாங்க..! இன்னிக்கு, பல்கலைக் கழகங்களின் கொல்லைப்புறத்தில் அணுகுண்டுகளை மாணவர்கள் தயாரிக்கும் அளவுக்கு வந்தாச்சு. ஒட்டுமொத்தமாக சர்வதேசத் தலைவர்களுக்கு ஞானோதயம் ஏற்பட்டால்தான் உண்டு!

● எஸ்.ஏ. கேசவன், கு. கழுகாசலபுரம்

? சென்னை வாழ் மக்கள், குடிநீர் விஷயத்தில் 'ஆயுள் தண்டனை' பெற்றவர்களாக ஆகிவிட்டார்களே...?

! ஆயுள் தண்டனை மட்டுமல்ல. வீணான திட்டங்களுக்காக வரிப்பணத்தில் அபராதமும் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். கிடைக்காத தண்ணீருக்காகக் கட்டணமும் செலுத்துகிறார்கள்.

● க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

? எங்கள் ஊருக்கு நேற்று ஜி.கே.வாசன் தமது தொண்டர் மகன் திருமணத்துக்கு வந்திருந்தார். சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட கார்கள் அவருடன் வந்திருந்தன. உடன் இத்தனை பேர் எதற்காக வந்திருப்பார்கள்?

! 'பந்தாவே' இல்லாத காமராஜர் ஆட்சியைக் கொண்டு வருவோம் என்று நம்ப வைக்க.



• வெற்றியும்...



• மாஜியும்...!



* நாற்பதும் நமதே!



* அனாவசிய விமர்சனம்

● மு. சுந்தரம், சென்னை - 4 ★

*? சிறையிலிருந்து வெளிவந்த நக்கீரன் கோபால், 'இது ஜெயலலிதாவுக்கு முதல் அடி' என்று கூறியுள்ளாரே...?*

! தனிநபர் விரோதத்தை வளர்க்கும் அனாவசியப் பேச்சு. அடக்கம் அமரருள் உய்க்கும்.

● டி.எஸ்.சேகர், தென்கடப்பந்தாங்கல்

*? கல்கி வாசகர்களிடம் நீங்கள் ரசிப்பது எதை...?*

! நல்ல விஷயங்களுக்கு அவர்கள் தரும் நீடித்த ஆதரவை.

● கே.வேலுச்சாமி, சிறுநாயக்கன்பட்டி

*? சூரியன் - தாமரை உறவுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டிருப்பது யாருக்கு லாபம்?*

! கொள்கை அடிப்படையிலான ஜன நாயகத்துக்கு

● பா. அச்சுதன், வயலூர்

*? ஜி.வி. அய்யர் மறைவு பற்றி...?*

! 'தென்னகத்தின் அகிரா குரோசோவா' என்று கூறலாம் ஜிவி. அய்யரை. முழுக்க முழுக்க சமஸ்கிருதத்தில் எடுக்கப்பட்ட ஆதிசங்கரர் படத்தை இயக்கியவர்; பகவத் கீதையை குறும்படமாக எடுத்தவர். கதை, வசனம், பாடல்கள், இயக்கம் என்று பல பிரிவுகளிலும் தமது ஆற்றலை வெளிப் படுத்தியவர். கன்னடத்தின் முதல் பேசும் படமான 'வேடர் கண்ணப்பா' வில் நடித் தவர். சர்வதேச அளவில் புகழ்பெற்ற இந்த இயக்குனர் காலத்துக்கேற்ப வளர்ந்தவர்; காலத்தால் மறை யாதவர்.

● எம்.ராஜேந்திரன், வால் குடி

*? நாதஸ்வரக் கச்சேரி நாளுக்கு நாள் குறைந்து அழிந்து கொண்டே போகி றதே...?*

! கோயில் உற்சவங்கள் இருக்கும்வரை, கல்யாணங்கள் நடக்கும் வரை, நாதஸ்வரக் கச்சேரிகளுக்கும் மதிப்பும் மவுசும் உண்டு. என்ன... முன்பெல்லாம் நாதஸ்வரம் கேட்டாங்க; இப்ப நாதஸ்வர ஒலிக்கும் மேலாகக் கத்திப் பேசறாங்க! கஷ்டப்பட்டு வாசிக்கறவங்களுக்குக் கொஞ்சம் மதிப்புக் கொடுக்கப் பழகிக்கிட்டா சரியாயிடும்.



* பரிவாரம் சூழ...

**☐ ரூ.100 பரிசு பெறுபவர் :**
**கே. கணபதி,**
**10, மதுரை தெரு,**
**சென்னை - 11**

**★ ரூ.50 பரிசு பெறுபவர் :**
**மு. சுந்தரம்,**
**12, கபாலி நகர்,**
**மயிலாப்பூர்,**
**சென்னை - 600 004.**


# "எங்க டெக்னிக் இதுதான்!"

'உங்கள் கணவர் / மனைவி 'டல்'லாக இருந்தால், உற்சாகமூட்ட என்ன டெக்னிக் கையாள்வீர்கள்?' வி.ஐ.பி. தம்பதிகள் அளித்த பதில்கள் :

**கவிஞர் பா. விஜய்:** நானும் சரி, மனைவி லேனாவும் சரி, 'டல்' லாக இருந்தால் மூடு மாற, உடனே ஊருக்குப் போன் செய்து, பெற்றோர்களுடன் கொஞ்ச நேரம் பேசுவோம். எங்கள் வீட்டுக்கு அருகில் உள்ள சைதை காரணீஸ்வரர் கோயிலுக்குப் போய் வணங்குவோம். கோயிலின் பிரம்மாண்டமும், அமைதியான சூழலும், 'டல்'லடிக்கும் மன நிலையை மாற்றி விடும். இதெல்லாம் பழைய வழிமுறைகள். லேட்டஸ்ட்டாக ஒரு புதுவழி எங்களுக்குப் பிறந்திருக்கிறது. அது, எங்கள் வீட்டுப் புதுவரவுதான். குழந்தையைக் கொஞ்சுவதைவிட, உற்சாகமூட்டும் விஷயம் வேறென்ன இருக்கிறது?




• படம்: மீடியா ராமு




**ஆர்த்தி - ரமேஷ்:** எங்களுக்கு 'டல்'லான தருணம் என்பது போட்டிகளில் தோல்வி அடையும்போதுதான். அப்போது செஸ் விளையாட்டைத் தவிர, மற்ற ஜாலியான விஷயங்களைக் குறித்துப் பேசுவோம். கருத்து வேறுபாடு காரணமாக யார் அப்செட் ஆனாலும், உடனே யார் பக்கம் சரி, யார் பக்கம் தவறு என்று விவாதிக்காமல் 'ஸாரி' சொல்லி விடுவோம். அப்புறம் சமயம் கிடைக்கிறபோது, தன் பக்கத்து நியாயத்தைச் சொல்லிக் கொள்வது வழக்கம். இரண்டு பேருக்கும் நகைச்சுவை உணர்வு உண்டு. எனவே நல்ல ஜோக், உற்சாகத்தை வரவழைத்துவிடும்.

இல்லையென்றால், இருக்கவே இருக்கிறது ஷாப்பிங்.



மாது பாலாஜி - மீரா: என் கணவர் பாலாஜி டல்லாக இருந்தால், உடனே 'வாங்க, கொஞ்ச நேரம் வாக்கிங் போயிட்டு வரலாம்' என்று அழைத்துக் கொண்டு போவேன். அப்போது எங்களோட 'டாக்கிங்'கில் உற்சாகம் வந்து விடும்.

மீரா, நித்யஸ்ரீயின் பரம ரசிகை. அவளை உற்சாகப் படுத்த வேண்டுமென்றால், நித்யஸ்ரீயின் கேஸட் வாங்கிக் கொடுத்தால் போதும். இல்லையெனில், நித்யஸ்ரீயின் குரலை கேஸட்டில் கேட்க வைத்தால் போதும்.





பாம்பே ஜெயஸ்ரீ - ராமநாத்: எங்களை உற்சாகப்படுத்தும் விஷயம் இசைதான். தனிமையில் இருக்கிற போதும் சரி, சோகம், கவலை, வெறுமை என்று எந்த சந்தர்ப்பமானாலும், இசை எங்களுக்கு உற்சாக டானிக். எங்களிடம் கர்நாடக, இந்துஸ்தானி, மேற்கத்திய இசை, பஜன்ஸ் என்று ஏராளமான ஆல்பங்கள் இருக்கின்றன. இசை கேட்டால் சோர்வு பறந்து போயிடும்.

ரமேஷ் பிரபா - விஜயலட்சுமி: நாங்கள் இருவருமே டீவி சம்பந்தப்பட்ட பிசினஸில் இருப்பதால், நன்மைகளும் உண்டு; சில கஷ்டங்களும் உண்டு. டல்னஸ் வந்தால், அநேகமாக, இருவருக்கும் ஒரு சேரத்தான் வரும். பர்சனல் விஷயங்களுக்காக அது ஏற்படுமானால், ஒரு மாற்றத்துக்காக பிசினஸின் பாசிடிவ் விஷயங்களைப் பேசி, ஒருவரையொருவர் உற்சாகப்படுத்திக் கொள்வோம். பிசினஸ் சம்பந்தமான விஷயங்கள் அதற்குக் காரணமாக இருக்குமானால், இது நம் தனிமைக்காகத் தரப்பட்ட வரம் என்று நினைத்து, வெளியில் போவது, ஷாப்பிங், என்று உற்சாகப்படுத்திக் கொள்வோம்.



- கௌதம் ராம்

# அட்டையில் அப்படி... ஜோக்கிலே இப்படி!




✉ எங்கள் ஊருக்குப் பக்கத்தில் உள்ள நாகப்பட்டினத்துக்கு நாற்பது தடவையாவது போயிருப்பேன். சௌந்தரராஜப் பெருமாள் பற்றி ஆனந்தி எழுதியதைப் பார்த்த பிறகுதான், அந்த ஆலயத்தின் பெருமைகளை உணர்ந்தேன்.
சென்னை - 92, குவளை எழில்

✉ என்ன இருந்தாலும் 'ஜெ...2004' என்று அம்மாவை அட்டைப் படத்தில் போட்டு விட்டு, உள்ளே 23ம் பக்க ஜோக்கில் இந்த வாரல், வாரி இருக்கக் கூடாது!
பன்னப்பட்டி, த. அசாருதீன்.

✉ 'அரசியல் அதர்மம்' தலையங்கம் வெகு நேர்த்தியாக, டிராவிட்டின் வலுவான பேட்டிங் போல் அமைந்தது. சட்டத்தை வரிக்கு வரி அப்படியே எடுத்துக்கொண்டு பிரயோகம் செய்பவர்களுக்கும், சட்டத்தைப் பற்றிக் கவலைப்படாமல் உணர்ச்சி வசப்பட்டுப் பேசுபவர்களுக்கும், இதை விடச் சிறப்பாகச் சொல்ல முடியாது. அரசியல் காழ்ப்புணர்ச்சிகளற்ற சட்ட மதிப்பு நடைமுறைக்கு வர வேண்டும்!
திருச்சி - 20, இர. முஹம்மது ஹசன்.

✉ ஓவியத் திலகம் பத்மவாசன் - 'கதை'த் திலகமாகியிருப்பதையும் கண்டு வியந்து போனேன். இந்த இனிய புத்தாண்டில் எ(அ)ந்த வீட்டுப் பூவானாலும் மதிப்புத் தரக் காத்திருக்கிறேன்.
சென்னை - 39, சுகந்தி நாராயண்.

✉ பழைய புகைப்பட ஆல்பத்தைப் புரட்டுவது கவிதை படிக்கும் சுகானுபவத்திற்கு ஒப்பானது. கூட்டுக் குடும்ப இனிமையையும், அதன் சிதைவால் ஏற்படும் மன வெறுமையையும், படம் பிடித்திருந்த ஆரணி யுவராஜின் 'வெற்றிடம்' சிறப்பான சிறுகதை.
மயிலாடுதுறை, ஜெ. பாபு

✉ வைகோ ஏன் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதற்கு, பொடா சட்ட உதாரணங்களை, தலையங்கத்தில் ஆதாரங்களோடு அடுக்கியிருந்த விதம் அசத்தல்!
கும்பகோணம்-1, புலவர் எஸ்.கே. மூர்த்தி

✉ 'அரசியல் அதர்மம்' தலையங்கம் நடுநிலையாகவும், சிறந்த நீதிபதியின் வார்த்தைகளைப் போல நேர்மையாகவும் இருந்தது. 'கல்கி'யின் நியாயத் தராசு எப்போதும் சாய்வதில்லை.
சித்தோடு, க. பூங்கொடி

✉ ஜகத்குரு காஞ்சி பெரியவர் அருள்வாக்கு படித்தேன். அதை நாங்கள் ஏற்கெனவே கல்கி தீபாவளி மலரில் படித்து விட்டோம். கல்கி வாசகர்களின் ஞாபக சக்திக்கு ஒரு பரீட்சையா? அல்லது வாசகர்கள் படித்ததை உடனே மறந்து விடுவார்கள் என்ற எண்ணமா? எங்களை ஏமாற்ற முடியாது.
சென்னை - 28, டி.வி. ராதாகிருஷ்ணன்.

மீண்டும் மீண்டும் படிக்க வேண்டிய சிந்தனை என்பதாலும், தீபாவளி மலரைப் பல வாசகர்கள் தவற விட்டிருக்கக் கூடும் என்பதாலும் மறுபிரசுரம் செய்தோம்.
(- ஆர்)

✉ 'மிஸ்டர் நங்கூரம்' என ட்ராவிட்டுக்குத் தாங்கள் பட்டம் சூட்டியிருப்பது மிகவும் பொருத்தம்! ஆபத்தான நேரத்தில் நங்கூரம் போல் நின்று, அணியைக் காப்பாற்றுவதில் வல்லவர் என்பதை மிகத் தெளிவாகச் சொல்லியிருந்ததை ரசித்தேன்.
லால்குடி, எம். ராஜேந்திரன்.

## ARTHRITIS ✻ மூட்டுவலி / CALCANEAL SPUR ✻ குதிகால்வலி



▼ குதிகால்களில் எலும்பு வளர்ந்து நடக்க முடியாமல் வலி. (Calcaneal Spur) ▼ கை, கால்களில் மூட்டு வீக்கமும், வலியும். ▼ கை, கால் விரல் மூட்டுகளில் வீக்கமும் வலியும். ▼ கழுத்து வலி (Cervical Spondylitis) ▼ நடுமுதுகின் கீழ்பகுதியில் வலி (Lumbar vertebra and Sacral Joint area) ▼ இடுப்பு எலும்பும் (Pelvic Bone) தொடை எலும்பு தலையும் (Femoral Head) சேருமிடம். ▼ குதிகால் இணைப்புகளில் வலி, முதலி யவை பல ஆண்டுகளாக இருந்தாலும் ஆங்கில மருத்துவருடைய ஆலோ சனையின்படி வித்தியாசமான இயற்கை வைத்திய முறையில், பக்க விளைவுகள் இல்லாமல் நலம்பெற செய்கின்றோம். இந்தியா மற்றும் வெளி நாடுகளில் இருந்தும் வியாதியஸ்தர்கள் வருகிறார்கள்.

மதிப்பிற்குரிய டைரக்டர் திரு. S.P. நாயுடு அவர்களுக்கு,

நான் மும்பையில் இருந்து வந்து முதுகுவலி, இடுப்புவலி மற்றும் கழுத்து வலிக்காக சிகிச்சை எடுத்துக் கொண்டேன். சிகிச்சை எடுத்துக் கொண்ட பிறகு 75% வலி குறைந்து விட்டது. நன்கு பயிற்சி பெற்ற, தங்கள் ஆஸ்பத்திரியில் பணிபுரிவோரின் கனிவான சேவையை மிகவும் பாராட்டுகிறேன். தங்கள் ஆஸ்பத்திரியில் பணிபுரியும் டாக்டர்கள், நர்சுகள், மேசியர்கள், பிசியோதெரபிஸ்ட்கள் மற்றும் முன் ஆபீசில் உள்ளவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு
A. Swetharanyam,
2B/302, Happy Homes CHS Ltd, I.C. Colony, Borivli (w)
Mumbai - 400 103

## PARKINSONS DISEASE, ALZHEIMERS DISEASE

ஆகியவைகளுக்கு பக்கவிளைவுகள் இல்லாத சிறந்த மூலிகை மருந்து தரப்படும்.

## CANCER - புற்றுநோய்

ஆரம்ப நிலையில் உள்ள புற்று நோய்க்கு இயற்கையான முறையில், சிறப்பான, பக்க விளைவுகளோ, வலியோ, அசௌகரியமோ இல்லாத வகையில் சிகிச்சை அளிக்கின்றோம். புற்று நோயாளிக்கான பிரத்யேக உணவு வழங்கப்படும். அத்துடன் பிசியோதெரபி, யோகா, பிராணவாயு சிகிச்சை மற்றும் இரத்த ஓட்டத்தை சீராக்கக் கூடிய இயற்கை முறை சிகிச்சை அளிக்கப்படும். ரேடியேஷன், கீமோதெரபி எடுத்துக் கொள்ளும் புற்று நோயால் மிகவும் பாதிப்படைந்துள்ளவர்களுக்கு அதன் பக்க விளைவுகளை குறைக்கும்படியான (உதாரணமாக : முடி உதிர்தல், இரத்த சோகை, வாய்ப் புண் போன்றவை) இயற்கை முறை சிகிச்சையும், கேன்சர் வியாதியஸ்தர்களுக்கு தேவையான பாதுகாப்பான உணவு வகைகளும் வழங்கப்படும்.

## ASTHMA - ஆஸ்துமா

**1. Dyspnea** *(மூச்சுத் திணறல்)* **2. Respiratory difficulties** *(மேல்மூச்சு வாங்குதல்)* **3. Dry cough** *(வறட்டு இருமல்)* **4. Cough with sputum** *(சளியுடன் கூடிய இருமல்)* **5. Running Nose** *(மூக்கில் நீர் வழிதல்)* **6. Nasal Block** *(மூக்கடைப்பு)*

## WEIGHT REDUCTION (உடல் பருமன்) for LADIES & GENTS

எங்களிடம் நாள்பட்ட இதர நோய்களுக்கும் ஆலோசனை கேட்கலாம்.

# அடையார் இயற்கை வைத்திய மையம்

# ADYAR NATURE CURE CENTER(TM) Regd. Hospital

No. 6, SECOND CROSS STREET, KASTURBHA NAGAR, ADYAR, CHENNAI - 20.
Phone:2441 3399, 2440 2470. Tele Fax: 044-2491 6650 (காந்திநகர் பஸ் டெர்மினஸ் எதிரில்)
www.adyarnaturecure.com E-mail: adyarnaturecure@yahoo.com,

குறிப்பு: சாதா, A/c தங்கும் அறைகள் மற்றும் ஜெனரல் வார்டு, கலர் டீவி., போன் வசதியுடன் கிடைக்கும். பிராமணர்களால் தயார் செய்யப்பட்ட சைவ உணவு வசதி மட்டும் உண்டு. முன்பதிவு அவசியம்.

PRABHALA PRABHALA PRABHALA PRABHALA PRABHALA PRABHALA PRABHALA

*Aum Sairam*

# Prabhala Marriage Caterers

Estd : 1988

**9, K.V. Colony, 1st Street, (Near Ayodya Mandapam)**
**West Mambalam, Chennai - 600 033. Ph: 31000590, 24890044,**

E-mail:prabhala@eth.net

*We arrange for you*

*Nadaswaram - Flowers/Garlands-Catering - Seer Items (Sweets & Savouries) - Muhurtha Thambulam - Silk Mat - Kasi Yatra Items - Angamani Seer- Vaidheega Samangal - "Morning Mariyadhai " items*

**N.B:** We are the one and the only Caterer in whole of Chennai who use only Pure Ghee in all our preparations, avoiding Dalda totally.

**We provide the seer items from the famous Grand Sweets & Snacks. Adyar**

PRABHALA PRABHALA PRABHALA PRABHALA PRABHALA PRABHALA PRABHALA

PRABHALA PRABHALA PRABHALA PRABHALA PRABHALA

PRABHALA PRABHALA PRABHALA PRABHALA PRABHALA

*ஸ்ரீ வெங்கடாஜலபதி துணை*

**திருப்பதி தரிசனம்**

**17.01.04:** காஞ்சிபுரம், திருத்தணி, திருச்சானூர், சீனுவாச மங்காபுரம், திருப்பதி, திருமலை, ஆகாச கங்கை, பாப விநாசம் 2 நாட்கள், கட்டணம் (உணவு, இருவர் தனி அறை தங்குமிடம் உட்பட) ஸ்வராஜ் மஸ்தா ரூ. 810, கார் ரூ. 1080. சிறுவர் முறையே ரூ. 540, ரூ.810.

**திருநாங்கூர் 11 கருட சேவை**

**20.01.04:** திருநாங்கூர் கருட சேவை உள்ளடக்கிய சோழ நாட்டு திருப்பதிகள் 40 டீலக்ஸ் பஸ்ஸில் மூன்று நாட்கள் கட்டணம் ரூ. 1296 - உணவு, தங்குமிடம் (இருவர் தனி அறை) உட்பட.

**22.01.04:** கும்பகோணம், ஒப்பிலியப்பன் கோயில், திருக்கண்ணபுரம் உள்ளடக்கிய 12 திவ்ய தேசங்கள் மற்றும் திருநாங்கூர் கருட சேவை. 1 நாள் பஸ்ஸில் கட்டணம் ரூ. 270/- உணவு உட்பட.

**நவக்கிரக சுற்றுலா**

**24.01.04:** வைத்தீஸ்வரன்கோயில், திருவெண்காடு, கீழ்ப்பெரும் பள்ளம், திருநள்ளாறு, திருமங்கலகுடி, சூரியனார் கோவில், கஞ்சனூர், திருநாகேஸ்வரம், ஆலங்குடி, திங்களூர் மற்றும் சிதம்பரம், திருவாரூர், தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம், டீலக்ஸ் பஸ்ஸில் 2 நாட்கள் ரூ. 756 (உணவு தங்குமிடம், இருவர் தனி அறை உட்பட) சிறுவர் ரூ. 540-

**டெல்லி காசி யாத்திரை**

**12.02.04:** பூரி, கோனார்க், புவனேஸ்வர், கல்கத்தா, கயா, புத்த கயா, காசி, சாரநாத், அலகாபாத், 9 நாட்கள்- (ரயிலில் தூங்கும் வசதியுடன்) ரூ.3510/- இத்துடன் அயோத்தி ஹரித்வார், ரிஷிகேசி, டெல்லி, ஆக்ரா, மதுரா பிருந்தாவன் மேலும் 4 நாட்கள்; கூடுதல் கட்டணம் ரூ. 1890/- உணவு, பொது தங்குமிடம், ஊர் சுற்றி பார்க்கும் செலவு உட்பட.

*இதர யாத்திரைகள் குழு சுற்றுலாக்கள் மற்றும் விவரங்களுக்கு :*

**ஜெய் ஹோட்டல்ஸ் & டிராவல்ஸ் பிரைவேட் லிமிடெட்**

முதல் மாடி, சாரதா, 36, சிருங்கேரி மடசாலை, (சாரதாம்பாள் கோவில் அருகில்)
100 அடி ரோடு, எல்லைபிள்ளைசாவடி, பாண்டிச்சேரி - 605 005.
போன்: **2201552**, செல்: **94432 - 52652**

E-mails:jhat@sify.com & jhat@sanchamet.in



# சிவகாமியின் சபதம்

### நாற்பத்தெட்டாம் அத்தியாயம்

## குளக்கரைப் பேச்சு

ஒரு மாதத்தின் பிற்பகுதியில் ஒருநாள் காலை நேரத்தில் வானம் மப்பும் மந்தாரமுமாயிருந்தது.

அந்த வருஷம் ஐப்பசி, கார்த்திகையில் நல்ல மழை பெய்திருந்தபடியால், தாமரைக்குளம் நிரம்பிக் கரையைத் தொட்டுக் கொண்டு தண்ணீர் ததும்பிற்று. காலைச் சூரியனை மேகங்கள் மூடியிருந்தபோதிலும் குளத்தில் செந்தாமரைப் புஷ்பங்கள் நன்றாக மலர்ந்து இனிய நறுமணத்தை நானா திசையிலும் பரப்பிக் கொண்டிருந்தன.

இறகுகளில் சிவப்பு வரியுடன் கூடிய நீலநிற வண்டுகள், மலர்ந்த செந்தாமரைப் பூக்களை வலம் வந்து இசைபாடி மகிழ்ந்தன.

பளிங்கு போலத் தெளிந்திருந்த தடாகத்தின் தண்ணீரில் பெரிய பெரிய கயல்மீன்கள் மந்தை மந்தையாக நீந்தி விளையாடிக் கொண்டிருந்தன.

பச்சைப் பசுங் குடைகளைப் போலத் தண்ணீரிலிருந்து கம்பீரமாக எழுந்து தலை நிமிர்ந்து நின்ற தாமரை இலைகளில் முத்து நீர்த்துளிகள் அங்குமிங்கும் தவழ்ந்து விளையாடின.

தாமரைக் குளத்தைச் சுற்றிலும் வானோங்கி வளர்ந்திருந்த விருட்சங்கள் கப்பும் கிளைகளும், இலைகளும், தளிர்களுமாய்த் தழைத்துப் படர்ந்து சில இடங்களில் குளத்தின் தண்ணீர் மீது கவிந்து கரு நிழல் பரப்பிக் கொண்

**அமரர் கல்கி**

டிருந்தன.

பச்சைக் கிளிகளும் பல வர்ணக் குருவிகளும் இன்னிசைக் குயில்களும் இனிய கீதம் பாடும் மைனாக்களும் குளிர்ந்த தழைகளுக்கிடையில் உட்கார்ந்து இளந்தளிர்களைக் கோதிக் கொண்டும் மலர்களின் மகரந்தங்களை உதிர்த்துக் கொண்டும் ஆனந்தமாக ஆடிக் கொண் டும் பாடிக் கொண்டும் கிளைக்குக் கிளை தாவிக் கொண்டும் வசந்த காலத்துக்கு வரவேற்புக் கூறிக் கொண்டிருந்தன.

இவ்விதம் இயற்கைத் தேவி பூர்ண எழிலுடன் கொலுவீற்றிருந்த இடத்தில், ஜீவராசிகள் எல்லாம் ஆனந்தத் திருவிழாக் கொண்டாடிக் கொண்டிருந்த சமயத்தில், மானிட ஜன்மம் எடுத்த அபலைப் பெண் ஒருத்தி மட்டும் அந்தக் குளக்கரையில் சோகமே உருக்கொண்டது போல் உட் கார்ந்திருந்தாள்.

அவள் ஆயனச் சிற்பியாரின் செல்வத் திருமகளும், வீராதி வீரரான மாமல்ல சக் கரவர்த்தியின் உள்ளங் கவர்ந்த காதலியும் நடனக் கலைத் தெய்வத்தின் பரிபூரண அருள் பெற்ற கலைராணியுமான சிவகாமி தேவிதான்.

அந்தத் தாமரைக் குளத்தின் காட்சி யானது சிவகாமிக்கு எத்தனை எத் தனையோ பூர்வ ஞாபகங்களை உண் டாக்கிக் கொண்டிருந்தது.

அந்தத் தடாகக் கரை ஓரத்தில் பத்து வருஷங்களுக்கு முன்னால் அவள் இதே மாதிரி எவ்வளவோ தடவை உட்கார்ந்து தெளிந்த தண்ணீரில் பிரதிபலித்த தன் அழகிய உருவத்தைப் பார்த்துக் கொண் டிருந்திருக்கிறாள்.

சென்ற பத்து வருஷ காலத்தில் அவளு டைய உருவத் தோற்றத்திலும் எந்த விதமான மாறுதலும் ஏற்பட்டிருக்க வில்லை.

ஆனால், அவளுடைய உள்ளம் அந்தப் பத்து வருஷத்திலே எவ்வளவு மாறுதல் அடைந்துவிட்டது!

அழகிய தாமரை மலரையும் அதைச் சுற்றி வரும் நீலநிற வண்டுகளையும் பார்க் கும்போது முன்னாளில் அவள் உள்ளம் அடைந்த குதூகலம் இப்போது ஏன் அடையவில்லை?


தண்ணீரிலே பிரதிபலித்த அவளு டைய பொன்மேனியின் சௌந்தரியத் தையும் ஆடை ஆபரண அலங்காரத் தையும் பார்த்தபோது அவள் அடைந்த பெருமிதமும் இன்பமும் இப்போது எங்கே போய் விட்டன?

அந்தக் காலத்தில் அதே தாமரைக் குளக்கரையில் தன்னந்தனியாக உட் கார்ந்து மனோராஜ்யம் செய்து கொண் டிருப்பதில் சிவகாமி எவ்வளவோ இன் பத்தை அனுபவித்தாள். தனிமையிலே அவள் கண்ட அந்த இனிமை இப்போது எங்கே?

சிவகாமிக்குச் சில சமயம் தனது சென்ற கால வாழ்க்கையெல்லாம் ஒரு நெடிய இந்திரஜாலக் கனவு போலத் தோன்றியது. தான் அத் தாமரைக் குளக்கரையில் உட் கார்ந்திருப்பதும் தன்னைச் சுற்றிலும் காணப்படும் அழகிய இயற்கைக் காட்சி களும் உண்மைதானா அல்லது வாதாபி நகரத்துச் சிறை வீட்டில் உட்கார்ந்தபடி காணும் பகற்கனவா என்று அடிக்கடி சந்தேகம் ஏற்பட்டது.

இவ்விதம் நெடுநேரம் ஏதோ உருவ மில்லாத சிந்தனைகளில் சிவகாமி ஆழ்ந் திருந்தாள். வானத்தை மூடியிருந்த மேகப் படலங்கள் சிறிது விலகி சூரியன் வெளித் தோன்றி அவள் மீது சுளீர் என்று வெயில் உறைத்த பிறகு எழுந்திருந்தாள். ஆயனரின் அரண்யச் சிற்பி வீட்டை நோக்கி நடந்தாள்.

குதிரைக் குளம்படியின் சப்தம் திடீ ரென்று கேட்டதும், அந்த அடி ஒவ் வொன்றும் தன் நெஞ்சின் மேல் படுவது போன்ற வேதனை அவளுக்கு உண் டாயிற்று. அந்தக் குளக்கரையைத் தேடி அவளுடைய காதலர் மாமல்லர் குதிரை மீது எத்தனையோ தடவை வந்திருப்பது சிவகாமிக்கு நினைவு வந்தது. இப் போது வருவது யார்? ஒருவேளை அவர் தானா? - ஆஹா! அவரை எப்படிச் சந்திப்பது? அவருடைய தீக்ஷண்யமான பார்வையை - 'அடி பாதகி! உன்னால் என்னென்ன வினைகள் எல்லாம் வந் தன?' என்று குற்றம் சாட்டும் கண்களை



எப்படித்தான் ஏறிட்டுப் பார்ப்பது?

ஒரு குதிரையல்ல - இரண்டு குதிரைகள் வருகின்றன. இரண்டு குதிரைகள் மீதும் இரண்டு பேர் வீற்றிருக்கிறார்கள். தனியாக அவரைச் சந்திப்பதே முடியாத காரியம் என்றால், இன்னொருவரின் முன்னால் அவரைப் பார்ப்பது பற்றிக் கேட்க வேண்டியதில்லை. குளக்கரையின் சமீபத்தில் அடர்த்தியாக மண்டி வளர்ந்திருந்த புதர் ஒன்றின் பின்னால் சிவகாமி மறைந்து கொண்டாள்.

குதிரைகள் இரண்டும் சமீபத்தில் வந்தன. முன்னால் வரும் குதிரையின் மீது மாமல்லர்தான் வந்தார். அம்மா! அவர் முகத்திலேதான் இப்போது என்ன கடூரம்? அன்பு கனிந்து ஆர்வம் ததும்பிக் கள்ளங்கபடமற்ற உள்ளத்தைக் காட்டிய பால் வடியும் முகத்துக்கும் இந்தக் கடுகடுத்த முகத்துக்கும் எத்தனை வித்தியாசம்?

அவருக்குப் பின்னால் மற்றொரு குதிரையின் மேல் வந்தவர் பரஞ்சோதியாகத்தானிருக்க வேண்டுமென்று எண்ணிச் சிவகாமி பார்த்தாள். இல்லை; பரஞ்சோதி இல்லை! அந்த மனிதரை இதுவரையில் சிவகாமி பார்த்தது கிடையாது. ஆ! பத்து வருஷத்துக்குள் எத்தனையோ புதுச் சிநேகிதம் அவருக்கு ஏற்பட்டிருக்கும்!

குதிரைகள் இரண்டும் குளக்கரையில் வந்து நின்றன. இருவரும் இறங்கினார்கள். அந்தப் பழைய விருட்சத்தின் அடியில் மாமல்லரின் கவிதையழகு வாய்ந்த காதல் ஓலைகளை எந்த மரத்தின் பொந்திலே தான் ஒளித்து வைத்திருப்பது வழக்கமோ, அதே மரத்தினடியில் - இருவரும் நின்றார்கள். மாமல்லரின் பேச்சு, அவள் காதிலே விழுந்தது. ஆம்! தன்னைப் பற்றித்தான் அவர் பேசுகிறார்.

மாமல்லரின் குரலில் பின்வரும் வார்த்தைகள் வருவதைச் சிவகாமி கேட்டாள்: "ஒரு காலத்தில் இந்தத் தாமரைக் குளத்தைப் பார்க்கும்போது எனக்கு எத்தனை குதூகலமாயிருந்தது! எத்தனை தடவை இந்தக் குளத்தைத் தேடி ஆர்வத்துடன் ஓடி வந்திருக்கிறேன்? என் அருமைத் தந்தையிடம் கூட என் உள்ளத்தை ஒளித்து இங்கே கள்ளத்தனமாக எத்தனை முறை வந்திருக்கிறேன்? இதன் அருகில் வரும்போது, சிவகாமி இங்கே இருப்பாளோ, மாட்டாளோ என்ற எண்ணத்தினால் எப்படி என் நெஞ்சம் துடித்துக் கொண்டிருக்கும்? அவள் இந்த மரத்தடியில் உள்ள பலகையில் தங்க விக்ரகத்தைப் போல் தனியாக அமர்ந்திருப்பதைப் பார்த்ததும் எப்படி என் உள்ளம் மகிழ்ச்சி ததும்பித் துள்ளிக் குதிக்கும்? அப்படிப்பட்ட சிவகாமியை இன்று ஏறிட்டுப் பார்க்கவே என் மனம் துணியவில்லை. வீட்டின் வாசல் வரைக்கும் வந்து விட்டு, உள்ளே போகத் தயங்கி ஒதுங்கி வந்து விட்டேன். இந்தத் தாமரைக்குளம் அந்தக் காலத்தில் இருந்ததைக் காட்டிலும் அதிக வனப்புடனேதான் இன்று விளங்குகிறது. ஆயினும் இதைப் பார்ப்பதில் எனக்கு மகிழ்ச்சி உண்டாகவில்லை - மானவன்மரே! இதோ மரத்தடிப் பலகையைப் பாருங்கள்! இந்தப் பலகையின் மேல் நாங்கள் கை கோத்துக் கொண்டு உட்கார்ந்து எத்தனையோ நாள் சொர்க்க இன்பத்தை அநுபவித்திருக்கிறோம். அந்தப் பலகை இன்று எப்படி வெயிலிலே உலர்ந்து மழையிலே நனைந்து துண்டு துண்டாய்ப் பிளந்து கிடக்கிறது! இளவரசே! என்னுடைய சிதைந்து போன வாழ்க்கைக்கு இந்தப் பலகையே சரியான சின்னமாக விளங்குகிறது..."

மானவன்மர் என்று அழைக்கப்பட்ட மனிதர் ஏதோ சொன்னார். அது சிவகாமியின் காதில் விழவில்லை.

மாமல்லர் அவருக்குக் கூறிய மறுமொழி மட்டும் கேட்டது.

"ஆ! மானவன்மரே! என்னால் அது நினைக்கவும் முடியாத காரியம். செடியிலிருந்து கீழே உதிர்ந்த பூ உதிர்ந்து போனதுதான். மறுபடியும் அதைச் செடியிலே பொருத்த முடியுமா? என்னுடைய தந்தை மகேந்திர பல்லவர் ஒரு சமயம் கூறியது எனக்கு நினைவு வருகிறது. "சிவகாமியும் அவளுடைய அற்புதக் கலையும் கடவுளுக்கு அர்ப்பணம் ஆக வேண்டியவை. கேவலம் மனிதர்களுக்கு

உரியவை அல்ல" என்று அவர் கூறினார். மகேந்திர பல்லவரின் வாக்கு ஒருபோதும் வீண் போவதில்லை!"

இவ்விதம் சொல்லிக் கொண்டே மாமல்லர் தம் சிநேகிதருடன் மெல்ல நடந்து தாமரைத் தடாகத்தின் நீர்க்கரை ஓரம் வரையில் இறங்கிச் சென்றார். இருவரும் சிறிது நேரத்துக்கெல்லாம் திரும்பி வந்து தத்தம் குதிரைகளின் மீது ஏறிச் சென்றார்கள்.

சிவகாமி தன்னுடைய வீட்டை நோக்கிக் காட்டு வழியே சென்ற போது அவளுடைய உள்ளத்தில் பெருங் கிளர்ச்சி குடி கொண்டிருந்தது. அந்தக் கிளர்ச்சியில் இன்பமும் வேதனையும் சமமாகக் கலந்திருந்தன.

மாமல்லர் தன்னை மறந்து போய் விடவில்லையென்பதையும் தன்னிடம் அவரது அன்பு குறைந்து விடவில்லையென்பதையும் அவளுடைய உள்ளம் நன்கு தெரிந்து கொண்டிருந்தது. ஆயினும் அவர்கள் இருவருக்கும் இடையில் ஏதோ ஒரு பெரிய தடை, கடக்க முடியாத அகாதமான பள்ளம் இருப்பதாகவும் அவளுடைய உள்ளுணர்ச்சி கூறியது. அந்தத் தடை எத்தகையது, அந்தப் பள்ளம் எப்படி ஏற்பட்டது என்பதை அவள் எவ்வளவு யோசித்தும் தெரிந்து கொள்ள முடியவில்லை.

எப்படியும் மாமல்லரைக் கூடிய சீக்கிரத்தில் ஒருநாள் பார்க்க வேணும். பார்த்துத் தனது உள்ளம் அவர் விஷயத்தில் முன் போலவேதான் இருக்கிறது என்பதைத் தெரியப்படுத்த வேணும் என்று தீர்மானித்துக் கொண்டாள். என்றென்றைக்கும் தான் அவருடைய அடியாள், அவர் நிராகரித்துத் தள்ளினாலும் அகன்று போக முடியாதவள் என்று உறுதி கூற எண்ணினாள்.

அன்று மத்தியானம் சிவகாமி ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து உட்கார்ந்திருப்பதைப் பார்த்து ஆயனர், தயங்கித் தயங்கி அவளுடன் பேச்சுக் கொடுக்க முயன்றார்.

"குழந்தாய்! எனக்கென்னவோ இப்போது இந்த நடுக்காட்டிலே வசிப்பது அவ்வளவாகப் பிடிக்கவில்லை. காஞ்சியில் நமக்கு ஒரு வீடு இருக்கிறதல்லவா! அங்கேயே போய் விடலாம் என்று பார்க்கிறேன். உன்னுடைய விருப்பம் என்ன?" என்று கேட்டார்.

"அப்பா! அதிசயமாயிருக்கிறதே? என் மனத்தில் இருப்பதையே நீங்களும் சொல்லுகிறீர்கள். எனக்கும் இந்தக் காட்டில் தனியாயிருக்க இப்போது அவ்வளவு பிரியமாயில்லை. நாலு பேரைப் பார்க்க வேண்டும், பேச வேண்டும் என்றிருக்கிறது. காஞ்சிக்குப் போனால் கமலி அக்காளுடனாவது பேசிப் பொழுது போக்கலாம்; நாளைக்குப் புறப்படலாமா, அப்பா?" என்றாள் சிவகாமி.

"நாளைக்குப் புறப்படலாம் என்று எண்ணித்தான் நானும் பல்லக்கு அனுப்பி வைக்கும்படி சொல்லியிருக்கிறேன். நாளைய தினம் காஞ்சி நகரில் பெரிய கோலாகலமாயிருக்கும்."

"நாளைக்குக் காஞ்சி நகரில் என்ன விசேஷம், அப்பா?" என்று சிவகாமி கேட்டாள்.

"நாளைக்குச் சக்கரவர்த்தியின் பட்டணப் பிரவேச ஊர்வலம் நடக்கப் போகிறதாம்! சளுக்கர்களை முறியடித்து உலகம் காணாத மகத்தான வெற்றியுடன் மாமல்லர் திரும்பி வந்திருக்கிறார் அல்லவா?"

"சக்கரவர்த்தி திரும்பி வந்து விட்டாரா?" என்று சிவகாமி கேட்டபோது, அவளுடைய வாழ்க்கையில் கடைசி முறையாகக் கபட வார்த்தையைக் கூறினாள்.

"ஆம் குழந்தாய்! முந்தா நாள் பல்லவ சைனியம் வந்து சேர்ந்தது. சக்கரவர்த்தியும் வந்து விட்டார். எல்லாரும் வடக்குக் கோட்டை வாசலுக்கு அருகில் தண்டு இறங்கியிருக்கிறார்களாம். பட்டணப் பிரவேசத்துக்கு நாளைய தினம் நல்ல நாள் குறிப்பிட்டிருக்கிறார்களாம்... ஒரு விஷயம் கேட்டாயா, சிவகாமி! எனக்கு வயதாகி விட்டதோடு, அறிவும் தளர்ந்து வருகிறது என்று தோன்றுகிறது. இல்லாத பிரமைகள் எல்லாம் ஏற்படுகின்றன. இன்று காலை ஏதோ குதிரை வரும் சப்தம் கேட்டது போலிருந்தது. சக்கரவர்த்திதான் அந்த நாளிலே வந்ததைப் போல் இந்த ஏழைச் சிற்பியின் வீட்டைத் தேடி வருகிறாரோ என்று நினைத்தேன். வாசலில் வந்து



பார்த்தால் ஒருவரையும் காணவில்லை!"

சிவகாமியின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. சக்கரவர்த்தி வந்தது உண்மை தான் என்பதைச் சொல்லலாமா என்று நினைத்தாள். அதற்குத் தைரியம் வர







# அருள்வாக்கு

பலவீனர்களைப் பயமுறுத்தி ஹிம்சை முறையால் பணிய வைக்கிற போக்கு நல்லதல்ல. இந்த மாதிரி செய்கிற உண்ணாவிரதம், கொடும்பாவி கொளுத்துதல், கிளர்ச்சி இவையெல்லாம் உண்மையில் இவற்றைச் செய்கிறவர்களின் பலவீனத்தைத்தான் காட்டுகிறது. தங்களுடைய லட்சியத்தில் உள்ள சத்தியத்தின் சக்தியில் நம்பிக்கை இல்லாததால்தான் இத்தகைய நடவடிக்கைகளை எடுக்கிறார்கள்.



பெரும்பான்மை (மெஜாரிடி) பலம் படைத்தவர்கள், பலத்தை துஷ்பிரயோகம் செய்து பலவீனர்களைப் பயமுறுத்துவதும் தேசத்துக்கு நல்லதல்ல. மக்களின் இந்த பலவீனம் சர்க்காரிலும் தானே பிரதிபலிக்கிறது. மறுபடி நாம் இந்த தேசத்தில் பயமில்லாத பிரஜைகளாகத் தலையை நிமிர்த்தி நடக்க வேண்டுமானால், க்ஷத்ர தர்மத்தை விருத்தி செய்ய வேண்டும். தனி மனிதர்கள் உறுதியும் ஆக்க பலமும் கொண்டிருப்பது, அவர்கள் கட்டுப்பாட்டுடன் ஒன்றுகூடி ஐக்கியமாக உழைப்பது, தீமையையும் அடக்கு முறையையும் கண்டு அஞ்சாத நெஞ்சுறுதியுடன் போராடுவது, - இவையெல்லாம் இந்த தர்மத்தில் அடக்கம். லோக க்ஷேமம் ஒன்றே லட்சியமாகக் கொண்டு இந்த தர்மத்தை நடத்திக் காட்டினால், நாட்டின் ஒழுக்கம் மிக உயர்ந்த நிலை அடையும். அரசாங்கத்தின் தரமும் தானாகவே உயரும்.

**- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்**

வில்லை.

சிவகாமி கண்களில் கண்ணீரைப் பார்த்த ஆயனர் சற்று நேரம் வேறு எங்கேயோ பார்த்துக் கொண்டு மௌனமாயிருந்தார். பிறகு சிவகாமியை நோக்கி கனிவு மிகுந்த குரலில், "அம்மா, குழந்தாய்! உன்னிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும் என்றிருக்கிறேன்" என்றார்.

"என்ன அப்பா, அது? சொல்லுங்களேன்!" என்றாள் சிவகாமி.

"உலகத்திலே உள்ள எல்லாப் பெண்களையும் போல நீயும் யாராவது ஒரு நல்ல கணவனை மணந்து கொண்டு சந்தான பாக்கியத்தை அடைய வேண்டும். குழந்தாய்! இந்த வயதான காலத்தில் இத்தனை நாள் இல்லாத ஆசை எனக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது. பேரன் பேத்திகளோடு கொஞ்சி விளையாட வேண்டுமென்று விருப்பமாயிருக்கிறது..."

"அப்பா! நான் ஒருத்தி பெண் பிறந்து உங்கள் எல்லோருக்கும் கொடுத்த துன்பம் போதாதா, இன்னும் வேறு வேணுமா?" என்று நெஞ்சைப் பிளக்கும் குரலில் சிவகாமி கூறினாள்.

"சிவகாமி, இதென்ன வார்த்தை? நீ யாருக்கு என்ன துன்பம் செய்தாய், அம்மா?" என்றார் ஆயனர்.

"தங்களுடைய கால் ஊனமடைவதற்கு நான் காரணமாயிருந்தேன். கமலி அக்கா கணவனை இழப்பதற்குக் காரணமானேன்..."

"விதியின் விளைவுக்கு நீ என்ன செய்வாய், சிவகாமி! கண்ணபிரான் தலையில் அவ்விதம் எழுதியிருந்தது. அவன் அகால மரணம் அடைந்தாலும், அவனுடைய குலம் விளங்குவதற்குச் சின்னக் கண்ணன் இருக்கிறான். என்னுடைய குலமும் அந்த மாதிரி விளங்க வேண்டாமா? உன்னைத் தவிர எனக்கு வேறு யார்?"

"அப்பா! இராஜ குலத்தில் பிறந்தவர்கள் தங்களுக்குப் பிறகு சிம்மாசனம் ஏறவும் அரசாட்சி செய்யவும் சந்ததி வேண்டுமென்று கவலைப்பட வேண்டும். நம்மைப் போன்ற ஏழை எளியவர்களுக்குச் சந்ததியைப் பற்றி என்ன கவலை?" என்றாள் சிவகாமி.

(தொடரும்)

உ

# கச்சி மூதூர் அர்ச்சகர்கள் க்ஷேமநல ட்ரஸ்ட்


பதிவு அலுவலகம் : ஸ்ரீ காமகோடி சங்கர மடம், காஞ்சிபுரம்.

நிர்வாக அலுவலகம் : 16, இரண்டாவது மெயின் ரோடு, கோட்டூர்புரம், சென்னை - 600 085.

போன்: 24471936 E.Mail : prb@vsnl.com Website : http://personal.vsnl.com/knaw_trust




## வேண்டுகோள்

- ஸ்ரீ காஞ்சி மாமுனிவர் 1986ல் இந்த டிரஸ்டை ஸ்தாபிக்க அருள்பாலித்தார்.
- இந்த ஸ்தாபனம் தமிழ்நாட்டில் உள்ள பழைமையான கிராமக் கோவில்களில் பூஜை செய்யும், மாத வருமானம் ரூ.1500/-க்கும் குறை வாக உள்ள, அர்ச்சகர்களுக்கு மாத பண உதவி செய்து வருகிறது.
- பேரருளாளரின் ஆக்ஞைப்படி இந்த நற்பணிக்கு நன்கொடை அளிக்க வேண்டுகிறோம் - ரூ.4,000/-க்கு மேல் மாத மொத்த வருமானம் பெறுபவர்கள் தங்களது ஒரு மாத மொத்த வருமானத்தை *தங்கள் வாழ்நாளில் அவர்களுடைய சௌகர்யப்படி*, நன்கொடையாக கொடுத்து உதவ வேண்டும். மற்றவர்கள் தங்களால் இயன்றளவு கொடுக்கலாம்.
- நன்கொடைகளை க்ராஸ் செய்த காசோலை / டிமாண்ட் டிராப்டாக ***"KACHCHI MOODOOR ARCHAKAS WELFARE TRUST"*** என்ற பெயரில் சென்னையில் ஏதாவதொரு வங்கிக் கிளையில் பெறுமாறு நிர்வாக அலுவலகத்திற்கு அனுப்பவும்.
- தற்சமயம் இந்த டிரஸ்ட் 295* தேர்ந்தெடுக்கப்பட்ட அர்ச்சகர்களுக்கு மாத உதவித் தொகையாக ரூ. 400/-ஐ வங்கிகள் மூலமாக வழங்கி வருகிறது. (*பட்டாச்சாரியார்கள்- 63, பூசாரிகள் - 122, சிவாச்சாரியார்கள் - 110) தவிர ஆயுள் குழுக் காப்பீடும் தகுதியின்படி செய்து வருகிறது.
- ஒவ்வொரு வருடமும் அர்ச்சகர்களின் எண்ணிக்கை உயர்வதாலும், முதலீடுகளின் பேரில் வட்டி விகிதம் மிக வேகமாக குறைந்து வருவதாலும், **மூலதனத்தை அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவசியமாகிறது.** ஸ்ரீ காஞ்சி மஹானின் அருளாக்ஞையின்படி தங்களுடைய நன்கொடைகளை அனுப்பித் தரவேண்டி கேட்டுக் கொள்கிறோம்.

**C.V. Narasimhan, I.P.S., (Retd)**
பொறுப்புக் குழுவின் சேர்மன்.


பொறுப்பாளர்கள் :

திரு. K.S. லோகவிநாயகம், முன்னாள் தலைமை பொறியாளர், தமிழ்நாடு
திரு. S. ரகுநாதன், வழக்கறிஞர், சென்னை.
திரு. M.D. கோபால், General Manager, Philips, G.S.C. Dubai.
திரு. R. சுப்பிரமணியன், Bharat Electronics Ltd., Chennai
திரு. பிரகாஷ் R. பட், கௌரவ செயலாளர் மற்றும் பொக்கிஷதாரர்.


பின் குறிப்பு:

நன்கொடைகளுக்கு வருமானவரி சட்டப்பிரிவு 80 G-யின் கீழ் விலக்குண்டு. வெளிநாட்டு நன்கொடைகளை ஏற்க FCRA-ன் கீழ் (எண்: 075820173) பதிவு செய்யப்பட்டுள்ளது.



# சிந்தாமல் சிதறாமல்

ஓவிய ஆர்வமுள்ள மகனிடம் மளிகைக் கடையைக் கவனிக்கச் சொல்கிறார் கிராமத்து அப்பா. சென்னை ஓவியக் கல்லூரியில் படிக்க வேண்டுமென்கிறான் மகன். அப்பாவின் வெறுப்பைச் சம்பாதித்துக்கொண்டு ஓவியக் கல்லூரியில் சேருகிறான். இடையில் காதல்! இறுதியில், கிராமத்துக்கும், அப்பாவுக்கும் பெருமை சேர்த்து, காதலியைக் கைப்பிடிக்கும் வழக்கமான கதைதான்!

ஆனால், சொல்லும் விதத்திலும், கவிதைகளாகக் காட்சிகளை விவரிப்பதிலும் 'அட!' போட வைத்திருக்கிறார் அறிமுக இயக்குனர் ஷண்முகவேல்.

கல்லூரிக்குச் செல்கிற காதலி நிற்கும் பஸ் ஸ்டாண்டுக்கு எதிரில், தன் உணர்வுகளை ஓவியமாக ஒட்டி வைக்கும் நாயகன் அப்பாவின் ஐடியா, மென்மையான ஹைகூ. ஆனால் கிராமத்துத் தேவதையாக வரும் நந்திதா, நடிப்பை யாரிடமாவது கடனாகக் கூட வாங்கியிருக்கலாம்!

காமெடிக்கென்று கருணாஸ் இருந்தாலும், அந்தப் பெயரை அள்ளிக் கொண்டு போகிறார் இளவரசு.

"வெட்டிப் போட்டுட்டு பாளையங்கோட்டை ஜெயிலுக்குப் போறம்ல" என்று அடிக்கடி அவர் விடும் உதாருக்கு தியேட்டர் கலகலப்பாகிறது. இவருக்கு மனைவியாக வரும் லாவண்யா அப்படியே கிராமத்து 'அக்கா'வாகியிருக்கிறார்!

பார்த்த லொகேஷன்கள்தான் என்றாலும் கிராமத்துக் காட்சிகளை, கண்கள் நிறையத் தந்திருக்கிறார் ஒளிப்பதிவாளர்.

ஓவியக் கல்லூரியில் ஒரு வில்லன் முளைப்பதும், அவருக்கென்றே ஒரு சண்டைக் காட்சியைத் திணித்திருப்பதையும் ஜீரணிக்க முடியவில்லை.

கண்கள் முட்ட காதலோடு நாயகனுக்கு ஒரு தோழி கிடைப்பதும், நாயகனை ஒரு தலையாகக் காதலித்துக் கொண்டே நட்பாக (என்ன லாஜிக்டா சாமி?) அலைவதும், ஏகப்பட்ட படங்களில் பார்த்த அலுப்பு இதிலும்!

சிந்தாமல் சிதறாமல் வந்திருக்க வேண்டிய படம்!

- மிஸ்டர் லீ

ஒரு பைசா
செலவில்லாமல்
M.B.B.S. படிப்பை
அதுவும்
இராணுவ கல்லூரியில்
படிக்க நீங்கள்
என்ன செய்ய
வேண்டும்?

அதற்கான தேர்வில்
வெற்றி பெற வேண்டும்.

# எப்படி?

தமிழகத்திலேயே முதன் முதலாக K.K.அகாடமியின் செயின்ட் ஆண்டனி ஆர்மி ஸ்கூல் அதற்கான எல்லா விதமான சிறப்பு பயிற்சியையும் அளிப்பதினால் இந்திய அரசின் பாதுகாப்பு துறையின் கீழ் இயங்கும் இராணுவ கல்லூரி நடத்தும் நுழைவு தேர்வில் வெற்றி பெறும் வாய்ப்பை பெறுவீர்கள்.

**தேர்வு எழுத தகுதிகள் :**

| | | |
|---|---|---|
| கல்வி தகுதி | - | +2 படிப்பவர்கள் (அ) முடித்தவர்கள் / டிகிரி |
| வயது | - | 16 முதல் 24 வரை |
| பால் | - | ஆண் / பெண் |
| மதிப்பெண்கள் | - | +2 ( Physics, Chemistry, Biology-ல் ) 50% தனித்தனியாக 60% ( மூன்றையும் சேர்த்து ) |
| உயரம் | - | 142cm (பெண்) 157cm (ஆண்) குறிப்பு - Cut off Mark கிடையாது. |

**தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கான சலுகைகள் :**

- ரூ.15 லட்சம் ஸ்காலர்ஷிப்பில் படிக்கலாம்
- பயிலும் காலத்தில் உணவு, உடை, உறைவிடம் இரண்டாம் வகுப்பு இரயில் கட்டணம் மற்றும் படிப்பு செலவு இலவசம்.

**படிப்பு முடிந்தவுடன் :**

- ரூ 25,000 க்கு மேல் மாத சம்பளம்
- 10 லட்ச ரூபாய்க்கு இன்சூரன்ஸ்,
- 10 லட்ச ரூபாய்க்கு வீடுகட்ட வசதி இன்னும் பல.....

SPOTLIGHT

## St.ANTONY'S ARMY SCHOOL

A Division of KK ACADEMY (P) LTD
32, 1st Main Road, R.A.Puram,Chennai - 600 028.
Phone: 55682410, 55682411, Fax: 52060908
E - mail: KKacademy@vsnl.net

---

# பர்கின்சன்ஸ் மருத்துவ சேவையில்

## (PARKINSONS DISEASE)

# PARKINSONS CENTRE

**பர்கின்சன் வியாதியின் குணங்கள்:**

- மூளையில் **Basal ganglion** என்ற பகுதியில் செல்களில் சுரக்கும் **dopamine** என்ற ரசாயனம் குறைவதால் மூளை நரம்புகளின் செயல்திறன் குறைகிறது. இதனால் மூளையின் கட்டளை செயல்பட தாமதமாகிறது. மேலும்
- கை நடுக்கம்
- விறைப்புத் தன்மை
- தசைகளின் செயல்திறன் குறைதல்
- மற்ற வேகக் குறைபாடுகள்

**இரண்டு வகையான ட்ரீட்மென்டுகள்**

1. எங்கள் ஆஸ்பத்திரியில் 6 விதமான இயற்கை சிகிச்சைகள் தருகிறோம். மேலும் பர்கின்சன் ஹெர்பல் லேகியம் மற்றும் கேப்சூல் தருகிறோம்.
2. எங்களிடம் நேரில் வந்து சிகிச்சை எடுத்துக் கொள்ள முடியாதவர்களுக்கு, நோயாளியின் தற்போதைய மருத்துவ நிலையை தெரிந்து கொண்ட பின் பர்கின்சன் ஹெர்பல் லேகியமும், கேப்சூல்களும் அனுப்பி வைக்கிறோம். (எங்கள் பர்கின்சன் லேகியம் அமெரிக்கா, ஸ்விட்சர்லாந்து நாடுகளுக்கு அனுப்பி வருகின்றோம். படுக்கையில் இருந்தவர்கள் எழுந்து உட்கார்ந்து, நடக்கிறார்கள்.)

இதர விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

## ADYAR NATURE CURE CENTER™

Regd. Hospital

No. 6, SECOND CROSS STREET, KASTURBHA NAGAR, ADYAR, CHENNAI - 20.
Ph : 2441 3399, 2440 2470. Fax: 044-2491 6650
E-mail: adyarnaturecure@yahoo.com, web: www.adyarnaturecure.com

குறிப்பு சாதா, A/C தங்கும் அறைகள் மற்றும் ஜெனரல் வார்டு, கலர் டி.வி., போன் வசதியுடன் கிடைக்கும். பிராமணர்களால் தயார் செய்யப்பட்ட சைவ உணவு மட்டும் உண்டு. முன்பதிவு அவசியம்.











# இந்த உற்சாக ரியாக்ஷன் எதைப் பார்த்து?

51ம் பக்கம் பார்த்து தெரிஞ்சுக்கலாம்!

படங்கள்: மீடியா ராமு

தமிழகத்தில் முதல் முறையாக



# சென்னை படகுத் திருவிழா

விறு விறுப்பான போட்டிகள், கிஷ்கிந்தாவில் 16, 17, 18 ஜனவரி 2004

மேதகு தமிழக ஆளுநர் P.S.ராமமோகன் ராவ் துவக்கி வைக்கிறார்

**கட்டணம் : பெரியவர் ரூ.50/-**


**சிறியவர் ரூ.40/-**

பிற்பகல் 3மணி முதல் 7மணி வரை

ரூ.10/- மதிப்புள்ள சிற்றுண்டி இலவசம்

நுழைவு மற்றும் கேளிக்கைகள், படகுப்போட்டி
இன்னிசை விருந்து, நடனநிகழ்ச்சி, பிரமிப்பூட்டும்
லேசர் மேஜிக் மற்றும் வானவேடிக்கைகள்

Kishkinta
India's No.1 Theme Park
Tambaram, Chennai




இப்பொழுது வி.சி.டி.யில் (VCD)
வெளிவந்துள்ளது!

## ஸ்ரீ வெங்கடேச வைபவம்

(ஸம்ஸ்கிருதத்தில்)

இதுவரையில் நீங்கள் பார்த்திராத
திருப்பதி காட்சிகளுடன்...

- ஸ்ரீ வெங்கடேஸ்வர சுப்ரபாதம்
- ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸஹஸ்ரநாமம்
- ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்தோத்ரம்
- ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹாத்மியம்

ரூ. 150/- மட்டுமே!

Geethanjali

**SUPERAUDIO (MADRAS) Pvt.LTD.,**
**# 17, Raheja Complex, 834, ANNA SALAI,**
**CHENNAI - 600 002. INDIA.**
**www.musicandchants.com supertape@yahoo.com.**

**For Video CD Contact : Phone : 52140067 & 68.**



**ராஜாராம் :** காலையில் உடற்பயிற்சி செய்து முடித்ததும், உதயசூரியனின் இளஞ்சூடு முகத்தைத் தாக்க, பக்கத்தில் ரேடியோ 'மிர்ச்சி'யில் லேட்டஸ்ட் பாட்டு ஒலிக்க, மலாய் டீ அடிக்கும்போது... ஜில்வென்று மனத்தில் ஏறும் உற்சாகத்துக்கு ஈடு இணை எது?



*"உங்களுக்கு உற்சாகம் தரும் விஷயம் எது?" என்று சில ஜெனெக்ஸ் இளசுகளிடம் கேட்டோம். தடபுடல் உற்சாகம் கரை புரள, அவர்கள் தந்த பதில்கள் இதோ...*

**சுபா :** தோழிகளோடு சாட்டிங் செய்வதில் உள்ள ஆனந்தம் வேறெதில் வரும்? அதுவும் எங்களுக்குப் பிடித்த ஹீரோ மாதவனின் தலையை உருட்டி, அவரை அனலைஸ் செய்யும்போது, நேரம் போவதே தெரியாமல் அரட்டைக் கச்சேரி நீளும்.



**தனஞ்செய் :** சான்பிரான் ஸிஸ்கோ சாலைகளில் தலை தெறிக்க கார் ஓட்டிக் கொண்டு போகும்போது, உற்சாகத்தில் விஸில் அடிப்பேன். அடுத்ததாக எனக்குப் பிடித்தது ஹைக்கிங் போவது. மலைகளிலும் பள்ளத்தாக்குகளிலும் நடப்பதற்கென்று போடப்பட்டிருக்கும் பசுமை சூழ் பாதைகளில் கண்டபடி நடந்து கொண்டே இருப்பதுதான் ஹைக்கிங். காதில் வாக்மேனிலிருந்து ஒலிக்கும் பாம்பே ஜெயஸ்ரீயின் குரல், போனஸ் உற்சாகம்.






**ஸ்ரீமதி** : எங்கள் மொட்டை மாடியில் நான் வைத்துள்ள ரோஜா, மல்லிச் செடிகளோடு காலையில் தண்ணீர் விட்டுக் கொண்டே பேசுவதுதான், என்னை தினமும் உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கிறது. வம்பில்லாத, மனத்தைக் கொள்ளை கொள்ளும் இந்த சந்தோஷத்தைக் காட்டிலும் மேலானது ஏதேனும் உண்டா? நல்ல சினிமா பார்த்தாலும் உற்சாகமா இருக்கும்.

# மலாய் டீ, மிளகாய் பாட்டு!



**சங்கீதா** : உற்சாகக் குறைவா? ஆடுவேன்! நான் பரத நாட்டிய டான்ஸர். கால்களும், கையும் முந்நூற்று அறுபது டிகிரியில் பறந்து தெறிக்க, மனசு இலேசாகி முகத்தில் பூக்கும் புன்னகை! ரிலாக்ஸாகி விடுவேன். பத்மா சுப்ரமணியம், அலர்மேல் வள்ளியின் நடனமும் என்னைச் சந்தோஷப்படுத்தும்.



**ரம்யா** : எனக்கு சந்தோஷத்தையும், உற்சாகத்தையும் கொடுப்பது ஃப்ரெண்ட்ஸைக் கலாய்ப்பதுதான். தோழிகள் கிடைக்கவில்லை என்றால், பிரஷ்ஷைப் பிடித்து பெயிண்டிங்கில் இறங்கிவிடுவேன். கவுண்டமணி, விவேக் காமெடி கேட்டாலும் தனி உற்சாகம் கிடைக்கும்.

## கொத்துக் கொத்தாக முடி கொட்டுவதையும் வழுக்கையையும் தவிர்க்க இயலுமா?

நிச்சயமாக இயலும்! வழங்குகிறோம்
புதிய, மேம்படுத்தப்பட்ட

# ஹேர் ப்ளஸ் ஹேர் டானிக்




### அழகான கேசம் ஆரோக்கியம் பேசும்

ஹேர் ப்ளஸ் ஹேர் டானிக் இந்தியாவின் பாரம்பரிய மிக்க சித்த மருத்துவ முறையில் கிடைத்தற்கரிய மூலிகைகளின் பசுமையான சாறு மற்றும் இயற்கை மூலப் பொருட்கள் கொண்டு மிகவும் பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. ஹேர் ப்ளஸ் ஹேர் டானிக் எவ்வளவு தீவிரமாக மற்றும் கொத்துக் கொத்தாக முடி கொட்டினாலும் பதினைந்தே நாட்களில் தடுத்து நிறுத்தும் ஆற்றல் கொண்டது. மேலும் பூச்சி வெட்டு, பொடுகு, இளநரை, செம்பட்டை, தலை அரிப்பு, தலையில் செதில் செதிலாக வெள்ளை நிறத்தில் தோன்றுதல், தீவிரமான நோய்த் தொற்றுதல்களுக்குப் பிறகு ஏற்படும் கேச இழப்பு, பெண்களுக்கு பிரசவத்திற்குப் பிறகு ஏற்படும் கேச இழப்பு முதலியவற்றைப் போக்கி அடர்த்தியான கருங்கூந்தல் செழித்து வளரச் செய்கின்றது. சித்த வைத்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்டது. எந்தவிதமான பக்க விளைவுகளும் இல்லாதது.

**கீழ்க்கண்ட இடங்களில் மட்டும் கிடைக்கும்:**

**சென்னை:** மெட்ராஸ் மெடிக்கல்ஸ், **வளசரவாக்கம்**, துளசி மெடிக்கல்ஸ் **நங்கநல்லூர்**, போன்: 22343308 அமுதா மெடிக்கல்ஸ், **பழவந்தாங்கல்**, போன்: 22334520 R.V மெடிக்கல்ஸ், **ஆதம்பாக்கம்**, போன்: 22444441. ஸ்ரீராம் மெடிக்கல்ஸ், **ஜாபர்கான்பேட்**, போன்: 24745792, எவரெஸ்ட் மெடிக்கல், ராஜாராம் **மேத்தா நகர்**, போன்: 23743704. ஸ்ரீ பாலமுருகன் மெடிக்கல், **வில்லிவாக்கம்**, போன்: 26170560. ஸ்ரீலெட்சுமி மெடிக்கல், **அயனாவரம்**, போன்: 9841237679. மீனா மெடிக்கல்ஸ், **பாடி**, போன்: 52017065. K.J. மெடிக்கல், **ஆவடி**, போன்: 26380245, வேலு பார்மஸி, **M.G.R நகர்**, போன்: 24854011. லெட்சுமி மெடிக்கல், **திருவள்ளூர்**, போன்: 264580. வில்லியம் பார்மஸி, **கோடம்பாக்கம்**, போன்: 24727983. அபிராமி மெடிக்கல், **வியாசர்பாடி**, முருகன் மெடிக்கல், **பெரம்பூர்**, போன்: 25512691. சாய் மெடிக்கல், **நுங்கம்பாக்கம்**, போன்: 28211225. ஷிபா மெடிக்கல், **பெசன்ட் நகர்**, போன்: 24902975. மாருதி பார்மா, **வேளச்சேரி**, போன்: 22436243 முதுவை மெடிக்கல், **பல்லாவரம்**, போன்: 22410365 எஸ்.கே. பார்மஸி, **போரூர்**, போன்: 24768622. கிங்ஸ் மெடிக்கல், **ஆழ்வார் திருநகர்**, மாலா மெடிக்கல், **விருகம்பாக்கம்**, போன்: 24832238. முத்து பார்மஸி, **சாலிக்கிராமம்**, போன்: 23767377. தனா பார்மஸி, **திருமுல்லைவாயல்**, போன்: 26381129. வைத்தியா மெடிக்கல், **செந்தில் நகர்**, போன்: 26371298, S.S. கெமிஸ்ட்ஸ், ரவுண்டானா, **அண்ணாநகர்**, போன்: 26268010 ராசி மெடிக்கல்ஸ், **அமிஞ்சிகரை**, போன்: 26461762. முத்து மெடிக்கல், **அரும்பாக்கம்**, போன்: 24750910. ஸ்ரீ லெட்சுமி மெடிக்கல், **தேனாம்பேட்டை**, போன்: 24331854. சபா மெடிக்கல்ஸ், **மேற்கு மாம்பலம்**, போன்: 24843478. பழனி மெடிக்கல்ஸ், **அம்பத்தூர்**, போன்: 26581301. கருப்பையா பார்மஸி, **அம்பத்தூர்**, ஸ்மித் ஸ்டாக்கிங் & கோ, **N.S.C போஸ் ரோடு**, போன்: 25383171. ஆண்ட்டி அங்கிள் மெடிக்கல், **அடையார்**, போன்: 24413758. சாம் மெடிக்கல், **சைதாப்பேட்டை**, போன்: 24331845. வெங்கடேஸ்வரா மெடிக்கல், GST ரோடு, **குரோம்பேட்டை**, போன்: 22211719 சரவணா மெடிக்கல்ஸ், **மேற்கு தாம்பரம்**, போன்: 22266813. அடைக்கப்பா மெடிக்கல், வெங்கடேச அக்ரஹாரம், மைலாப்பூர், போன்: 24933293. சேதுராம் & கோ, **R.A. புரம்**, போன்: 24334160. லோகு பார்மஸி, **K.K. நகர்**, போன்: 24747385. ஸ்ரீ குமரன் மெடிக்கல், **வடபழனி**, போன்: 24724794, சரவணா மெடிக்கல், **கோடம்பாக்கம்**, போன்: 52134145. குப்பர் மெடிக்கல்ஸ், **திருவான்மியூர்**, போன்: 24451944.

**செங்கல்பட்டு:** ஷிபா மெடிக்கல்ஸ், போன்: 24451944. **மதுராந்தகம்:** சக்தி ஆனந்தா மெடிக்கல்ஸ், போன்: 223800 **திண்டிவனம்:** செந்தில் மெடிக்கல்ஸ், போன்: 224704 **காஞ்சிபுரம்:** தமிழ்நாடு மெடிக்கல்ஸ், போன்: 222285 **விழுப்புரம்:** ஸ்டார் மெடிக்கல் ஏஜென்ஸீஸ், போன்: 222758 **கடலூர்:** மஹாராஜா மெடிக்கல்ஸ், போன்: 223705 **நெய்வேலி:** ஜெயா மெடிக்கல் ஸ்டோர்ஸ், போன்:252241 **வேலூர்:** ராஜன் மெடிக்கல்ஸ், போன்: 252241 **திருப்பத்தூர் (வேலூர்):** மதுரா மெடிக்கல்ஸ் போன்: 220699 **திருவண்ணாமலை:** மஹாராஜா மெடிக்கல்ஸ், போன்: 223707 **கள்ளக்குறிச்சி:** ரங்கா மெடிக்கல்ஸ், போன்:223559. **திருச்சி:** வாசன் மெடிக்கல் ஹால், அனைத்துக் கிளைகள், போன்: 2704213, 2412966, 2700826, **தஞ்சாவூர்:** ஸ்டேட் மெடிக்கல் மார்ட், போன்: 274442,

## டீனேஜ் உற்சாகம்...

**சுப்ரஜா :** நான் ஒரு ஸ்போர்ட்ஸ் வுமன். கிரிக்கெட்டர்! உலகில் நடக்கும் எல்லா கிரிக்கெட் மாட்சுகளையும் தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டே இருப்பதுதான், எனக்குப் பிடித்தமான ஒன்று. இந்தியா ஜெயித்தால் மனம் கூத்தாடும். ஆனால் தற்போது இது அடிக்கடி நடக்காததுதான் கவலையை உண்டாக்குகிறது.



**சுரேஷ் :** நான் கஷ்டப்பட்டு செய்து முடித்த வேலையை மற்றவர் பாராட்டும்போது உண்டாகும் உற்சாகத்துக்கு எல்லையே கிடையாது. அதனால் கிடைக்கும் டானிக், என் முன்னேற்றத்துக்கு மிகவும் உதவும். சொல்ல மறந்து விட்டேனே! டகுல் பாச்சா, ஜில்பான்ஸி காமெடி செய்யறதுன்னா தனி ஜாலி!



- ஸ்ரீநிவாசன்

படங்கள் : மீடியா ராமு


231949, வாசன் மெடிக்கல் சென்டர் போன்: 270096, 278207. **கும்பகோணம்:** தி. பாப்புலர் டிரக் ஹவுஸ், போன்: 2422028 **மயிலாடுதுறை:** தாணி டிபார்ட்மெண்ட் ஸ்டோர் போன்: 222968 **திருவாரூர்:** சரோ மெடிக்கல்ஸ், போன்: 240525 **நாகைப்பட்டினம்:** நாகை மெடிக்கல் ஸ்டோர் போன்: 242034 **பட்டுக்கோட்டை:** ஹமீதியா மெடிக்கல்ஸ், போன்: 252504 **மன்னார்குடி:** மீனா மெடிக்கல்ஸ், போன்:222665 **அறந்தாங்கி:** தமிழ்நாடு மெடிக்கல்ஸ், போன்: 222082 **புதுக்கோட்டை:** விநாயகா பார்மஸி, போன்: 221934 **கரூர்:** பாவா மெடிக்கல்ஸ், போன்: 240721 **திண்டுக்கல்:** KM மெடிக்கல் ஸ்டோர்ஸ், போன்: 2433104 **பழனி:** ஜெயா மெடிக்கல் மார்ட், போன்: 242289 **உடுமலைப்பேட்டை:** ஜம் ஜம் மெடிக்கல்ஸ், போன்: 224563 **பொள்ளாச்சி:** ராமநாதன் மெடிக்கல்ஸ், போன்: 2227161 **திருப்பூர்:** பாவா மெடிக்கல் மார்ட், போன்: 2240610 கீதா மெடிக்கல் ஸ்டோர்ஸ், போன்: 2241311 கீதா பார்மஸி, அவிநாசி ரோடு, போன்: 2206069 **ஈரோடு:** ஸ்ரீ கண்ணன் மெடிக்கல் ஏஜென்ஸி, போன்: 222373 **கோயம்புத்தூர்:** சுந்தரம் பார்மஸி, சாய்பாபா காலனி, போன்: 2445830 ஸ்ரீ கண்ணன் டிபார்ட்மெண்ட் ஸ்டோர், போன்:2231596 காசிநாத் & கோ, டவுன் ஹால், புவனா மெடிக்கல், பங்கஜா மில் ரோடு, அழகு பார்மஸியின் அனைத்துக் கிளைகள். **சேலம்:** சாம்ரோசு பார்மஸி, போன்:2264816 ரோசு பார்மஸி, போன்: 2265380 **தர்மபுரி:** விஜயலெட்சுமி மெடிக்கல்ஸ், போன்:260222 **ஹோசூர்:** மூர்த்தி மெடிக்கல் ஸ்டோர்ஸ், போன்: 242201 **மதுரை:** தனலெட்சுமி ஏஜென்ஸீஸ், வடக்குச் சித்திரை வீதி, போன்: 2631582 தனலெட்சுமி ஆயுர்வேத மருந்தகம், ஷாப்பிங் காம்ப்ளக்ஸ், கோரிப்பாளையம் அபிராமி மெடிக்கல்ஸ், கோரிப்பாளையம், ராமகிருஷ்ணா மெடிக்கல்ஸ், திண்டுக்கல் ரோடு புதூர் மெடிக்கல்ஸ், ஸ்ரீநிவாசா மெடிக்கல்ஸ், ஆரப்பாளையம் கிராஸ் **காரைக்குடி:** ரோஜா மெடிக்கல்ஸ், போன்: 2438471 **தேனி:** ராஜா ராம் மெடிக்கல்ஸ், போன்: 253401 **பரமக்குடி:** ஜனதா மெடிக்கல் மார்ட், போன்: 225364 **இராமநாதபுரம்:** நியூ பாம்பே மெடிக்கல்ஸ், தேவிப்பட்டணம் ரோடு, போன்: 224529 **ராஜபாளையம்:** V.S. திருப்பதி ராஜா சன் மெடிக்கல்ஸ் குமரன் மெடிக்கல்ஸ், போன்: 2522289 **அருப்புக்கோட்டை:** K.M மெடிக்கல் ஸ்டோர்ஸ், போன்:2220612 **விருதுநகர்:** சண்முகம் மெடிக்கல் ஹால், போன்:2346072 **கோவில்பட்டி:** சாந்தி மெடிக்கல் ஸ்டோர்ஸ், TMB பேங்க் அருகில், **தூத்துக்குடி:** சரவணா மெடிக்கல்ஸ், டெலிகிராப் ஆபீஸ் ரோடு, போன்: 2326340 **உசிலம்பட்டி:** ஸ்ரீ சரவணா மெடிக்கல்ஸ், திருப்பூர் மெடிக்கல்ஸ், **சிவகங்கை:** ஸ்ரீ பாலாஜி மெடிக்கல்ஸ், போன்:244934 **தேவகோட்டை:** செல்வா மெடிக்கல்ஸ், போன்:2373555 **திருநெல்வேலி:** செயிண்ட் மேரீஸ் மெடிக்கல் ஸ்டோர்ஸ், போன்:2339044 **நாகர்கோவில்:** தேவ் மெடிக்கல்ஸ் போன்: 2232096

Stockist for Chennai Area: Sri Balaji Agency, Phone: 044-26581880
Stockist for Kovai & Salem Area : Saradha Pharma Distributors, Ph: 0422-2430448
Stockist for Trichy & Thanjavur Area : Ramana Agency, Ph: 0452 - 2345149
Stockist for Madurai & South Tamilnadu : Sri Nagappa Agency, Ph: 2349354
Dhanalakshmi & Co, Ph: 2621421



**எ**ன்றும் போலத்தான் பொழுது விடிகிறது. என்றாலும் அந்த வீட்டைப் பொறுத்தவரை அது ஒரு முக்கியமான நாளாக இருக்கிறது.

"பத்மா, எல்லாரையும் சீக்கிரமாக எழுப்பிவிடு. உனக்குக் கடைக்கு ஏதேனும் போகணும்னாலும் சொல்லு. இதோ காபி குடித்துவிட்டு, போய்ட்டு வந்துடறேன்."

# கிரீடத்தின்



"இல்லை அப்பா எல்லாம் இருக்கு. ஆனாலும் எல்லாமே இன்னிக்கு நல்லபடியா முடியணுமேனு இருக்கு" மலைப்புடன் உள்ளே செல்கிறாள் பத்மா. அவளை கனிவாகப் பார்க்கிறார் மாமனார் மாத்ருபூதம். கை தன்னிச்சையாய் வழுக்கைத் தலையை தடவிக் கொள்கிறது.

**மா**த்ருபூதம் ஓய்வு பெற்ற ரெயில்வே அதிகாரி. அடிக்கடி அவரது கட்டுரைகள் மாத, நாளிதழ்களில் வரும். ஆனால் வீட்டைப் பொறுத்த வரை அவரது அறிவுரைகளும், அனுபவங்களும், எழுத்துத் திறமையும் இரண்டாம் பட்சம்தான். சுந்து பத்மாவின் மகன். திருமணத்துக்கு இருக்கும் மைத்துனர் ரவி - எம்.சி.ஏ. பண்ணுகிறான். நாத்தனார் டிகிரி முடித்துவிட்டு வேலை தேடும் படலத்தில் இருக்கிறாள். கணவன் மூர்த்தி-மல்டி - நேஷனல் கம்பெனியின் அஸிஸ்டெண்ட் மானேஜர். அடுத்த பதவி உயர்வுக்கு அலைபாய்ந்து கொண்டு இருக்கிறான்.

ஆச்சா அறிமுகம். இன்று என்ன முக்கிய நாள் என்று கேட்

# மெல்...

கிறீர்களா?

மூர்த்தியின் டைரக்டர் இன்று சென்னைக்கு வருகிறாராம். அவரது மனசில் இரண்டு படிகளாவது ஏறினால்தான் இவருக்கு பிரமோஷன் கிடைக்குமாம். இல்லையென்றால், அடுத்த நபர் சந்துருவுக்கு பிரைஸ் அடித்துவிடும்.

மச்சினன் ரவிக்கு எம்.ஸி.ஏ.வில் கடைசிப் பரீட்சை.

நாத்தனார் நந்தினிக்கு இன்றைக்கு முக்கியமான இன்டர்வியூ.

சந்துவுக்கு இன்று கணக்குப் பரீட்சை. ராத்திரி பத்து மணி வரை பத்மா அவனுடன் போராடி இருக்கிறாள். பலன் எப்படியோ தெரியவில்லை.



பரபரவென்று கடிகாரம் சுற்றி சுற்றி ஓடுகிறது. ஒவ்வொருவராய்க் கிளம்பியாயிற்று. மாமியார் கையில் எண்ணெயுடன் கோயிலுக்குக் கிளம்புகிறார்.

"என்ன பங்கஜம், கோயிலா?" கண்ணாடியைச் சரி செய்தவாறு கேட்கிறார் மாத்ருபூதம்.

"ஆமாம். எனக்குத்தானே அஞ்ஞானம். குழந்தேள் எல்லாம் வெற்றியோடு திரும்பணும்னு மனசு அடிச்சுக்கிறது. உங்க பாடு பரவாயில்லை. ஏதேனும் எழுதிக் கிழித்து பத்திரிகை ஆபீஸுக்குப் போட வேண்டியது. வருதோ - இல்லையோ - பிரம்மாவுக்குதான் வெளிச்சம். போஸ்ட் ஆபீஸ்காரன் சாப்பிடறான்"

தோளில் இடித்தவாறு செல்லும் அவளை பிரமிப்புடன் பார்க்கிறாள் பத்மா.

மாலை மூன்றரை மணிக்கு, மாமனார் மாமியார் கையில் காபி தம்ளர்களைக் கொடுத்துவிட்டுத் திரும்பியவளை பள்ளிக்கூட வேன் சப்தம் அழைக்கிறது.

"நல்லா செஞ்சேன்மா. எண்பது மார்க் வரை வரும்.. ஆனா.." என்று இழுக்கிறான் சந்து.

"என்னாச்சுடா?"

"இன்னிக்கு பெல்ட் போட மறந்துட்டேன். பத்து மார்க் மைனஸ் பண்ணிட்டாங்க."

ஜாலியாகச் சொல்கிறான் சந்து.

"அடேய்... கார்த்தால டேபிள் மேலே செட்டாக எல்லாம் எடுத்து வைச்சேனே.."

தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் சந்துவுக்கு. சட்டென்று தாத்தாவின் உருவம் கண்களில்பட,

"ஆமாம்மா, காலையில் கிளம்பறச்சே தான் தாத்தா முக்கியமாக ஒரு கவரை எங்கிட்ட கொடுத்து, 'போற வழியில் போஸ்ட் பண்ணுடா கண்ணு'ன்னு கெஞ்சறார். அதே ஞாபகமாக கிளம்பினேனா - பெல்ட்டை மறந்துட்டேன்."

ஸ்கூட்டர் சத்தம் வாசலில். ரவி வந்தாச்சு. "என்ன ரவி, மூன்றரைதானே ஆகுது? உனக்கு அஞ்சு மணி வரை பரீட்சை இல்லையோ?"

கேட்டவாறு அவனுக்குக் காபி கலக்க உள்ளே செல்கிறாள் பத்மா.

"விடுங்கோ மன்னி. இன்னிக்கு நான்

ஆர்.கமலா

பரீட்சையே எழுதலை" அலுப்புடன் சொல்லும் ரவியைப் பார்த்து, அனைவருமே அதிர்ந்து போகிறார்கள்.

"ஹால் டிக்கெட் எடுத்து வைச்சுக்க மறந்துட்டேன் மன்னி. எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தேன். ஊஹூம். கொஞ்சம்கூட மசியலை. வெறுத்துப்போய் காலார நடந்து லைப்ரரிக்குப் போயிட்டு வரேன். என்ன பண்றது, இனிமே அடுத்த செமஸ்டர்தான்." ஆறு மாத காலம் அவனைப் பொறுத்த வரை என்னு.

மாமனார் நிதானமாகக் கேட்கிறார். "இவ்வளவு பொறுப்பில்லாமலா இருப்பாய்?"

"ஆமாம்பா - நீ இப்ப சொல்லு. கார்த்தால கிளம்பற அவசரத்திலே "வாசல்லே சகுனம் சரியாயிருக்கா பாருடானு நீ அமர்க்களம் பண்ணினே" என்று குதித்தான்.

"அப்பா இண்டர்வியூக்குப் புடைவையில் போனால் மதிப்பாய் இருக்கும்னு சொன்னாரா, சுடிதாரில் இருந்து புடைவை மாற்றிக் கொண்டு போனதில் பஸ் போயிடுச்சு மன்னி. இன்டர்வ்யூக்கு லேட்."

புடைவையைத் தூக்கிபிடித்த வாறு வருகிறாள் நந்தினி.

"ஆமாம் அவர் பேச்சைக் கேட்டுக்கிட்டு நீ புடைவை மாத்திக்கறச்சேயே நினைச்சேன். முதல் முதலாய் புடைவை கட்டிக்க இன்றுதான் நான் பார்த்தியோ - நீ ஃப்ளீட் வைச்சு வைச்சு கட்டிக்கறச்சேயே நீ லேட்தான்னு தோணிச்சு. இந்த மனிதரும் வாயை வைச்சுக்கிட்டு சும்மா இருக்காரா பாரேன்." பங்கஜம் புகுந்து சமயம் கிடைத்தது என்று புலம்புகிறாள்.

தமது டெஸ்க், பேனாவுடன் விரக்திப் புன்னகையுடன் வாசல் வராண்டாவுக்கு இடம் மாறுகிறார் மாமா.



அடுத்தடுத்த அதிர்ச்சிகளில் கலங்கியிருந்த பத்மா தலைவலி தைலம் தடவியவாறு, கணவனும் வந்து விடட்டும் என்று சோபாவில் உட்கார்ந்து கொள்கிறாள்.

'தொப்' என்று மூர்த்தியின் ப்ரீஃப் கேஸ் அவள் அருகே வீசப்படுகிறது.

"எல்லாம் போச்சு. ஜி.எம். போஸ்ட் அவ்வளவுதான்" ஆயாசமாக வந்து உட்காருகிறான் மூர்த்தி.

"என்ன ஆச்சு?"

"டைரக்டரைச் சந்தித்து அழைச்சுக்கிட்டுப் போலாம்னு என்று ஏர்போர்ட் போலேனோல்லியோ. அவர் பெங்களூர் ட்ரிப்பை கான்ஸல் செஞ்சுட்டு, சென்னை வந்துட்டாராம். நேராக ஆபீஸ் போயிருக்கார். அந்த கடங்காரன் சந்துரு என்னிக்கும் இல்லாத திருநாளாய் எட்டரைக்கே வந்து உட்கார்ந்துக்கிட்டு நல்லா ஐஸ் வச்சுட்டான். நான் டாக்ஸி பிடிச்சு ஆபீஸ் போறச்சே மணி பதினொன்னு. என்னை அவர் பார்த்த பார்வை இருக்கே - குலை நடுங்கறது எனக்கு. இன்னிக்கு முழுக்க அவன்தான் அவருக்கு சிஷ்யப்பிள்ளை. எனக்கு இனி சான்ஸே இல்லை."

"உங்களை யாரு ஏர்போர்ட் போகச் சொன்னா. டைரக்டரோட டூர் விஷயம் தெரியாமல் நீங்க ஏன் அலையணும்."

"அப்பாதான் சொல்லுவார். அந்த

நாளில் நாங்கள் எல்லாம் ஆபீஸர்ஸ் வந்தா ரயில்வே ஸ்டேஷனில் மாலை போட்டு வரவேற்போம். அவங்களுக்கும் குஷியா யிடும்னு!"

ஆசையெல்லாம் நிராசையாகி நிற்கும் குடும்பத்து அங்கத்தினர்களைப் பார்க்க பார்க்கப் பத்மாவுக்கு மனசெல்லாம் வலிக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக - வழுக்கைத் தலைநிறைய அம்புகள் வீசப்பட்ட மாமனாருக்காக அவள் மனசு இரங்குகிறது.

டெலிபோன் அழைக்கிறது. "ஹலோ... இது மாத்ருபூதம் சார் வீடுங்களா?"

"ஆமாம். யார் பேசறது?"

"'வழிகாட்டி' பத்திரிகையிலிருந்து பேசுகிறோம். எங்க பொன்விழா போட்டியில் மாத்ருபூதம் எழுதிய 'பச்சை இலைகளே' கட்டுரை, முதல் பரிசாக ஐம்பதாயிரம் ரூபாய் பெற்று இருக்கிறது!"

"கங்கிராட்ஸ் அப்பா" தாத்தாவின் தலையில் தைத்த அம்புகள் நிமிட நேரத்தில் கிரீடமாகிறது.

"எனக்கு அப்பவே தெரியும்டா குழந்தை. இவரிடம் எத்தனையோ நல்ல விஷயங்கள் இருக்கு. ஒரு நாள் எல்லாருக்கும் புரியவரும்னுதான் இருந்தேன்!"

கட்சி மாறின முதல் எம்.எல்.ஏ.வாக பங்கஜம் மாறுவதைப் பார்க்க வேடிக்கையாயிருக்கிறது.

துக்கமும் சந்தோஷமும் ஒரே நாளில் புரட்டிப் போட்ட அசதியில் சமைக்க முடியவில்லை பத்மாவால்.

"இன்னிக்கு இட்லி சட்னி சாப்பிட்டுடலாமே. அரை மணியில் மொத்தமாக வார்த்துடறேன். ப்ளீஸ். எல்லாரும் ஒண்ணாகவே டேபிளுக்கு வந்துடுங்கோ!"

எல்லார் தட்டுகளிலும் இட்லிகளை வைத்து சட்னியை ஊற்றுகிறாள்.


"தூ... தூ..!" குரல் கொடுக்கிறான் சந்து. "ஏ, அம்மா. இட்லியிலே உப்பே இல்லை"

அதிர்ந்து போய் மாமியாரைப் பார்க்கிறாள் பத்மா. மாவை அரைத்து வைத்தது அவர்தானே.

அசடு வழிகிறது பங்கஜம் முகத்தில். உப்புப் போட மறந்துவிட்டது, மனசுக்கு கஷ்டமாயிருக்கிறது. என்றாலும் தப்பிக்க நினைக்கிறாள் அவள்.

"அதானே. மாவை வழிச்சேனா. உடனே உங்க மாமனார் கொல்லையிலிருந்து கத்தறார். பங்கஜம், மூன்றாம் பிறை வந்திருக்கு சீக்கிரம் வா, சட்னு மறைஞ்சிடும்னு. அப்படியே மாவை மூடி வைச்சுட்டு போனேனா.. உப்புப் போட... மறந்தேபோச்சு"

இன்னுமொரு குட்டி அம்பு மாமனாரின் கிரீடத்தின் மேலே ஒட்டிக் கொள்கிறது. ●





# பணமழை!

## ஆஹா! ரூ.10,000 பரிசு!

**ஆஹா ரூ.10,000 (5) குவிஸ் போட்டி முடிவுகள்.**

என்னங்க, கூப்பன்களை இப்படிக் குவிச்சிட்டீங்க! எடுக்க எடுக்க, அடுக்க, அடுக்க, குறையவே மாட்டேங்குது! உங்க அதீத ஆர்வத்துக்கு சபாஷ்! ஆதரவுக்கு ரொம்ப ரொம்ப தாங்க்ஸ்!

இந்த 5 வது போட்டியில் பரிசை வென்றவர்:

**எம்.கே.என். ரஞ்சனி,**
**எண்.24, வி.எஸ்.கே.என் நகர்,**
**காவேரிப்பட்டினம் 635112.**

1. ஜே.எம். சுந்தரம், சென்னை - 87.
2. டி. ரவிக்குமார், எட்டையபுரம்.
3. லக்ஷ்மி ஜெயராமன், சென்னை - 33.
4. கே. சிவாஜி ராவ், திருச்சி - 8.
5. என். கீதா, கோவை - 5.
6. விசாலாட்சி, திருச்சி - 1.
7. பி. பரத்குமார், வேலூர்.
8. நா. ராஜேஸ்வரி, சென்னை - 34.
9. கே. தெய்வசிகாமணி, சென்னை - 30.
10. என். கணேசன், ஆலங்காயம்.
11. எம். சுமதி, அரன்மனைப்புதூர்.
12. கே. தெய்வ சிகாமணி, சென்னை - 5.
13. ஜெ. பால குமாரன், வேட்டைக் காரன்புதூர்.
14. கே. சம்பத்குமார், சென்னை - 114.
15. பி.ஜே. விக்னேஷ்வரி, வேட்டைக் காரன்புதூர்.
16. ஜி. கலாவதி, சர்க்கார்பதி.
17. எஸ். அகிலாண்டேஸ்வரி, சென்னை - 87.
18. எஸ். ராகவன், கிழக்கு தாம்பரம்.
19. பி.ஜே. குணசுந்தரி, சர்க்கார்பதி.
20. பி. ஜெயப்பிரகாஷ், சேத்துமடை.

**ஆஹா! 10,000**
**குவிஸ் போட்டி 5க்கான விடைகள்:**

1. தமிழில் வெளிவந்த முதல் சரித்திர நாவல் **பார்த்திபன் கனவு.**
2. அமெரிக்காவின் சுதந்திரதேவி சிலையை அந்நாட்டுக்குப் பரிசாகக் கொடுத்த நாடு **பிரான்ஸ்.**
3. இரண்டாவது உலகப் போரில் அணுகுண்டுத் தாக்குதலுக்கு உள்ளான முதல் ஜப்பானிய நகரம் **ஹிரோஷிமா.**
4. ஒட்டு மொத்தமாக ஒருநாள் கிரிக்கெட் விளையாட்டுகளில் இதுவரை அதிக ரன்கள் எடுத்த ஆட்டக்காரர் **சச்சின் டெண்டுல்கர்.**
5. இந்தியாவில் இன்டர்நெட்டை அறிமுகப்படுத்திய நிறுவனம் **வி.எஸ்.என்.எல்.**
6. விற்பனை வரியை முதலில் அறிமுகப் படுத்திய முதலமைச்சர் **இராஜாஜி.**

## வாழ்த்துகள்!

## நமக்கே உரிமையாம் 12

# வெற்றி வேண்டுமா?

## ப.சிதம்பரம்

பொருள், வலிமையைத் தருகிறது. தனி மனிதர்கள் பொருளைத் தேடுகிறார்கள். அரசுக்கு வலிமை தருவது அரசியல் அதிகாரம். அரசுக்கு வலிமை தரும் மற்ற சாதனங்களில் ராணுவம், காவல்துறை, சிறைச்சாலை, நீதி மன்றம் என்று பல உண்டு. வரி விதிக்கும் அதிகாரமும் அரசுக்கு வலிமை தருகிறது. இத்தனை சாதனங்கள் இருந்தபோதிலும், அரசுகள் பொருளாதாரச் சாதனங்களையும் விரும்புகின்றன. தன்னுடைய நேரடிக் கட்டுப்பாட்டில் பல பொருளாதாரச் சாதனங்களும் நிறுவனங்களும் இயங்க வேண்டும் என்று அரசு விரும்புகிறது.

இப்படி அரசு விரும்புவதற்கு நல்ல காரணங்கள் இருக்கின்றன. 1950-ஆம் ஆண்டில் எஃகு ஆலை ஒன்றைத் தொடங்க வேண்டுமென்றால், பல நூறு கோடி ரூபாய் முதலீடு தேவைப்பட்டது. அன்றையச் சூழ்நிலையில் இதனைத் தனியார் செய்ய முடியாது. எனவே, அரசு முன் வந்து அவற்றைத் தொடங்கியது.

ரயில் தொடர்பு ஏற்படுத்த வேண்டும், ரயில் இருப்புப் பாதைகளைப் போட வேண்டுமென்றால், பல காரியங்களை முதலில் செய்ய வேண்டும். குறிப்பாக, நில ஆய்வு செய்து, தேவையான நிலங்களை ஆர்ஜிதம் செய்ய வேண்டும். சாலை வசதி செய்வதற்கும், நிலங்களை ஆர்ஜிதம் செய்ய வேண்டும். நில ஆர்ஜிதம் என்பது அரசுக்கு மட்டுமே இருக்கும் அதிகாரம். எனவேதான் ரயில்வே, சாலைகள் ஆகியவை அரசினுடைய இயற்கையான ஏகபோகமாகக் (natural monopoly) கருதப் பட்டன.



■ நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன்

பொதுத்துறையில் ஓர் அரசு அக்கறை காட்டுவதற்குத் தவறான காரணங்களும் இருந்தன. நில ஆர்ஜிதம் கான்டிராக்டுகள், இயந்திரங்களை வாங்குவது, நியமனங்கள், ஏஜன்சிகள் என்று பல செயல்பாடுகள் அரசினுடைய அதிகாரத்திற்கு உட்படுகின்றன. பெரும் பணம் புழங்குகிறது. தேன் கூட்டிலிருந்து தேனை எடுத்தவன் கதைதான். பொதுத் துறை நிறுவனம் என்பது அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் எண்ணிலடங்காத அதிகாரங்களையும், வசதிகளையும் வழங்கும் அட்சயப்பாத்திரமாக விளங்குகிறது. சென்னையில் மத்திய அரசுக்குச் சொந்தமான ஒரு பொதுத்துறை நிறுவனம் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். டில்லியில் உள்ள ஒரு குட்டி அதிகாரி, திருப்பதிக்குச் சென்று சாமி கும்பிட விரும்பினால், அவர் சென்னைக்கு வருவார்; ஏதோ வேலை நிமித்தம் வந்தார் என்று குறிப்பு எழுதப்படும்; பொதுத்துறை நிறுவனம் அவருக்குக் கார் ஏற்பாடு செய்து தரும்; அவர் திருப்பதிக்குச் சென்று சாமி கும்பிட்டுத் திரும்பி வருவார்.



எல்லா நாடுகளிலும் பொதுத்துறை இருக்கிறது. பிரான்ஸ், இத்தாலி போன்ற

நாடுகளில், மிகப் பெரிய நிறுவனங்கள் அரசினுடைய கட்டுப்பாட்டில் உள்ளன. அவற்றில் பல வெற்றிகரமான நிறுவனங் களாகச் செயல்படுகின்றன. டி.எச்.எல். (D.H.L) என்ற நிறுவனம் புகழ் பெற்றது. அது மிகப் பெரிய கூரியர் நிறுவனம். அதற்குச் சொந்த விமானங்கள்கூட உண்டு. டி.எச்.எல் நிறுவனம் யாருக்குச் சொந்தமானது தெரியுமா? ஜெர்மன் நாட்டின் தபால் துறைக்குச் சொந்தமானது! ஆமாம், தபால் துறைதான். ஜெர்மன் அரசுக்குச் சொந்தமான தபால் துறைதான் டி.எச்.எல். நிறுவனத்தின் உரிமையாளர். இந் தியாவின் பழம் பெரும் தபால் துறை, உலகம் முழுவதும் கூரியராகச் செயல்படும் ஒரு நிறு வனத்தை நடத்த வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா? அது செய்ய முடியாத காரியமல்ல. ஜெர்மன் தபால் துறை செய்து காட்டியிருக்கிறது.

பொதுத் துறை நிறுவனங்களுக்குச் சிங்கப்பூர் சிறந்த முன்னுதாரண நாடு. அங்கே பல நிறுவனங்கள் சிங்கப்பூர் அரசுக்குச் சொந்தம் - சிங்கப்பூர் ஏர்லைன்ஸ், சிங்டெல் என்ற சிங்கப்பூர் தொலைபேசி நிறுவனம், செம்ப் கார்ப்பரே ஷன் என்ற லாஜிஸ் டிக்ஸ் நிறுவனம் என்று பல உதாரணங்களைக் கூறலாம். சிங்கப்பூர் விமான நிலையம், சிங்கப் பூர் துறைமுகம் ஆகியவை யும் அரசு நிர்வாகத்தின் கீழ் வெற்றிகரமாக இயங்கும் நிறுவனங்கள்.

சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் வெற்றிகரமாக இயங்குகிறது; ஏர் இந்தியாவில் ஏன் பெரும் இழப் புகள் ஏற்படுகின்றன? சிங்டெல் சிறப்பான தொலைபேசி சேவை யைத் தருகிறது; நம்முடைய தொலைத் தொடர்புத் துறை ஏன் மக்களின் வெறுப்பைச் சம்பாதித்தது?

பொதுத்துறை நிறுவனங்களை ஓர் அரசு வெற்றிகரமாக நடத்த வேண்டுமென்றால், அந்த நாட்டில் சில ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்; அந்த அரசின் அமைச்சர்களும், அதிகாரிகளும் ஊழல் பேர்வழிகளாக இருக்கக் கூடாது. அந்த அரசில் யாராவது தவறு செய் தால், அவர்கள் உடனடியாகக் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும்.

சில சமயங்களில் சில துறைகளை அரசே ஏற்று நடத்துவதைத் தவிர்க்க முடியாது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் இருந்த ஆயுள் இன்ஷூரன்ஸ் நிறுவனங்களில், தவறு களும் குறைபாடுகளும் மலிந்திருந்தன. மிகப் பெரிய மோசடிகள் நடந்தன. அந்தத் துறை யைச் சீர்படுத்துவதற்காக ஆயுள் இன்ஷூரன்ஸ் தேசவுடைமையாக்கப்பட்டு, எல்.ஐ.சி தோற்று விக்கப்பட்டது. அது நல்ல முடிவு. ஆனால், 1973-ஆம் ஆண்டில் பொது இன்ஷூரன்ஸ் நிறுவனங்களும் தேசவுடைமையாக்கப்பட்டன. அதற்கு அவசியமே இல்லை. 'சோஷலிஸம்' என்பதைத் தவிர வேறு காரணங்கள் சொல்லப் படவில்லை. 1973-ஆம் ஆண்டில் எடுத்த முடிவு, தவறான முடிவு. இந்தியாவில் இன்ஷூரன்ஸ் துறையில் போட்டியில்லாததால் வளர்ச்சி குன்றியது. 1997-ஆம் ஆண்டில் மறு பரிசீலனை நடந்து, இன் ஷூரன்ஸ் துறையில்



மீண்டும் தனி யார் நிறுவனங்களை அனுமதிப்பது, போட்டிக்கு வழி வகுப்பது என்ற முடிவுகளை எடுத்தோம்.

தனியார் நிர்வாகத்தில் நலிந்த பஞ்சாலை களை அரசு தேசவுடைமையாக்கியது, தவறான முடிவு என்பது என் கருத்து. சில குடும்பங் களின் பிடியில் இருந்த பதினொன்கு வங்கிகளை 1969-ஆம் ஆண்டு அரசு எடுத்துக் கொண்டது சரியான முடிவே. ஆனால், காலப்போக்கில் அந்த வங்கிகளின் பங்குகளைக் கொஞ்சம் கொஞ்சமாக விற்று, அந்த வங்கிகளைத் தனியார் துறைக்கு மாற்றியிருக்க வேண்டும். அவ்வாறு செய்யாததுதான் தவறு.

பொதுத்துறை வேண்டுமா, கூடாதா? ஒரு நிறுவனம் பொதுத்துறையில் இருக்க வேண்டுமா, அல்லது தனியாருக்கு விற்றுவிடலாமா என்ற கேள்விகளுக்குச் சித்தாந்த ரீதியாகப் பதில் சொல்லக் கூடாது. இதில் சித்தாந்தங்களுக்கு இடமில்லை. ஒவ்வொரு நிறுவனத்தைப் பற்றியும் கவனமாக ஆராய்ந்து, யதார்த்த, வியாபார ரீதியான முடிவையே எடுக்க வேண்டும்.

பாரதிய ஜனதா கட்சி, காங்கிரஸ் ஆகிய இரண்டு பெரிய கட்சிகளுக்கும் இந்த யதார்த்த அணுகுமுறை இல்லை, என்பதை வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறேன்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தைத் (என்.எல்.சி) தனியாருக்கு விற்பது, என்றொரு முடிவை பா.ஜ.க அரசு எடுத்தது. இது அபத்தமான முடிவு. சுரங்கத் துறையிலும், மின் உற்பத்தித் துறையிலும் என்எல்சி நிறுவனத்திற்கு ஏக போகம் கிடையாது. என்.எல்.சி திறமையாகச் செயல்படும் நிறுவனம். போட்டிப் பொருளாதாரத்தில் தனியார் நிறுவனங்களுடன் போட்டி போட்டு, அவர்களுக்கு ஈடாகச் செயல்படக் கூடிய நிறுவனம். அதனுடைய வளர்ச்சி அபரிமிதமானது. புதிய அனல்மின் நிலையங்களை தமிழ்நாட்டில் மட்டுமல்ல, மற்ற மாநிலங்களிலும் அமைக்கக்கூடிய ஆற்றல் பெற்றது. என்.எல்.சி நிர்வாகத்துக்கு மேலும் ஊக்கமும், சுதந்திரமும் தர வேண்டுமேயன்றி, அந்த நிறுவனத்தையே தனியாருக்கு விற்பது என்பது தேவையற்றது.

சென்னை, நியூ பாம்பே
சர்க்கஸ் நிகழ்ச்சியின்
உற்சாக க்ளிக்ஸ்!

இதற்கு நேர் எதிரான ஓர் உதாரணத்தையும் பார்ப்போம். ஐ.டி.பி.ஐ (IDBI) என்பது தொழில் வளர்ச்சியைப் பெருக்குவதற்காகத் தொடங்கப்பட்ட வங்கி. வங்கித் துறையில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டுவிட்டது. இன்று பல வங்கிகள் போட்டி போட்டு, வங்கிச் சேவைகளையும், கடன்களையும் வழங்குகின்றன. ஐ.டி.பி.ஐ நிர்வாகத்தில் ஏற்பட்ட கோளாறுகளினால், அந்த நிறுவனத்தில் இழப்புகள் ஏற்பட்டன. வாராக் கடன்கள் அதிகரித்து விட்டன. அந்த வங்கியைத் தனியாருக்கு விற்பது என்பதே சரியான முடிவாக இருக்கும். 'தனியார்' என்றால், ஒருவருக்கு விற்க வேண்டுமென்பதில்லை. பங்குச் சந்தையில் ஐ.டி.பி.ஐ பங்குகளை விற்றால், பல்லாயிரம் பேர் அந்தப் பங்குகளை வாங்குவார்கள். பங்குதாரர்கள் நிர்வாகத்தைத் தேர்ந்தெடுப்பார்கள். பா.ஜ.க அரசு இந்த முடிவை எடுத்து, இதற்கு வழிவகுக்கும் மசோதாவை நாடாளுமன்றத்தில் அறிமுகப் படுத்தியது. ஆனால், இந்த முடிவை காங்கிரஸ் எதிர்த்தது. ஐ.டி.பி.ஐ பொதுத் துறையிலேயே இருக்க வேண்டும் என்று வற்புறுத்தியது. 'ஐம்பத்தியொரு சதவிகித பங்குகள் எப்போதும் அரசின் வசமே இருக்கும்' என்று நிதியமைச்சர் திரு. ஜஸ்வந்த்சிங் ஒரு வாக்குறுதி தர வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. இது தவறான முடிவு.

ஒரு காலத்தில் மத்திய அரசு மட்டும் இருநூற்றி ஐம்பது பொதுத்துறை நிறுவனங்களை நடத்தியது. இது தேவையில்லை என்ற பொதுக் கருத்து இப்பொழுது உருவாகியுள்ளது. ஒவ்வொரு நிறுவனத்தையும் ஆராய்ந்து, அந்த நிறுவனம் பொதுத் துறையில் அவசியம் இருக்க வேண்டுமா, அல்லது அதைத் தனியார் துறைக்கு மாற்றிவிடலாமா என்பதை விவாதித்து, முடிவெடுப்பதே புத்திசாலித்தனமான அணுகுமுறை. இந்த அணுகுமுறையை மேற்கொண்டு, சில பொதுத்துறை நிறுவனங்களை 'நவரத்தினங்கள்' என்று 1997 - ஆம் ஆண்டு பட்ஜெட் உரையில் நான் அறிவித்திருந்தேன். என்.டி.பி.சி (NTPC), ஓ.என்.ஜி.சி (ONGC), பி.எச்.இ.எல் (BHEL), ஐ.ஓ.சி (I.O.C) போன்ற நிறுவனங்கள் தொடர்ந்து பொதுத்துறையிலேயே இருப்பதில் தவறில்லை. அவை போட்டிப் பொருளாதாரச் சூழ்நிலையில், தனியார் நிறுவனங்களுடன் போட்டி போடக் கூடிய வலிமை பெற்றவை.

அவை பொதுத்துறையில் தொடர்ந்து இருக்க வேண்டுமென்றால், தொடர்ந்து இலாபம் ஈட்ட வேண்டும்; அந்த நிறுவனங்களுக்குச் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும். அவற்றின் நிர்வாகத்தில் அரசு குறுக்கிடக் கூடாது. மிக முக்கியமாக, ஊழலுக்கு இடமளித்துவிடக் கூடாது.

பொதுத்துறையின் வெற்றிக்கு ஒழுக்கமும், நெறிமுறைகளும் மிக அவசியம்.

(தொடரும்)

# அணில் அழகி!

தஞ்சாவூர் ரவிச்சந்திரன்

ஸ்ரீரங்கத்துக்கு பெருமாளை தரிசிக்க வந்து, தமது பால்ய நண்பனைச் சந்தித்தார் சிவம்.

''அட... ரங்கா... நீயாடா, உன்னைத் தாண்டா நெனைச்சேன். நூறு வயசுடா...''

கட்டிக் கொண்டார்கள். ரங்கராஜனும் அவரும் பால்ய சிநேகிதர்கள். சிவம், ஹோட்டல் தொழிலில் வேரூன்றி, சென்னையில் விருட்சமானார். ரங்கராஜனுக்கு மூன்று பெண்கள். போஸ்ட் ஆபிஸில் நாற்காலி தேய்த்து விட்டு, ஈஸிசேரும் நியூஸ் பேப்பர்களுமாகிவிட்டார்.

மூத்தவள் சௌம்யா. கம்ப்யூட்டர்தான் உலகம் அவளுக்கு. சென்னையில் சாஃப்ட்வேர் வேலை. ஏதோ தமிழுக்குச் சேவை, புது முயற்சி என்று சொல்லுவாள். அடுத்தவள் ஹேமா. எம்.பி.ஏ. படிக்கிறாள். சின்னவள் உமா. ப்ளஸ் டூ.

தமது ஒண்டுக் குடித்தன வீட்டில் செல்வ நண்பனை உட்கார வைக்க மனம் ஒப்பாது குமைந்தார் ரங்கா.

''உனக்கு... சிரமமா இருக்கும். சின்ன வீடு...''

சிவம் உணர்ச்சி பொங்கி, ''என்னடா பேசுற. இதவிட சின்னூரண்டு வீட்டுல எட்டு வருஷம் நாம இருந்திருக்கம். இப்பத் தானேடா... காரு... பங்களா... சரி சரி, உனக்கு எத்தனை பொண்ணு?''

''மூணு. மூத்தவ சென்னையில தான் வேலையாயிருக்கா. லீவுக்கு இப்ப வந்திருக்கா.''

சௌம்யா எதிரே வந்து வணங்கினாள். ''சென்னையிலா. எங்க?''

சௌம்யாவின் முகம் அவருக்குப் பிடித்துப் போயிற்று. என்ன தேஜஸ். மூக்கும் முழியுமாக என்பார்களே, அந்த வார்த்தை இவளைப் பார்த்துப் பிறந்தது தானோ...! சிவந்த நிறம். நிறையப் படித்திருந்தாள். சிவம் தமது மகனுக்குப் பக்கத்தில் இவளை நிறுத்தி கற்பனை செய்தார்.

அவன் அதிகம் படிக்கவில்லை. ஹோட்டல் தொழிலில் லட்ச லட்சமாக வருகிறது. ஆனால் படிப்பு... கம்பீரம்... ம்ஹூம்.

பேச்சுக்குப் பிறகு... ''ரங்கா, எனக்கு ஒரு ஆசைடா. புள்ளைங்க விருப்பம் எப்படியோ... எனக்கு ஆசை. உம் பொண்ணை என் மகனுக்குக் கட்டிவைக்கணும்னு'' என்றார்.

ரங்கராஜன் பூரித்தார். எவ்வளவு பெரிய இடம். மகள் நன்றாக இருப்பாள்... சௌம்யா என்ன சொல்வாளோ...?

அடுத்த வாரம்.

சிவம் தமது மகனை அழைத்துக் கொண்டு போய், லேடீஸ் ஹாஸ்டலில் சௌம்யாவைச் சந்தித்தார். சந்தைக்கு வந்த புது வியாபாரி போல இருந்தான். உடை மட்டும் பளிச்சாக. வாயைத் திறந்ததும்... 'இருக்கம்ல, வந்துட்டம்ல' என்று கிராமத்துப் பேச்சு வந்தது.

''என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க...'' என்றான்.

சௌம்யா - ''ஹாங்... வேலையா...?'' என்றான்.


''ம்...''

'' 'ஸ்விஃப்ட் வொல்ட்'ல வொர்க் பண்றேன். தவிர, தமிழ் மென் பொருள் உருவாக்குற டீம்ல இருக்கேன். அது முடிந்தால் தான் கல்யாணம். எல்லாருமே லட்சியமா வச்சுட்டிருக்கோம்.''

''அதுக்கும் கலயாணத்துக்கும் என்ன...?''

அவன் கேள்விக் குறியுடன் அப்பாவை மாறி மாறிப் பார்த்தான். அவளது நகங்களிலும் புரையோடின சிவப்பு அவனைப் படுத்தியது. அப்பாவை உள்ளூர மெச்சினான்.

'படிய மாட்டேங்காளே... படிப்புங்கறா.. நம்ம ஹோட்டல வந்து பாத்தான்னா, அசந்து பூடுவா. ரெண்டே ஷாப்



பிங். துட்டை வாரி எறைச்சா பட்டுப் போல துவண்டு போகும். குட்டி பூஸி பூனை போல கெடக்கும். கடை கேஷியர் படிச்சவன். குட்டியளுக்கு பரிசுப் பொருள் எங்கின வாங்குறது... மேலே ஸ்ப்ரே' என்ன அடிச்சுக்கறதுன்னு... தெரிஞ்சு வைக்கோணும். எழவு நமக்கு வருதில்லியே..!'

"அது சாமான்யமில்லை. நெறையப் பேர் பங்கு வேண்டியிருக்கு. இட்ஸ் எ டீம் வொர்க். 'தமிழ் பிசி'ன்னு திட்டம். உங்களை மாதிரி வியாபாரிகளுக்குப் பெரிய துணை. வேற யாரும் கூட வேண்டாம்" என்றாள் சௌம்யா.

அவனுக்கு 'சர்'ரெனக் கோபம் வந்தது. "எங்களுக்கு இங்கிலீஷ் புரியாதுன்றீங்களா? என்கிட்ட எம்.சி.ஏ.முடிச்ச பொண்ணுதான் சிஸ்டம் பாக்குது. மாசம் மூவாயிரம் சம்பளம்" என்றான்.

அவள் புன்முறுவலுடன், "அதில்லை. நீங்களே இயக்கலாம். ஓபன் சோர்ஸ் இயக்கம். எல்லாமே வெட்டவெளி. அது முழுமை பெறணும். இன்னும் கொஞ்ச நாள்தான். இதில் ஒரு மனத் திருப்தி இருக்கு. ஔவை, வள்ளுவர் அளவுக்கு இல்லாது போனாலும், அணில் ராமருக்கு கல் தூக்கிப் போட்டாப்ல, தமிழுக்குச் செய்யறோம்."

அவன் அப்பாவை, 'இது சரிப்படாது' என்று பார்த்தான். சிவம் தனியாகப் பேசிப் பார்த்தார்.

"கோயில்ல நமக்குக் கிடைச்ச பிரசாதத்தைக் கடைசியா நிக்கிறவங்களுக்கு குடுத்து பகிர்ந்துக்கறாப்ல... சின்ன சந்தோஷம். ஸாரி ஸார்" என்றாள் சௌம்யா.

---

"திருமண அழைப்பிதழ்ல இவ்வளவு கெடுபிடி கூடாது!"

"என்ன விஷயம்?"

"குறைந்த பட்ச மொய் ரூபாய் நூறுன்னு பிரிண்ட் பண்ணியிருக்காங்க!"

\- அம்பை தேவா



ஸ்ரீரங்கத்திலிருந்து அப்பா ஃபோனில் திட்டினார்.

"இன்டலக்சுவல் அரகன்ஸ்" என்றார்.

சௌம்யா இரவு பூரா அழுதாள்.

அப்பாவை சமாதானம் பண்ணும் பொருட்டு ஊருக்கு வந்தாள். கையைப் பிடித்து விபரம் சொன்னாள். "புரிஞ்சுக்கப்பா. மைக்ரோ சாஃப்ட்டோட ஏகாதிபத்யத்துக்கு எதிரான இயக்கம்ப்பா. அவங்க வின்டோஸ்ல விபரம் சொல்லி, தொட்டதுக்கும் பணம் சம்பாதிக்கிறாங்க. இது அப்படியில்லை. இன்டர்நெட் வரைக்கும் இதுல வந்துடும். அடிபட்டவனுக்கு சூடா காபி வாங்கி குடுக்கறாப்புல, ஃபீஸ் கட்ட முடியாதவனுக்கு முதல் ஃபீஸ் கட்டி வைக்கிறாப்ல - ஒரு உதவிதான். இதுல யாருக்கும் சம்பளமில்லை. பைபாஸ் சர்ஜரி பண்ணிட்டவங்க உழைக்க வர்றாங்க... நான் சின்ன துளிப்பா."

"உன் ஃபிரண்டு நான் அழகா இருக்கேன்னு அவங்க வீட்டுக்குக் கொண்டு போக நினைக்கிறார். காதல்னா என்னன்னு நான் ஈடுபட்டதில்லைப்பா. இப்ப அதுக்கெல்லாம் நேரமும் இல்லை. ஆனா அது சம்பந்தப்பட்டவங்களை முன்னேற்றணும். கீழே தள்ளக் கூடாது. அங்க உன் ஃபிரண்ட் வீட்டுல என்னோட அறிவுக்குத் துணை இருக்கா... சொல்லு. இல்லை. அவங்களுக்கு நம்மைப் போல சிவப்பா பிள்ளை பிறக்கணும். காசு வந்துட்டாப்ல இதையும் சேர்த்துக்க நினைக்கிறாங்க. சிவப்பா குழந்தைகள். அதுக்கு ஸ்டைலா வளர்த்துவிட ஒரு அம்மா.. இதான்..

"எத்தனையோ உயிர்கள் கடல்ல இருக்கு. மெக்ஸிகோ நாடு சாலமன் தீவுலேர்ந்து, இருபத்து அஞ்சு டால்ஃபினை வாங்கி, தன் நாட்டு கடல்ல விட்டு மக்களை சந்தோஷப்படுத்துது. டால்பின்கள் சாலமன் தீவுலதான் அழகுப்பா. மெக்ஸிகோதான் உன் ஃபிரண்டு. நீ படிச்ச, திறமையான பையனைக் காட்டு. நாம கொஞ்சங் கொஞ்சமா முன்னேறிப் போம். நாம ஏழைங்கதான்... ஆனா நாளைக்கு நல்லாருப்போம். நாளைக்கு நான் வாழ்ற எடம் நீ, தங்கச்சிங்க வந்தா நான் ஒட்டிக்கணும்... ப்ளீஸ்ப்பா!"

ரங்கராஜன் அமைதியானார்.

அவசரப்பட்டு விட்டோமோ என எழுந்தார். இந்தக் காலப் பெண்கள் எவ்வளவு துல்லியமாகக் கணிக்கிறார்கள், பேசுகிறார்கள்!

"சரிம்மா. வா. காலாற அம்மா மண்டபம் வரைக்கும் நடக்கலாம்."

சிவம் அவர்களது நினைவிலிருந்து விலகி வெகு நேரமாகிறது. ●

# உங்கள் மூட்டுவலியை தொலைப்பது எப்படி?

அறுபது வயது பெரியவர் ஒருவர் 'ஆர்தோக்யூர்' என்று உரக்கச் சொல்லிக் கொண்டே உயரே குதிக்கும் ஒரு விளம்பரம்தான் இப்போது டி.வி.யில் பிரபலம். அது 'ஆர்தோக்யூர்' என்ற மூட்டு வலி மாத்திரைக் கான விளம்பரம்.

கடந்த சில ஆண்டுகளாக இந்த 'ஆர்தோக்யூர்' மாத்திரைகள் மற்றும் ஆயிலை மார்க்கெட்டிங் செய்துவரும் 'க்யூர்வெல் ஃபார்மா' நிறுவனத்தின் நிறுவனத் தலைவர் திரு. ஆர்.பி. சம்பத்குமார் அவர்களிடம் அவர்களது தயாரிப்புகள் குறித்து பேசினோம்.

*மூட்டுவலி ஏன் வருகிறது?*

பொதுவாக வயதான காரணத்தினால் மூட்டு களில் ஏற்படும் தேய்மானத்தினாலும், மூட்டுகளில் இருக்கும் லூப்ரிகேன்ட் திரவம் வற்றிப் போவதாலும், மூட்டுகளிடையே யூரிக் ஆசிட்




கிரிஸ்டல் உருவாகிறது. இதனால் மூட்டுகளுக்கு அதிக உராய்வு ஏற்பட்டு மூட்டுவலி வருகிறது.

*இதற்கு என்ன சிகிச்சை?*

சில மருத்துவ சிகிச்சைகள் இருந்தாலும், பொதுவாக மூட்டுவலியை குறைக்கும் மாத்திரைகள் மற்றும் ஆயில்களை உபயோகப்படுத்தி வலியில் இருந்து நிவாரணம் பெற முடியும்.

*உங்களுடைய 'ஆர்தோக்யூர்' மாத்திரை எப்படி செயல்படுகிறது?*

எங்கள் தயாரிப்பான 'ஆர்தோக்யூர்' மாத்திரைகள் 'செலரி விதை'யின் சாரத்தைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. இதன் முக்கியக் குணமே மூட்டுகளுக்கு இடையே உருவாகும் யூரிக் ஆசிட் கிரிஸ்டல்களை கரைப்பதுதான். இந்த கிரிஸ்டல்கள் கரைந்து விடுவதால் மூட்டு வலி வெகுவாக குறைகிறது.

*தற்போதுள்ள மார்க்கெட்டில் உள்ள பல அலோபதி மருந்துகளைவிட ஆயுர்வேத ஆர்தோக்யூர் எப்படிச் சிறந்தது?*

ஆங்கில மருந்துகளை உபயோகிப்பதால் வாயுத் தொல்லை, வயிற்றில் எரிச்சல் போன்ற வேறு பல தொல்லைகள் வர வாய்ப்புண்டு. அதோடு சிறிது நாட்கள் கழித்து இந்த ஆங்கில மருந்துகளின் செயல்படும் திறனும் குறைந்துவிடும். மேற்கூறிய எந்த பாதிப்பும் இல்லாமல் வாழ்நாள் முழுவதும் மூட்டுவலித் தொல்லையிலிருந்து விடுபட, 'ஆர்தோக்யூர்' மாத்திரைகளே சிறந்தது.

*ஆர்தோக்யூர் மாத்திரைகள் எவ்வளவு சாப்பிட வேண்டும்?*

சாதாரணமாக முதல் மாதத்தில் தினமும் மூன்று வேளைக்கும் வேளைக்கு ஒன்று என்ற அடிப்படையில் மூன்று மாத்திரைகளும், இரண்டாம் மாதம் காலை மற்றும் இரவு என்று இரண்டு மாத்திரைகளும் சாப்பிட்டால் போதும். முதல் 15 நாட்களிலேயே வலியின் தீவிரம் குறையத் தொடங்கிவிடும். இரண்டு மாதங்களுக்குப் பிறகு 'மெயின்டனன்ஸ் டோஸ்' ஆக தினமும் ஒன்று சாப்பிட்டு வந்தாலே மூட்டுவலி குறைந்து போய்விடும்.

*இந்த மாத்திரைகளால் பக்க விளைவுகள் உண்டா?*

இந்த மாத்திரைகள் 100 சதவீதம் ஆயுர் வேதத் தயாரிப்பு என்பதால் பக்க விளைவுகள் ஏற்பட வாய்ப்பில்லை. ஆயுர்வேதம் என்பதால் நிவாரணம் கிடைக்க நீண்ட காலம் ஆகும் என்று நினைக்க வேண்டாம். ஏனெனில் நாங்கள் இதன் மூலப் பொருட்களை அப்படியே பயன்படுத்தாமல், மூலப் பொருட்களில் இருந்து 'எக்ஸ்ட்ராக்ட்' எடுத்துத்தான் பயன்படுத்துகிறோம். அதாவது 10 கிலோ மூலப் பொருட்களில் இருந்து ஒரு கிலோ எக்ஸ்ட்ராக்ட் மட்டுமே கிடைக்கும். இதனால் இந்த மாத்திரையின் செயல்திறன் மிகவும் அதிகம். அதனால்தான் எங்கள் விளம்பரங்களில் கூட 'ஆயுர்வேதம், திறனோ அதிவேகம்' என்ற வாசகத்தைப் பயன்படுத்துகிறோம்.

இதில் உட்கொள்ளும் மாத்திரைகள் மட்டும் இல்லாமல் மூட்டுகளில் தடவும் 'ஆர்தோக்யூர்' ஆயிலும் உள்ளது. எங்கள் நிறுவனத் தயாரிப்புகள் தமிழ்நாட்டில் உள்ள எல்லாப் பிரபல மருந்துக் கடைகளிலும் கிடைக்கிறது. பல பிரபல மருத்துவர்களும் தங்கள் நோயாளிகளுக்கு மூட்டுவலிக்கான மருந்தாக, எங்களது 'ஆர்தோக்யூர்' மாத்திரைகளை சிபாரிசு செய்கிறார்கள்.

மேலும் இப்போது 'ஆர்தோக்யூர்' மாத்திரைகள் தென் இந்தியா முழுவதும் கிடைக்கும்.

**காலம் காலமாக மூட்டு வலியால் அவதிப்பட்டு வந்தவர்கள் முகத்தில் இனி நிம்மதியைப் பார்க்கலாம்.**

KUREWEL PHARMA

மேலும் விவரங்களுக்கு :

**கியூர்வெல் ஃபார்மா,**

சென்னை - 83. போன் : 24893013, 24711719

கிடைக்குமிடம் :

கர்நாடகா : 080-3526356, 9844152615
ஆந்திரா : 040-24755925, 24750585
கேரளா : 04926-208101
மும்பை : 022-27894441/2
புதுடெல்லி : 9891312008

ADVT.

### பொங்கல் வாழ்த்துகள்!

இதுல கயிறு திரிக்கிற விஷயம் ஒண்ணு மில்லீங்க; ஸின்ஸியரா வாழ்த்துறேன்.

2004க்கு எத்தனையோ வாழ்த்து அட்டைகள் வந்தன. சுரேஷ் பாலா. அதாங்க, எழுத்தாளர்கள் சுரேஷ், பாலகிருஷ்ணன். 'சுபா'ன்னு ஜாயிண்டா எழுதறாங்களே... அழகான காந்தி படம்; அதுவும் ஃபோட்டோ இல்லை. ஜெ.பி. என்ற ஓவியர் தீட்டிய அற்புத ஸ்கெட்ச்... அதோட ஒரு பொன்மொழி.

**பொய்களால் உங்களையே இழக்கிறீர்கள்; உண்மையால் உலகையே வெல்கிறீர்கள். உண்மையாய் இருங்கள்!**

பிரதமர்" என்று நாடகத்தின் அடுத்த ஸீனை மறு நாளே அரங்கேற்றினாங்க. வாஜ்பாய் இன்னும் கூட பக்குவமா பேசியிருக்காரு. "நான் தேர்தலில் போட்டியிடத் தயார். ஆனால் நான் பிரதமரா இல்லையா என்பதை கட்சி முடிவு செய்யும்" என்று அடக்கத்தின் உருவமா பேசிப் பார்த்தார். ஒரு பி.ஜே.பி. தளபதியாவது அடுத்த காட்சியை அரங்கேற்றணுமே. மூச்! ஸி.பி. ராதாகிருஷ்ணன் அவசர அவசரமாக வேற திக்கிலே புகுந்து, ஜெயா அம்மாவுக்குத்தான் பட்டம் கட்டினாரு : "தமிழ்நாட்டிலே தேசிய ஜனநாயக முன்னணிக்கு தலைமை ஏற்க வாங்க தாயே"ன்னு சரணாகதி தத்துவத்தை நடை

# செய்திகள்; திரிப்பது

காந்தியை எல்லாரும் காத்தாடி பறக்க விட்டுட்ட காலத்துல, இப்படி ஒரு வாழ்த்து அட்டையா! அரசியல்வாதிகளுக்கெல்லாம் சாபம் கொடுத்த தேர்தல் ஆணையர் லிங்டோவுக்கு வாழ்த்தட்டையை ஃபேக்ஸ் செய்தேன். அவர் பதில் உடனுக்குடன் : "பொன்மொழிக்குக் கீழே உள்ள வரியைக் கவனி : 'Happy 365 + 1' என்று அச்சாகியிருக்கிறது. லீப் வருஷத்தை யொட்டி அப்படிப் போட்டிருப்பதாக நினைப்பாய். தப்பு! தப்பு! வருஷம் 365 நாளும் பொய் சொல்லி சந்தோஷப்படு; அட்லீஸ்ட் பிராயச்சித்தமா, நாலு வருஷத்துக்கு ஒரு நாளாவது உண்மை பேசு! இதானே இப்ப நடக்குது!"

"உங்களைத் திருத்தவே முடியாதுங்க" என்று மறு ஃபேக்ஸ் அனுப்பினேன்.

"நான் பிரதமரா இருக்கலாமா கூடாதா என்பதை மக்கள்தான் முடிவு செய்ய வேண்டும்" என்று சோனியா மேடம் சொல்லி நழுவிட்டாங்க. இத்தாலி நாட்டவர் பிரதமராவதற்கு எதிர்ப்பு பற்றிக் கேட்டதுக்கு இப்படி அவர் ஒதுங்கினாலும், காங்கிரஸ் உப தலைவர்கள் விட்டுவாங்களா? "சோனியாதான் எங்களைப் பொறுத்தவரை அடுத்த

முறைக்குக் கொண்டு வந்தாரு. வேடிக்கை என்னன்னா, தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி, சந்தர்ப்பக் கூட்டணியாம்! சொல்றது யாரு? தமிழக பி.ஜே.பி. தலைவர்! Kettle calling the pot black!

கொடக்கு, அம்மா என்ன சொல்றாங்கன்னு தெரிஞ்சுக்க ஸெல் எடுத்து நெம்பர்களைத் தட்டினேன்.


"என்னைத் தலைமை தாங்கச் சொல்றதுக்கு இவர் யாரு?"ன்னு சீறினாங்க.

"அதில்லே மேடம், சோனியா, வாஜ்பாய் பாணியில் நீங்களும் ஏதாவது அறிக்கை விடுவீங்களோன்னு..."

"அந்த மாதிரி அசட்டு ஸ்டேட்மெண்ட் எல்லாம் என்னிடம் எதிர்பார்க்காதீங்க. நான் பிரதமரா வரலாமா வேண்டாமாங்கிறதை, நான்தான் முடிவு செய்வேன். வேற யாருக்கும் அந்த உரிமையோ அருகதையோ கிடையாது; புரியுதா? புரியலேன்னா ஒரு குட்டிக்கதை சொல்றேன்!"

"புரிஞ்சுடுச்சு மேடம்; நல்லாப் புரிஞ்சு








போச்சு" என்று அவசரமாகக் கூறி, லைனைக் 'கட்' பண்ணினேன்.

**'ஜெ'**யிடம் பேசிய பிறகு, கருணாநிதியிடம் பேசாமலிருந்தால், நான் நடுநிலை தவறிவிட்டதாக கல்கி வாசகர்கள் நினைக்கக் கூடுமே... ஒரு ஈமெய்ல் தட்டினேன். "உங்க கூட்டணியை 'முற்போக்குக் கூட்டணி'ன்னு வர்ணிக்கிறீங்க.. இந்த முற்போக்கு - பிற்போக்கு சமாசாரமெல்லாம் பழசுங்க. ஹிந்துத்வா கூட்டணிக்கு எதிரா ஒரு மதச்சார்பற்ற கூட்டணின்னாலும் வோட்டு நிச்சயமா விழாது.

# செம்பியன்!






அதனால..."

"உன்னோட 'பாரத்தவா' ஐடியா மட்டும் ரொம்ப நல்லாயிருக்கோ? அதுல தமிழையே காணோமே" என்று கம்ப்யூட்டர் மூலம் கலைஞர் பேசினார், கல்கி தலையங்கத்தை நினைவில் வைத்து.



"வேணாம், வேற யோசிக்கலாமே..."

"ஜனவரி இறுதிக்குள் கூட்டணி ஒருவாறு உருவாகும், அப்புறம் பார்க்கலாம்..."

"அது சரி, இந்த ராம்தாஸ் என்னங்க, இப்படிக் காலை வாரி விட்டுட்டாரு..."

"எல்லாம் என் ஜாதகம்... நான் பிறந்த ஜாதி.."

'கிளிக்' செய்து கம்ப்யூட்டரை ஆஃப் செய்து உறை போட்டேன்.

**போ**னை எடுத்து டயல் செய்ய, சோனியா சிக்கினார்.

"அச்சா ஜி.. பிரியங்காவுக்காக அவருடைய ஆதரவாளர்கள் ஊர்வலம் போனாங்களாமே... அரசியலுக்கு அவரை இழுக்க முயற்சி நடக்குதே.."

"அவ அரசியலுக்கு வருவாளா மாட்டாளா என்பதை அவள்தான் முடிவு செய்யணும்..."

"அதில்லீங்க, ஒரு வேளை நீங்க இத்தாலி நாட்டவர் என்பதால் பிரதமர் பதவிக்கு வர முடியாமப் போயிட்டா, நேரு குடும்பத்தின் வாரிசாக.."

"அப்படியும் இருக்கலாம்.."

"அப்ப ஊர்வலம் எல்லாம் எதுக்குங்க? நீங்களே பிரியங்காவிடம் பேச வேண்டியதுதானே?"

"அதெப்படி... பிரியங்கா அரசியலுக்கே வர விரும்பாத மாதிரியும், தொண்டர்களுடைய, மக்களுடைய விருப்பத்தைத் தட்ட முடியாமல் வருவது போலவும்..."

"ஒரு ஸெட் அப்... ஓ.கே.! பெஸ்ட் ஆஃப் லக்!"

**9000** ரன்களைத் தாண்டிய சச்சினுக்கு ISD போட்டேன். லஞ்ச் டைம். பெவிலியனில் மாட்டினார்.

"கங்கிராட்ஸ். ராம லக்ஷ்மணர் போல நால்வரில் ஒருவர் ஆகிட்டீங்க..."

"சரி சரி, விஷயத்துக்கு வா. காலில் மறுபடி 'பேட்' கட்டணும்..."

"ஒரு மாட்கல பிரமாதமா ஆடறீங்க... அடுத்த ரெண்டு டெஸ்டுல பொசுக்குன்னு பெவிலியனுக்குத் திரும்பிடறீங்க..."

"இவ்ளோதானே... நீ ஏடாகூடமா என்னோட ஃபெராரி காரைப் பற்றி கேட்கப்போறியோன்னு நினைச்சேன். இதெல்லாம் 'ஜஸ்ட் பேட் லக்', விடு."


"இந்த ஃபைனல் மேட்ச் இந்திய அணிக்கு வெற்றியா அமைய வாழ்த்துக்கள்."

"தோத்துட்டா?"

"ஆஸ்திரேலிய காப்டனுக்கு, அவருடைய கடைசி மாட்சில் இந்தியா தரும் வெகுமதி!"

"அடிச்சே, ஸிக்ஸர்" என்றார் சச்சின்.

''ஏண்டா, எங்களையெல்லாம் லாரியிலேயே பிக்னிக் கூட்டிட்டுப் போய் வந்துட்டீங்கல்ல?! முதல் தடவையாச்சேன்னு விட்டுட்டேன். அடுத்த தடவை ஏ.ஸி. பஸ் வரல்லே, மவனே நடக்கிறதே வேற!''



# ஐயோ தாங்கலை!




''அரசாங்க செலவுல மாயாறு தண்ணீ குடிச்சதாச்சே! லோக்கல் லாரி தண்ணீ தந்தா டென்ஷன் ஆயிடுது.''



''என்ன ஆச்சு?''


''காட்டுலே நல்லாத்தான் இருந்துச்சு. இங்க வந்து ஊரு தண்ணி ஒத்துக்கலை, ஜுரம்''



''ஆமாங்க, காட்டுக்குப் போயிட்டு வந்ததிலிருந்தே, 'இந்த கோயிலிலேயே நான்தானே பெரிய ஆள், எனக்கு கட்-அவுட் வைக்கணும்'னு ஒரே அடம்!''

கற்பனை, படங்கள் :





# முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

திருமூழி தேசம் என்றொரு தேசம் - மலையாளத்தில் - கேரளத்தில் இருக்கிறது. அழகான தேசம் அது. அந்த தேசத்தில் உறையும் எம்பெருமானிடம் தூது அனுப்பினார் ஆழ்வார். யாரை அனுப்பினார்...? 'கொக்கினங்கள் குருகினங்காள்...' என்று பறவை இனங்களை அனுப்பினார். "அந்த நித்ய சூரிகள் - முக்தர்கள் - கோஷ்டியில் சேர்ந்து நிற்பதற்கு நானும் தகுதியுடையவனா? என்று கேட்டு வாருங்கள்," என கொக்குகளையும் நாரைகளையும் தூது அனுப்பினார் நம்மாழ்வார்.

நாரைகளும், கொக்குகளும் இங்கே ஆசார்யர்கள் ஸ்தானத்தில் இருக்கின்றன. ஞானம் அனுஷ்டானம் என்ற இரண்டு இறக்கைகள் அவர்களுக்கு! உயர்ந்த ரீதியில் வைகுண்ட பதவி பெற வேண்டுமானால், அந்த ஆசார்யர்களின் கடாக்ஷம் பெற்றால்தான் இயலும். முக்த தசையிலே சென்று, நித்ய கோஷ்டியிலே நின்று, அவனை முழுவதுமாக அனுபவிக்க முடியும்.

அப்படிப்பட்ட முக்தர்களுக்குப் பரம கதியாய், உத்தம கதியாய் விளங்கக் கூடியவன் எம்பெருமான் *முக்தானாம் பரமாகதி* என்று விச்வ சப்தத்தில் முதலில் ஆரம்பித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. விச்வ சப்தம் காரியத்தை முதலில் சொல்கிறது. காரியமாகிற இவற்றுக்கெல்லாம் காரணமானவன் அவன் என்பதுதான் *முக்தானாம் பரமாகதி:*

*அவ்யய புருஷ ஸாக்ஷி க்ஷேத்ரக்ஞோ:*
*அக்ஷர ஏவச*

- இந்த ஐந்து திருநாமங்களும் ரொம்ப உத்தமமான திருநாமங்கள். வைகுண்டத்திலே ஒரு ஜீவனுக்கு - முக்தாத்மாவுக்கு ஏற்படக் கூடிய பெரும் பாக்கியம், முக்தாத்மா பெறக் கூடிய அனுபவம், இதிலே விவரிக்கப்படுகிறது.

த்வைத மதத்திலே - மத்வாச்சாரியார் ஏற்படுத்திய த்வைத மதத்திலே, ஆனந்தத்திலே தாரதம்யம் உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது. மோஷானுபவம் என்பது வித்யாசப்படும் என்கிறார். ஆனால், விசிஷ்டாத்வைதத்திலே ஆனந்தத்தில் தாரதம்யம் கிடையாது. எல்லோருக்கும் ஒரே விதமான ஆனந்தம், என்று இங்கே விசிஷ்டாத்வைதத்திலே சொல்லப்பட்டிருக்கிறது.

'ஒரு ஜீவனுக்கு அஹம் பிரும்மாஸ்மி என்கிற ஞானம் ஏற்பட்டுவிட்டால், அதைக் காட்டிலும் வேறு என்ன ஆனந்தம் வேண்டும்?' என்கிறார் ஆதிசங்கர பகவத் பாதாள் அத்வைத ஸ்தாபிதத்திலே.

## குறையொன்



23

இந்த மூன்று மதங்கள் சொல்வதையும் சேர்த்து ஒரு சுலோகம் இருக்கிறது. மத்வமத ஸாரமான விஷயம் அதிலே எடுத்துக் காட்டப்படுகிறது.

நாராயணன் பரதரன் - அவனைக் காட்டிலும் ஒரு படி குறைந்தவள் மஹாலக்ஷ்மி. இந்த ஜீவகணங்கள் எத்தனை உண்டோ, அத்தனையும் அவனை அடைய வேண்டியவைதான். நீச - உச்ச பாவங்களை அடைந்தவர்கள் எல்லோருமே, அவனை அடைய வேண்டியவர்கள்தான்.

அவனை அடைவதற்கு வேதம் நமக்குக் கண். பக்தி ஒன்றினால்தான் அவனை அடைய முடியும். வேதங்களால் அறியப்பட வேண்டியவன் நாராயணன். அவன்தான் உயர்ந்தவன். ஜீவன்கள் அனேகம். ஆனால் அவனை அடைவதற்கு பக்தி ஒன்றுதான் மார்க்கம்.

சாலோக்யாதி சதுர்மார்கம் என்பார்கள்.

**'சாலோக்யம்**

**சாமீப்யம்**

**சாரூப்யம்**

**சாயுஜ்யம்'** என நான்கு நிலைகள்.

சாலோக்யம் என்றால், ஒருத்தர் ஸ்ரீரங்கத்திலே வாஸம் பண்ணிக் கொண்டிருக்கிறார்.. பகவான் ரங்கநாதர் இருக்கிற இடத்திலேயே இருக்கிறார்.

சாமீப்யம் என்றால், இன்னொருத்தர் அந்த ரங்கநாதர் கோயிலிலேயே கைங்கர்யம் பண்ணிக் கொண்டிருக்கிறார்.

சாரூப்யம் என்றால், அவனிருக்கிற கோயிலுக்குள் **அவனருகிலேயே** - பக்கத்திலேயே - நின்றுகொண்டு கைங்கர்யம் பண்ணுவது.

சாயுஜ்யம் என்றால், அவனைப் பூரணமாக அனுபவிக்கும்படியாக அவனிடத்திலே நின்று, மற்றதை விட்டு அவனை மட்டுமே ஸேவித்துக் கொண்டிருப்பது.

மத்வாச்சார்யார் சொல்லக்கூடிய இந்த நான்கு நிலைகளிலே, சிலருக்கு சாலோக்யம் சித்திக்கிறது. லோகத்திலே வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பார்கள். ஸ்ரீரங்கத்திலேயே ஒருத்தர் இருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள்.. ரங்கநாதரை சேவிப்பதற்கு அவருக்கு ஒழிவதே இல்லை. நித்யவாஸம் ஸ்ரீரங்கம்தான். ஆனால் திடீரென்று வேறு எங்கிருந்தோ வருகிறவர்கள் அவனை சேவித்துவிட்டுப் போய் விடுகிறார்கள்! அங்கேயே இருந்தும் முடியவில்லை. அந்த மாதிரியான

று மில் லை

நிலை சாலோக்கியம்.

சாருப்யம் - கோவிலுக்குள்ளேயே வேலை செய்கிறார் ஒருத்தர். ஆனால் அவரால் பகவானை ஏகாந்தமாக சேவிக்க முடியவில்லை. காரியமே சரியாய் இருக்கிறது அவருக்கு. ஆனால் வேறொரு உத்தம பக்தர் அங்கே போய் நின்றுகொண்டு, பகவானை நன்றாக அனுபவிக்கிறார். நன்றாக திருதிருவென்று வெண்ணெய் சாப்பிட்ட திருமேனி அது! "வெண்ணெய் உண்ட வாயன்... என் அமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே..." பூரணமாக அனுபவிக்கிறார்.

இப்படி அவரவர்கள் நிலைக்கேற்ப, ஆனந்தத்திலேயும் தாரதம்யம் உண்டு என்று உபநிஷத் வாக்கியத்தைக் கொண்டு, ஆனந்த தீர்த்தர் ஸ்தாபிதம் பண்ணுகிறார்.

தைத்ரீய உபநிஷத்தில் காட்டப்பட்ட விஷயம் இது.

'பகவானுக்குச் சமமான போகங்களைப் பூரணமாக ஜீவாத்மா அனுபவிக்கிறான்' என்று விசிஷ்டாத்வைதம் ஸ்தாபிக்கிறது. அந்த எம்பெருமானுக்குத் துல்யமான போகம், ஞானம் எல்லாம் பெற்று, பரிபூரண பிரும்மானுபவம் அடைகிறான். இந்த பரிபூரண பிரும்மானுபவத்தில் - ஆனந்தத்தில் - தாரதம்யம் இல்லை என்பதை, விசிஷ்டாத்வைதத்தில் ஆசார்யர்கள் சொல்கிற அழகை நாம் கவனிக்க வேண்டும்.

எல்லோருக்குமே பிரமாணம் வேதம்தான்; அந்த உபநிஷத் சொல்கிற **தத்வமஸி** இத்யாதி வேத வாக்கியங்கள்தான்.

மதம் என்றாலே அபிப்ராயம் என்றுதான் அர்த்தம். உபநிஷத் வாக்கியத்தை, ஆசார்யர்கள் தங்கள் கருத்தாக வெளியிட்டார்கள். அதற்குண்டான பிரமாணங்களைத்தான் அவரவர்கள் எடுத்துக் காண்பித்தார்கள்.

*முக்தானாம் பரமாகதி:* - இவ்வாறு பரகதி அடைந்த முக்தனிடம் பகவானுக்கு வ்யயம் என்பதே கிடையாது. (அவ்யய) குறைதல் என்று ஒன்று உண்டோ பகவானிடத்திலே...? அவ்யயன் அவன்! **கொள்ளக் குறைவிலன்** - அவ்வயயத்தைத் தமிழ்ப் படுத்திக் காட்டினார் ஆழ்வார்.

தமிழில் சொல்ல வேண்டுமானால், ஆழ்வார்கள்தான் சொல்ல வேண்டும். 'குறைவில்லாதவன், குறையொன்றுமில்லை என்று நான் எவ்வாறு சொன்னாலும் சரியாகாது. 'கொள்ளக் குறைவிலன்' என்று சொன்னார் பாருங்கள்! 'கொள்ளமாளா இன்ப வெள்ளம்' என்றார்! எடுக்க எடுக்க இன்பவெள்ளம் பிரவகித்து ஓடுகிறது! எடுக்க எடுக்கக் குறைவில்லாதவன் - சுவாமி தேசிகன் இதை ஒரு வாக்கியத்திலே சொல்லிவிடுகிறார்:

*'தமதனைத்தும் அவர் தமக்கு வழங்கியும், தான்மிக விளங்கும்' என்கிறார்.*

*வரம் ததாதி வரத:*

*'கருத வரம் தரும் பெருமாள் வந்தார்'*

நாம் என்ன விரும்புகிறோமோ, அதைக் கொடுக்கக் கூடியவன் அந்த எம்பெருமான்.

நம்மிடத்தில் ஒரு பொருள் இருக்கிறது. பத்தாயிரம் ரூபாய் பணம் இருக்கிறது. நாலாயிரம் ரூபாயை ஒருத்தரிடம் கொடுத்தால், நம்மிடம் பணம் குறைகிறது. வஸ்துவும் (பொருளும்) அப்படித்தான்.

ஆனால் பகவான் அப்படி இல்லை. கொடுக்கக் கொடுக்க, தான் மிக விளங்குகிறான். கொடுக்கக் குறைவில்லாமல் விருத்தி அடைகிறான். இதைத்தான் அவ்யய: என்றார். இந்தத் திருநாமத்தை நன்கு கவனிக்க வேண்டும். வ்யயம் நாஸ்தி - அவனிடத்திலே வ்யயம் கிடையாது; அவ்யயன் அவன் என்பது ஒரு பொருள். மற்றொரு பொருள்: இவ்வளவு

---

"சென்னையில தண்ணிப் பிரச்னை இருக்கிறது உண்மைதான், அதுக்காக இப்படியா?"

"என்னாச்சு?"

"அந்த ஹோட்டல்ல கை கழுவுமிடத்தில் கை துடைக்குமிடம்னு எழுதி பழைய நியூஸ் பேப்பர்களை அடுக்கி வச்சுருக்காங்க."

- ஆரூர் சேகர்

---

சிரமப்பட்டு மோக்ஷத்தை அடைந்திருக்கிறார்களே முக்தர்கள். சம்ஸார பந்தத்தை விட்டு இந்த நிலைக்கு வந்திருக்கிறார்கள். அப்படி அடைந்தவர்களை அவன் மறுபடியும் பூலோகத்துக்கு அனுப்பினால் என்ன பண்ணுவது? - இப்படி ஒரு கேள்வி. அவன் சுவதந்திரன் அல்லவா! அவன் என்ன வேண்டுமானாலும் பண்ணுவான்; பண்ணலாம்!

ஆனால் 'அவ்வாறு பண்ணுவானா...?' என்று ஒரு கேள்வியைக் கேட்டு, 'அப்படிப் பண்ண மாட்டான்' என்கிறது வேதம். ஏனென்றால், அது ஒரு பைத்தியத்தின் செயலேயொழிய வேறில்லை என்கிறது! அந்த ஞானியைப் பெறுவதற்கு, தன் பக்கம் பெறுவதற்கு, இவன் எத்தனை சிரமப்பட்டிருக்கிறான். அவனை அடைவதற்கு இவன்தான் என்ன பாடு பட்டிருக்கிறான். இந்த இரண்டையும் நினைத்த பிற்பாடு, அவன் மீண்டும் அந்த ஜீவனை பூவுலகுக்கு அனுப்ப வேண்டும் என்று நினைப்பானா!

பிரும்ம சூத்திரத்தில் கடைசி சூத்திரம் - அனாவ்ருத்தி சப்தாத். ஆவ்ருத்தி என்றால் திரும்பத் திரும்ப பூலோகத்தில் பிறத்தல். அனாவ்ருத்தி என்றால், பிறவாதிருத்தல். எதைக் கொண்டு இதை நாம் தெரிந்து கொள்கிறோம் என்றால், வேதத்தைக் கொண்டு தெரிந்து கொள்கிறோம். எந்த வேதத்தில் வருகிறது...? சாந்தோக்ய உபநிஷத்தில் வருகிற வாக்கியம்தான். அந்த சூத்திரத்தில் 'அனாவ்ருத்தி சப்தாத்' என்று வருகிறது.

சதஸ்ஸிலே சூத்திரம் சொன்னால், அதற்கு விஷய வாக்கியம் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லாவிட்டால், அழகிய சிங்கர் எழுப்பி சம்பாவனை பண்ணி அனுப்பி விடுவார். விஷய வாக்யம் - உபநிஷத் வாக்யம் தெரியாமல் சூத்திரம் மட்டும் சொன்னால், பிரயோஜனமில்லை.

அதனால்தான் பூர்வாசிரமத்திலேயே அழகிய சிங்கர் சூத்திரங்களையெல்லாம் சேர்த்து வைத்து, 'சூத்திர அனுக்ரமணிகா'



என்று ஒரு ஸ்தோத்திரம் பண்ணினார்.

அதை நெட்டுருப் பண்ணி ஒப்பிக்கிறவர்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் சம்பாவனை என்றார்! எல்லோரும் மனப்பாடம் பண்ணி விட்டார்கள்! திரவியத்தை காட்டினால், பாடம் பண்ணாமல் இருக்கக்கூடிய பாடங்கள் பாடமாகிவிட்டது! அப்படிப் பாடம் பண்ண வைத்தார் அவர். அவ்வப்போது பரீட்சையும் வைப்பார். பஞ்சஸ்தவம்: - கூரத்தாழ்வார் அருளிய சுந்தரபாகு ஸ்தவம், வரதராஜ ஸ்தவம், உயர்ந்ததாக இருக்கும்படியான அதிமானுஷஸ்தவம், ரங்கராஜ ஸ்தவம், ஸ்ரீ ஸ்தவம் என்று ஐந்து ஸ்தவங்கள். இவற்றில் பொதுவாகக் கொஞ்சம் கொஞ்சம் - சில சுலோகங்கள் தெரிந்திருக்கும் அனேகருக்கு. ஆனால் சுவாமி என்ன பண்ணினார்... எல்லோரும் பஞ்சஸ்தவம் சொல்லும்படியான சக்தியை உண்டு பண்ணினார். அந்த மாதிரி உபநிஷத் வாக்கியங்கள், அந்த சூத்திரங்களைச் சொன்னால், அந்த விஷயங்கள் எங்கே சொல்லப்பட்டிருக்கின்றன, யார் சொன்னார்கள் என்பதைச் சொல்ல வேண்டும்.


**கா**ர்பங்காடு சுவாமியின் சிஷ்யர் வேளுக்குடி வரதாச்சாரி சுவாமி. அவர் திருவள்ளூரிலே எழுந்தருளியிருக்கிறபோது, சர்வத்ர ப்ரஸித்ய அதிகரணத்தை ஆரம்பிக்கச் சொன்னார். அப்போது இஞ்சிமேட்டு அழகிய சிங்கர் அங்கே எழுந்தருளியிருந்தார். அவர் முன்னிலையில் இப்படிச் சொன்னதும், 'சர்வத்ர ப்ரஸித்தியாக வேண்டும் என்ற திருவுள்ளமோ உங்களுக்கு?' என்றார்! பரமாத்மாவை, சரவத்ர பிரஸித்தனாகக் காட்டுகிற சூத்திரம் அது.

பரமாத்மா என்று அவனைச் சொல்லியிருப்பதால், சாமான்யமாக அவனை நினைத்து விடாதே! எந்த உபநிஷத்தை எடுத்துப் பார்த்தாலும் சர்வத்ர ப்ரஸித்தமாக ஆத்ம சப்தத்துக்குப் பரமாத்மா என்று பொருள் வருகிறது. இதிலே சந்தேகமே கொள்ள வேண்டாம் என்று நமக்கு விளக்குகிறது அந்த சூத்திரம். இப்படி பிரும்ம சூத்திரத்திலே போய் உட்கார்ந்தோமானால், அப்படியே இழுத்துக் கொண்டு போய்விடும் நம்மை. அதுதான் விசேஷமானது.

அவ்யய என்றால், பரமாத்மா மோக்ஷத்தை அடைந்தவர்களை மோக்ஷத்திலேயே காப்பாற்றி வைப்பான். அவர்களுக்கு மோக்ஷ சாம்ராஜ்யத்திலேயிருந்து குறைவு என்பது உண்டோ? அவ்வளவு ப்ரியத்தை சம்பாதித்த ஞானிகளை மறுபடியும் பூலோகத்துக்கு அனுப்ப மாட்டான் பகவான். ஒரு நாளும் அனுப்ப மாட்டான்.

உலகத்திலே ஒருத்தர் நிறைய தானம் கொடுக்கிறார். கொடுப்பவரைப் பார்த்து "அடாடா! என்ன உதார ஹ்ருதயம்" என்று நாம் கொண்டாடுகிறோம். ஆனால் பகவான் என்ன பண்ணுகிறான்...? கையை நீட்டிக் கேட்பவர்களைப் 'பார்த்து 'அடாடா! என்ன உதார ஹ்ருதயம்!' என்று மாற்றிச் சொல்கிறான் கீதையில். ஏனென்றால், அவன் கையை நீட்டினால்தானே கொடுப்பவன் கொடுக்க முடியும்! அதே மாதிரிதான் பகவானிடத்திலே கை நீட்டிக் கேட்கிறவன் உதாரனாகிறான். அவன் கேட்பதனால்தானே பகவானுக்குக் கொடுக்கும் குணம் என்று ஏற்படுகிறது. ஆகவே, பகவானை அவன் விளங்கச் செய்கிறான். அப்படிப்பட்டவன் கிடைத்த பிற்பாடு அவனை விடுவானோ அந்த பகவான்!

(தொடரும்)


ஜில்லு மல்லு
-கதிர்
இந்தப் புது வருஷம் எப்படி இருக்கப் போகுதோ, தெரியலையே.
என் ராசிப்படி எனக்கு மதிப்பு மரியாதையெல்லாம் ஏறப் போகுதாம்...
ஐயே!
டேய்... டேய்... நகருடா...
மல்லு... பாத்து...
டமால்
அம்மா
என்னடா... இந்த வருஷம் உன் மதிப்பு, மரியாதையெல்லாம் ஏறப்போகுதுன்னு சொன்னே... அதுக்குப் பதிலா... உன் பைக் டயர் இப்படி ஏறிடிச்சேடா...
ஐயாம் ஸாரி...
ரொம்ப தாங்க்ஸ்! இலேசா குடலேத்தம் இருந்தது. இப்ப சரியாயிடுச்சு! நீங்க டாக்டரா?
அடேய்... ராசிபலன் வொர்க் அவுட் ஆயிடுச்சுபோல இருக்கே!


KPN
Travels India Ltd.
K.P.N
* 25 சீட் எக்ஸ்சிகியூட்டிவ் செமி ஸ்லீப்பர்
* A/C செமி ஸ்லீப்பர் ஏர் பஸ்
* ஸ்பெயின் மற்றும் ஸ்வீடன் பஸ்கள்
முதல் முதலாக இந்தியாவில்
தினசரி சர்வீஸ்: தமிழ் நாட்டில் அனைத்து
ஊர்களுக்கும் மற்றும் பெங்களூர்,
திருவனந்தபுரம், எர்ணாகுளம், கோட்டயம்
KPN
Travels India Ltd.
Speed Parcel Service Pvt. Ltd.
துரித பார்சல் மூலம் அனைத்து ஊர்களுக்கும்
(தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா)
பார்சல் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.
Ph: 2445740 / 2334273 Fax : 2334274
Head Office: No. 23-B, Rajaji Street, Swarnapuri, Salem - 636 004.
Ph: 2446391, 2446392 2336133 to 38 (6 Lines) Fax : 2331612, 2446049

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka





# கல்கி

KALKI 11.1.2004

இதழுடன்
இலவச
இணைப்பு

## “ஈஸியா எடுத்துக்க முடியாது ஊர்வசி!”

— உற்சாகக் கற்பனை


வாழ்வின் இனிமையான
நேரங்களில் இணைந்திருக்கும்
சுபமங்கள பட்டுகள்
போத்தீஸ்
அழகிய ஜவுளிகளின் ஆலயம்
உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை 17. போன் : 2431 0901
3, வடக்கு ரத வீதி, திருநெல்வேலி டவுன் - 6. போன் : 233 7093

# தக்கையின் மீது நான்கு கண்கள்



ஒரு சிறுகதையை சுவாரசியமான திரைப்படமாக்க முடியுமா?

முடியும் என்று நிரூபித்திருக்கிறார் இயக்குனர் வசந்த்.

சில வருடங்களுக்கு முன் சா. கந்தசாமி 'கசடதபற' இதழில் எழுதி வெளியான 'தக்கையின் மீது நான்கு கண்கள்' சிறுகதைக்குத் திரைக்கதை - வசனம் எழுதி இயக்கி இருக்கிறார் வசந்த்.

மீன் பிடிக்கும் தாத்தாவுக்கும், அவருக்குத் துணை போகும் பேரனுக்கும் இடையேயான உறவைச் சித்திரிக்கும் இந்தக் குறும்படத்தில், ஏ.கே. வீராசாமி தாத்தா, ராம் சரவணன் பேரன்.

**கா**லங் காலமாக மீன் பிடிக்கும் தாத்தாவுக்கு மீன்களே சிக்குவதில்லை. மீன் பிடிக்க உத்திகள் சொல்லுகிறான் பேரன். அத்தோடு கிழவன் கையில் கட்டியிருக்கும் காப்புக் கயிற்றை அவிழ்த்துத் தனக்குத் தந்துவிடும்படி கேட்கிறான். அப்போது தொடங்குகிறது கிழவன் - பேரன் இடையே விரிசல். ஒரு நாள், பேரன் தன் நண்பர்களுடன் ஒரு வஞ்சிரத்தைப் பிடித்துக் கொண்டு ஆனந்தமாக வந்து காண்பிக்கையில், ஆத்திரத்தோடு அறைந்தே விடுகிறார் தாத்தா. பாட்டி சமைத்துத் தரும் மீன் குழம்பைக்கூட அன்று அவர் தொடுவதில்லை. தன் இயலாமையை உணர்ந்து, குமுறிக் கரைந்த பிறகு, தன் தாயத்துக் கயிற்றை, தள்ளிப் படுத்திருக்கும் பேரனின் தலைமாட்டில் அவிழ்த்து வைக்கிறார் தாத்தா.

அச்சில் இச் சிறுகதையைப் படித்தவர்கள் உணர்ச்சி வசப்பட்டிருக்க வாய்ப்பில்லை. ஆனால் கிழவனின் ஆற்றாமை, பேரனைக் கடிந்து கொண்ட கட்டத்தில் அதை நினைத்துத் துடிக்கும் சோகம் - படத்தைப் பார்ப்பவரிடையேயும் அவ்வுணர்வுகளை உருவாக்கியிருப்பதுதான் வஸந்தின் வெற்றி.

பேரன் ஒரு முழு மீனைத் தூக்கிப் பிடித்தபடி தோழர்களோடு ஆரவாரத்துடன் வருவதும், தாளம் போட்டுக்கொண்டு எதிரே ஒரு குழுவினர் வருவதும் ஒரு புதிய பிறப்பை அறிவிக்கும் யுக்தியாகப் பளிச்சிடுகிறது.

தொலைக்காட்சிக்காகத் தயாரிக்கப்பட்ட இக் குறும்படம், இது போன்ற அரிய முயற்சிகளுக்கு முதல் அடி வைத்ததாக இருக்கட்டும்.

- சாருகேசி





# ஆதி சங்கரர் கண்ட அன்னை!

பாரதத்தாயின் மணி மகுடம் இமயமலை என்றால், அவளது பாதக்கமலம் கன்னியா குமரி. அன்னை பராசக்தி கன்னி தெய்வமாய் தவமிருந்த சக்திபீடம். அதற்கு ஆதாரமாய் அவளது ஸ்ரீபாதங்கள் பதிந்த பாறை, காலங்களைக் கடந்து இன்னும் இங்கே காட்சி தரும் தெய்வீகத்தை என்னென்று சொல்வது? குமரி முனைக்கு ஆயிரம் சிறப்புக் கள் இருந்தாலும், தேசத்தின் காவல் தெய்வமாய் குமரி எல்லையில் தவக்கோயில் கொண்டிருக்கும் அம்மை பகவதிதானே ஆதிமுதல் சிறப்பு? அவளது தவ வலிமை பரவிக் கிடக்கும் இந்தக் குமரி மண்ணை நாடி காலந்தோறும் வருகை தந்த தெய்வங்களும், புராண புருஷர்களும், சமயச் சான்றோர்களும் எத்தனை பேர்!

முருகப் பெருமான் தமது தந்தையை பூஜித்து வழிபட, இப்பூவுலகில் சிறந்த இடம் தேடி அலைந்து, இறுதியில் முக்கடலும் கூடி மகிழும் குமரித் துறையைத் தேர்ந்தெடுத்தார். இங்கே சிவலிங்க உருவை எழுப்பி வழிபட்டார். இப்படி ஈஸ்வரர் குகனை ஆண்ட காரணத்தால் குகனாண்டேஸ்வரர் என அழைக்கப்பட்டதாக, சங்கர நாவலர் இயற்றிய தலபுராணம் கூறுகிறது. இதை உறுதி செய்வதுபோல் குமரி முனையை ஒட்டிய ஒரு கிராமம் இன்னும் 'சரவணன் தேரி'யாக விளங்குகிறது. குமரிக் கடலில் உள்ள ஒரு குன்று இன்றும் 'முருகன் குன்றம்' என்று அழைக்கப்படுகிறது. அவ்வளவு ஏன்? கந்தபுராணத்தில் வருகின்ற 'குமரித்துறை ஆடுற வந்தனம்' என்ற வரி முருகனின் குமரி தரிசனத்தை உறுதி செய்து விடுகிறதே!







இராமபிரான், சீதாப்பிராட்டியை மீட்க இலங்கைக்குச் செல்வதற்கு ஏற்ற இடம் தேடி குமரி முனைக்கு வந்தார். அணை கட்ட முயன்று தோல்வியடைந்து, பின்னர் அன்னையின் அருள்பெற்று இராமேஸ்வரம் சென்றதாகவும், அது முதல் கன்னியாகுமரி, ஆதி சேது எனப் பெயர் பெற்றதாகவும் கன்னியாகுமரி தலபுராணம் கூறுகின்றது. குமரித் துறையில் நீராடுவோர் "ஆதிசேதோ" என்று சொல்லி சங்கல்பம் செய்து கொள்வது, கன்னியாகுமரியே ஆதி சேது (சேது - அணை) என்பதற்கு வலு கூட்டுகிறது. குமரித் துறையில் வானரப் படைகள் அணை கட்டிய அழகை, "குரங்கு செய் கடல்குமரியம் பெருந்துறை" என்று சிலப்பதிகாரம் சொல்ல, காசியிலிருந்து கால்நடையாகவே சாலி என்ற வடநாட்டுப் பெண் குமரித் துறைக்கு வந்து, புனித நீராடி, பாவம் போக்கிக் கொண்டதை மணிமேகலை சொல்கிறது. இன்னும் பழமையான யஜுர் வேதம், தொல்காப்பியம் என்று குமரி முனையைப் பற்றி பண்டைய குறிப்புகள் ஏராளம்.

இப்படி அன்னை பகவதியின் அருளாட்சி, பிரபஞ்ச நீட்சியாய் இங்கே விளங்குவதை அறிந்துதான் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆதி சங்கரர், குமரி முனைக்கு வந்து அம்மன் அருள் பெற்று, அம்மன் பெயரால் சௌந்தர்ய லஹரி என்னும் அரிய வழிபாட்டு நூலையும் குமரியிலேயே இயற்றினார் என்று அடித்துச் சொல்கிறார் குமரி மாவட்ட ஆராய்ச்சியாளர் டாக்டர் பத்மநாபன்.

"ஆதி சங்கரர் கைலாயத்தில் சௌந்தர்ய லஹரியைப் படைத்தார் என்பது புராணம். காஷ்மீரில் எழுதினார் என்பது கற்பனை. முக்கடல் அலைகளையும், அந்த அலைகள் நடுவே




* விவேகானந்தர் நினைவாலயம் ஸ்ரீ பாத பாறை



* முக்கடல் கூடும் துறையில் அன்னையின் ஆலயம்

காட்சி தரும் குமரியம்மனின் பேரழகையும் கண்ணுற்ற ஆதிசங்கரரின் உள்ளத்தில், அழகு தெய்வத்தைப் பற்றிய நூலொன்றை எழுதும் எண்ணம் தோன்றி இருக்க வேண்டும். கடல் அலைகளின் ஒலிகளும், வண்ணங்களும் உருவாக்கிய சூழ்நிலைதான் தேவியைப்பற்றி அவர் எழுதிய நூலுக்கு சௌந்தர்ய லஹரி (அழகு அலைகள்) என்ற தலைப்பைத் தந்திருக்க வேண்டும்.

"உச்சிமுதல் உள்ளங்கால்வரை தேவியின் அழகினை சொல்லோவியமாகத் தீட்டிய அவர், அன்னையின் கண்களைப்பற்றிக் கூறும் போது, 'தாயே உன் வலது கண் சூரியனாக இருப்பதால் பகல் தோன்றுகிறது. உன் இடது கண் சந்திரனாக இருப்பதால் இரவைப் படைக்கிறது' என்று குறிப்பிடுகிறார். இன்னும் இந்தியத் திருநாட்டில் சூர்யோதயம், சூர்ய அஸ்தமனம் இரண்டையும் காணும் ஒரே இடம் மட்டுமல்ல, சித்திரை மாதப் பௌர்ணமி அன்று, மறையும் சூரியனையும் உதிக்கும் சந்திரனையும் ஒரே நேரத்தில் காணுமிடமும் குமரிதான். இதைத்தானே ஆதிசங்கரர் அன்னையின் கண்களாக்குகிறார். முக்கியமாக திருச்செந்தூர் வந்தவர் அங்கே சுப்ரமணிய புஜங்கம் எழுதினார். பிறகு சுசீந்திரம் மும்மூர்த்திகளைப் பற்றி இருபத்தியொரு பாடல்கள் எழுதி வைத்தவர், சௌந்தர்ய லஹரியை குமரியில் தானே படைத்திருக்க முடியும்?" என்பது இவரது விளக்கம்.




குமரியம்மனின் தெய்வீகமும், குமரியின் ஆன்மிக வரலாறும், விவேகானந்தரையும் ஈர்த்தன. 1892ஆம் ஆண்டு டிசம்பர் இருபத்தைந்தாம் தேதி, அன்னையின் ஸ்ரீ பாதம் இருக்கும் பாறைக்கு நீந்திச் சென்று, மூன்று நாட்கள் தவமிருந்தார். அங்குதான் அவருக்கு ஞானம் கிட்டியது. சிக்காகோ சென்று பாரதத்தின் சிறப்பை எடுத்துக் கூறும் எண்ணம் அங்குதான் அவருக்குத் தோன்றியது. அதை அவரே சொல்கிறார் பாருங்கள் : "குமரியம்மன் ஆலயத்தில், பாரதத்தின் கடைசித் துண்டான பாறையில் இருந்தபோது என் உள்ளத்தில் ஒரு திட்டம் தோன்றியது" என்கிறார். புத்தருக்கு போதி மரம் என்றால், விவேகானந்தருக்கு அன்னையின் ஸ்ரீ பாத பாறை.

அஞ்ஞானத்திற்கும், மெய்ஞானத்திற்கும் அப்பாற்பட்டு, கன்னியாகுமரி கடற்கரை மணலில் அணு ஆயுதம் செய்வதற்குரிய தோரியம் எனும் அரிய பொருள் காணப் படுவதாகச் சொல்கிறது விஞ்ஞானம். இவ்வகையிலும் கன்னியாகுமரி சக்தியின் உறைவிடமாகிறது.

நாற்புறமும் பெரு மதில்களால் சூழப் பெற்ற இவ்வாலயத்தில், கிழக்கு நோக்கி தவக்கோலத்தில் மாணிக்க மூக்குத்தி மின்ன, காட்சி தரும் குமரி அம்மன் அணு ஆயுதங்களின் கொடூரத்திலிருந்து இவ்வுலகையும் காக்க வேண்டும்!

- ஸ்ரீ





# ஆசை

அவனுக்குள் ஏன் அப்படியொரு எண்ணம் எழுந்ததோ தெரியவில்லை...

துறவியாகப் போக வேண்டுமென்று...

இத்தனைக்கும் அவனுக்கு வயது பதினைந்து.

பாடங்களில் புத்தத் துறவிகள் குறித்தும், இந்து மதத் துறவிகள் குறித்தும், சமணத் துறவிகள் குறித்தும் படித்திருந்தான். தலையில் மொட்டை போட்டு, ஒற்றைக் காவியுடுத்தி, தியானத்தில் அவர்கள் நின்றிருக்கையில் முகத்தில் ஒளிரும் தேஜஸ், உதடுகளில் தவழும் புன்னகை, தலைக்குப் பின்னால் தெரியும் ஒளி வட்டம் எல்லாம் அவனுக்குப் பிடித்திருந்தன.

காலண்டர்களில், படங்களில் பார்த்த கடவுளர்களுக்கும், தலைக்குப் பின்னால் ஒளிவட்டம் பார்த்திருக்கிறான்.

கடவுளின் ஒளி வட்டத்திற்கும், துறவிகளின் ஒளி வட்டத்திற்கும், என்ன பொருள்... இருவருக்கும் மூளை பிரகாசமாக இருக்கிறது என்பதை உணர்த்துவதா அது? அப்படியானால் பிரகாசமான மூளை படைத்த மனிதர்கள் யாருமில்லையா? அப்படியிருந்தால் அவர்கள் துறவிகளாகவோ, கடவுளாகவோ ஆகிவிடுவார்களா...?

என்றெல்லாம் யோசித்தான்.

துறவி மிக மிக எளிமையாய் இருந்தார். அதிகம் போனால் தண்டம், கமண்டலம், பாதுகைகள் இருந்தன.

துறவிகளின் மேல் அவனுக்கு ஈர்ப்பு அதிகமானதற்கு இதுவும் ஒரு காரணம்.

துறவு சம்பந்தமாகவும், துறவு வாழ்க்கை சம்பந்தமாகவும், அவனுக்கு ஆலோசிக்க சரியான ஆட்கள் அமையவில்லை.

பாடம் நடத்தும் போது ஆசிரியர், ''விவேகானந்தர் ஒரு துறவி'' என்றார். மேற்கொண்டு விவரம் தெரிந்து கொள்ள,

''டாக்டர், விஞ்ஞானி, வக்கீல்னு சொல்றது போல துறவிங்கறதும் ஒரு பட்டமா சார்?'' என்று கேட்டான்.

''வாயை மூடிக்கிட்டு உட்காருடா முந்திரிக் கொட்டை'' என்றார்.

வகுப்பு 'கொல்' லென்று சிரித்தது.

அவன் ஊரில் பெரிதாக கோயில்கள் ஏதும் இல்லை. சிறு தேவதைக் கோயில்களும், ஊர் மையத்தில் ராமர் கோயிலும் இருக்கும். பேருக்குத்தான் அது கோயில். மற்றபடி அது ஒரு ரூம் போலத்தான்.

கணேசன் நூலகத்தைச் சரணடைந்தான்.

கணேசன் போனபோது, நூல்களின் அடுக்குகளுக்குப் போக விடவில்லை நூலகர்.

"எனக்குப் புஸ்தகங்கள் வேணும்..."

"என்ன மாதிரி?"

"வந்து... துறவிகள் சம்பந்தமா..."

"வயசுக்கேத்தாப்ல கேளு... தமிழ்வாணன் படிக்கறியா... சி.ஐ.டி. சங்கர்லால் கதை..."

''இல்லை... துறவி கதைகள் தான் வேணும்...''

"நீ சரித்திரக் கதைகள் கேட்கறேன்னு நினைக்கறேன்... நாகநந்தி... புத்தபிட்சு?"

''விவேகானந்தர், வள்ளலார், ராமகிருஷ்ணர்னு சொல்றாங்களே...''

"ஓஹோ.... ஸ்கூல்ல ஏதும் கட்டுரைப் போட்டியா...?"

"இல்...ம்...ஆமாம்."

''அதோ அந்த மூணாவது ஷெல்ஃப்லே! கலைக்காமப் பாரு... என்று சொல்லிவிட்டு, கோழி இறகில் காது குடைந்தார். நீண்ட தேடலுக்கு பின், கணேசன் கொண்டு வந்த புத்தகங்களைப் பார்த்த நூலகர் மிரண்டு போனார். கணேசன் கைகளில் பரமஹம்சரின் போதனைகள் மூன்று பாகங்கள் இருந்தன.

"தம்பி... எந்த எடத்துல எடுத்தியோ அங்கயே வச்சிட்டு நடையைக் கட்டு" என்று நூலகர் எழுந்து வந்து பிடுங்கிக் கொள்ளவும் செய்தார்.


''இதை எல்லாம் உன்னால படிக்க முடியாது. விலை அதிகமுள்ள புத்தகங்களை வீட்டுக்கெல்லாம் கொடுக்க முடியாது. உன் பாடப் புஸ்தகத்துலயே ராமகிருஷ்ணர் பத்தி போட்டிருக்கும். அதைப் படிச்சு கட்டுரை எழுது போ..."

- என்று விரட்டினார்.

எல்லா வகையிலும் அவனுக்கு அனுமதி மறுக்கப்பட்டதால், கணேசனுக்கு மனகக்குள் தீவிரம் உண்டாயிற்றே தவிர, சலிப்பு வெறுப்பு உண்டாகவில்லை.

அந்த சமயம், திருத்தணி கோயில்தான் ஞாபகத்துக்கு வந்தது.

வருஷா வருஷம், ஊரார் ஆடி மாசத்தில் காவடி எடுத்துக் கொண்டு போய் வருவார்கள். கணேசனும் போயிருக்கிறான். அந்த மலையில் துறவிகளைப் பார்த்த ஞாபகம். அங்கே போய்விடுவது என்று முடிவெடுத்தான்.



"அப்பா, இந்த சைக்கிளை வச்சுக்கிட்டு அவசரமா நூறு ரூபாய் பணம் வாங்கியாறச் சொன்னாரு..." என்றான் கணேசன். கடைக்காரர் பரிச்சயமானவர்.

''அப்படியென்ன தலைபோற காரியம்? எல்லாம் மூணு சீட்டு பண்ற வேலை. படிக்கிற குழந்தை, சைக்கிள்கூட இல்லேன்னா எப்படித்தான் ஸ்கூலுக்குப் போவான்...'' என்று கவலைப்பட்டாலும், வண்டியை எடுத்துக்கொண்டு காசு கொடுத்தார்.

விஷயம் வீட்டுக்குத் தெரியுமுன் ஓடிப் போக வேண்டும். விடிந்த பின் அம்மா தேடுவாள்; அப்பா தேடுவார். ஏதோ விபரீதம் நடந்திருப்பதை உணர்வார்கள்.

அம்மா அழுவாள். அப்பா ஸ்கூலில் போய் விசாரிப்பார். யாருக்கும் காரணம் தெரியாது. ''பத்தாவது 'பி'க்ளாஸ் ஸ்டுடண்ட் ஒருத்தன் காணாமல் போய்ட்டானாம்'' என்று சேதி பர

படுதலம் சுகுமாரன்



# ஒட்டுமா? ஒட்டாதா?

"'ஜூட்' படத்தில் அதிரடி கோதாவில் மிரட்டிய ஸ்ரீகாந்தை, மறுபடி காதல் கசிய நடிக்க வைக்க கஷ்டப்படுவோமோ என்று நினைத்தேன்... சட்டென்று கதையோடு ஒட்டிக் கொண்டு, என் வயிற்றில் பால் வார்த்தார்'' என்று சந்தோஷப்படுகிறார் 'வர்ண ஜாலம்' இயக்குனர் நகுலன் பொன்னுசாமி.

கிட்டே வந்து காதல் பசையோடு பேசுவது சதா ஆச்சே! ஒட்டாமல் என்ன பண்ணுவார்?...

- ஜெ

வும்.

போலீஸ் ஸ்டேஷனுக்குப் போவார்களா?

''என்னிட்ட துறவியா போறது பத்தி ஐடியா கேட்டான்' என்று யாராவது சொன்னால் பொருட்டாக எடுத்துக் கொள்வார்களா...? போலீசுக்குப் போனால் என்னாகும்...! அப்படியே அவர்கள் தேடினாலும், கண்டுபிடிப்பதற்குள் மொட்டையடித்துக் கொண்டு, காவி கட்டிக் கொண்டு... ஏதாவது மடத்தில் ஒளிந்து கொண்டால் போகிறது.

தூக்கம் பிடிக்காமல் விழித்துக் கொண்டிருந்தான். நீ...ண்...ட இரவு அது. ஒரு வழியாய் விடிந்தது.

ஓசைப் படாமல் தெருவில் நடந்து, ரோடுக்கு வந்து, பஸ் நிறுத்தத்துக்கு வந்தான். ஸ்டாப்பிங்கில் ஈ காக்கை இல்லை. இருளும், குளிரும் கப்பிக் கிடந்தது. மனத்தின் திட சங்கல்பத்துக்கு முன் எதுவும் பொருட்டில்லைதானே...?

அரை மணி கரைந்தது.

வடக்கிலிருந்து ஒரு புள்ளியாய் தோன்றி... கொஞ்சம் கொஞ்சமாய் பெரிதாகி உறுமலாய் வந்தது முதல் பஸ். கை காட்டினான். வேகம் குறைந்தது. உரசியபடி வந்து நின்றது. கம்பிகளைப் பிடித்து ஏறப்போகும் போது...

''என்ன அவசரம்... நான் இறங்க மாட்டேனா. உங்க அப்பன் வராம, உன்னை அனுப்பி வச்சிட்டானாக்கும்...'' என்றபடி அந்த மனிதர் மூட்டை முடிச்சுகளோடு இறங்கினார். கூடவே அவர் மனைவி, கடைசியாக... அட அது யார்? வானத்து தேவதையா? கானகத்து மோகினியா... பாவாடை கட்டிய பட்டாம் பூச்சியா, கதையில் படித்த வேலு நாச்சியா?... முன் எப்போதும் கண்டிராத காட்சி....

கணேசனை ஆச்சரியத்தில் விட்டு விட்டு, பஸ் புறப்பட்டுவிட்டது.


''அந்தப் பெட்டியை எடுத்துக்கோடா. இனிமே, இந்த ஊர்லதான் இருக்கப் போறம். இவள் சந்திரா. எங்கள் ஒரே மகள். ஒன்பதாம் வகுப்புக்கு நீ படிக்கற ஸ்கூல்லதான் சேர்க்கறதா இருக்கோம். நீதான் அவளுக்குப் பாதுகாப்பு. புரிஞ்சுதா?'' என்றபடி நகரி ராமலிங்கம் மாமா முன்னால் நடக்க, மரகதம் அத்தை பின்னால் நடக்க, கணேசன் பெட்டியை எடுத்துக் கொண்டு, அந்த மரகதச் சிலையுடன் இணையாக நடந்தான்.

விடிந்ததும் கடைக்கு ஓடி, சைக்கிளை மீட்டுவிட வேண்டும் என நினைத்துக் கொண்டான். ○

**இப்போது விறுவிறுப்பான விற்பனையில்!!!**

**புகழ்பெற்ற ஆன்மீக ஆசான்**

# பரமஹம்ச யோகானந்தரின்





## ஒரு யோகியின் சுயசரிதம்

20ஆம் நூற்றாண்டில் வெளியான சிறந்த 100 ஆன்மீக நூல்களில் ஒன்றானதும் 22 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டதுமான உள்ளங்கவர் மகாகாவியம்.

கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் பாடப் புத்தகமாகவும் கலந்தாராய்வு செய்வதற்காகவும் பரவலாகப் பயன்படுத்தப்படுகிற அரிய நூல்.

**788 பக்கங்கள் ரூ. 100.00**





## இறைவனுடன் நீங்கள் பேசுவது எப்படி

இறைவனுடன் பேசவும், நமது பிரார்த்தனைகளுக்குத் திட்டவட்டமான பதில்களைப் பெறவும் உண்மையிலேயே முடியுமா? ஆன்மீக ஆசான் யோகானந்தர் இப்புத்தகத்தில் பதில் அளிக்கிறார்.

பாக்கெட் சைஸ். **51 பக்கங்கள். ரூ. 5.00**

## வெற்றியின் விதிமுறை




உங்கள் வாழ்க்கையில் ஏற்படும் தடைகளைக் கடந்து வெற்றியை முழுமையாக அடைய உறுதுணையாக இருப்பது உங்களுடைய திறமை மட்டுமின்றி இறைவன் உங்களுக்கு அளித்திருக்கும் உட்சக்திகளின் ஆற்றல்களே என்பதை யோகானந்தர் இப்புத்தகத்தின் மூலம் அறிவுறுத்துகிறார்.

பாக்கெட் சைஸ். **40 பக்கங்கள். ரூ. 5.00**

**மற்றும் இதர நூல்கள் (ஆங்கிலத்தில்)**

---

வெளியீடு : **யோகதா சத்சங்க சொஸைடி ஆஃப் இந்தியா,**
ராஞ்சி - 834 001. ✆ : **0651-2460071**

கிடைக்குமிடங்கள் : **யோகதா சத்சங்க தியான மண்டலி,**
23, III கிராஸ், டோக் நகர், கோச்சடை P.O., மதுரை-625016
**✆ : 0452-2384805, Cell : 098421 79797**

**யோகதா சத்சங்க தியான கேந்திரம்,**
புதிய எண் 14, ராஜரத்தினம் தெரு, கீழ்ப்பாக்கம் சென்னை - 600 010.
**✆ 044-26481232, 26411564**

**ஜனவரி 2004ல் சென்னையில் நடைபெறும் புத்தகக் கண்காட்சி**

RAE-3652

புதிய தொடர்





# 1 மார்க் வாங்கலாம் வாங்க!

"என்னடி? ஃபஸ்ட் மிட் டெர்ம் மார்க்ஸ் வந்ததா?"

"உம்..."

"என்ன முனகறே? டோட்டல் எவ்வளவு?"

"292"

"சனியனே! இன்னும் எட்டு மார்க் எதிலே விட்டே?"

"இங்கிலீஷ் 5, தமிழ் 3!"

"ரேங்க் என்னடி?"

"செகண்ட்!"

"ஃபஸ்ட் மார்க் எவ்வளவு?"

"295!"

"மகாராணிக்கு இன்னும் ஒரு மூணு மார்க் வாங்க முடியவில்லையா? 'ஓ போடு' பாட்டு மட்டும் வரிக்கு வரி அப்படியே சொல்லத் தெரியுது. எல்லாம் என் தலைவிதி!" - முதல் வகுப்பிலிருந்தே ஆரம்பித்து விடுகிறது போராட்டம். ஒன்பதாம் வகுப்பை எட்டிவிட்டாலோ கேட்கவே வேண்டாம்... அந்த வீட்டிலுள்ள அனைவருக்கும் அடுத்த நான்காண்டுகளுக்கு 'சாமி' வந்து விடுகிறது. பெற்றோர், ஆசிரியர், உற்றார், உறவினர், வீட்டிற்கு வருவோர், போவோர், தெரு முனையில் டீக்கடை வைத்திருக்கும் இராமசாமி... இப்படிப் பல பேர் சமயம் கிடைக்கும்போதெல்லாம் 'படி! படி!' என்று சொல்லி, அவளை வறுத்தெடுத்து விடுகிறார்கள். பாவம், மாணவியால் என்ன செய்ய முடியும்? 'திட்றாங்க, திட்றாங்க' என்று புலம்புவதைத் தவிர!

மாணவனை இப்படி ஓயாமல் 'படி படி' என்று சொல்லும் பெற்றோரோ, ஆசிரியரோ, அவனுக்கு எப்படிப் படிக்க வேண்டும் என்று சொல்கிறார்களா? சாக்குப் பைக்குள் பொருள்களைத் திணிப்பது போல், மூளைக்குள் பாடங்களை அடைத்துவிடலாம் என்று பலர் நினைக் கிறார்கள்.

**'சா**க்குப் பை' அணுகுமுறையை உதறி வைத்துவிட்டு சயன்டிஃபிக்கா படிக் கலாம். மார்க்கு வாங்கலாம், வாங்க...!

**உ**ங்க அப்பா புதியதாக ஒரு 'பைக்' வாங்கியிருக்கிறார் என்று வைத்துக் கொள் வோம். அதை ஓட்டிப் பார்க்க உங்களுக்குக் கொள்ளை ஆசை. ஆசைப்பட்டவுடன், உடனே சட்டென்று உங்களால் வண்டியை எடுத்து ஓட்டி விட முடியுமா? முடியாது தானே! வண்டியை ஓட்ட ஒரு முக்கிய மான விஷயம் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அதாவது 'பைக்'கை எப்படி இயக்க வேண்டும் என்று உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

சரி, இது தெரிந்தால் மட் டுமே வண்டியை எடுத்து ஓட்டி விட முடியுமா? முடியாது. ஏனெனில் வண்டியை எடுத்துக்கொண்டு வெளியே போனால், ஒரு நெருக்கடியான சாலையிலோ அல்லது திருப்பத்திலோ, அல்லது சற்றும் எதிர்பாராத விதமாகக் குறுக்கே ஒரு வண்டி வந்தாலோ, நீங்கள் நிலை தடுமாறி விபத்தில் மாட்டிக் கொள் வீர்கள். எனவே, சாலையில் பாதுகாப்பாக வண்டியோட்டவும் தெரிந்திருக்க வேண் டும். கூடவே, இடைவிடாத பயிற்சியும் தேவை. இந்த இரண்டும் - knowledge of riding techniques and practice இருந்தால் மட் டுமே உங்களால் நன்றாக, ஆபத்தில்லாமல், பாதுகாப்பாக 'பைக்' ஓட்ட முடியும்.

"நன்றாகப் படித்து நல்ல மதிப்பெண்கள் வாங்க வழி சொல்வீர்கள் என எதிர்பார்த் தால், இதென்ன சற்றும் தொடர்பில்லாமல் 'பைக்' ஓட்டுவதைப் பற்றி கதை!" என்று கேட்கிறீர்களா?

'பைக் ஓட்டுவது' ஒரு செயல்.

'படித்தல்' என்பதும் ஒரு செயல்.

சிறப்பாக பைக் ஓட்ட உங்களுக்குத் தேவை knowledge of riding techniques and practice. நிறைய மதிப்பெண்கள் பெறுமாறு



**பேராசிரியர் பா.இராமகோபால்**




• கிழிச் முள்ளுக்காடு!

# பாதை போட்ட மன்னன்!



• பளிச் ரோடு



முசிறியிலிருந்து வெள்ளூர் வழியே இரண்டு மினி பஸ்கள் அந்தரப்பட்டியைக் கடந்து செல்லும். பஸ்ஸின் ஓரங்களில் அமர்ந்துள்ளவர்கள் கொஞ்சம் அசந்தாலும் சாலையின் இரண்டு பக்கங்களிலும் காடாக மண்டியுள்ள வேலிக்கருவை முட்செடிகள் பதம் பார்த்து விடும்.

இதற்கு விடிவுதான் என்ன? யோசித்தார் ஓர் இளைஞர். துரட்டி, அரிவாள் சகிதமாகக் களத்தில் இறங்கிவிட்டார். இப்போது சாலை எங்கிலும் பளிச். வேலிக்கருவை முட்செடிகள் வெட்டி அப்புறப்படுத்தப்பட்டு சாலை அகலமாகிவிட்டது. தனியொரு நபராக நின்று இதைச் செயல்படுத்தியுள்ள இளைஞரின் பெயர் அபிமன்னன். அந்தரப்பட்டி கிராமத்தில் ஆடு மேய்க்கிறார்.

இன்னொரு நியூஸ் : இவர் பி.எஸ்சி. கணித பட்டதாரி!

தகவல், படங்கள் : திரு

படிக்க உங்களுக்குத் தேவை :

knowledge of reading techniques and practice.

'படித்தல்' என்பது ஒரு செயல் என்று பார்த்தோம். அப்படியானால் அதை நிகழ்த்துவது யார்?

**'படித்தல்' என்ற செயலை கண், மனம், மூளை ஆகிய மும்மூர்த்திகளும் இணைந்து நிகழ்த்துகிறார்கள்** - இந்த வாக்கியத்தை இன்னொரு முறை படியுங்கள். 'இணைந்து' என்ற சொல்லை, உங்கள் மனத்தில் ஆழமாகப் பதிய வைத்துக் கொள்ளுங்கள். ஆம்! மேலே சொன்ன மூன்று ஆசாமிகளும் ஒருவருக்கொருவர் இணைந்து ஒற்றுமையுடன் இயங்கினால்தான், உங்களால் சிறந்த முறையில் படித்து, அதிக மதிப்பெண்கள் வாங்க முடியும். அப்படி இல்லையெனில் பாடம் 'போர்' அடிக்க ஆரம்பித்து விடும். அப்புறம் உங்களுக்கும், பாடத்திற்கும் இடைவிடாத போர்தான்!

கண், மனம், மூளை - இந்த மூவரையும் ஒற்றுமையாக இயங்க வைத்தால் - அதிக மதிப்பெண்கள் பெற முடியுமா? கண்டிப்பாக முடியும். அதற்கு இவர்களின் இயல்பு, வேலைகள், இவர்களுக்கிடையேயுள்ள தொடர்பு எத்தகையது, என்று கொஞ்சம் தெரிந்து கொண்டால் போதும்..

அடுத்த அத்தியாயத்தில் கண்ணோடு கொஞ்சம் பேசுவோம்...

படங்கள் : ஸ்ரீஹரி

# சோ எழுதிய வால்மீகி ராமாயணம்

# மஹாபாரதம் பேசுகிறது

அல்லயன்ஸ் நூற்றாண்டு சிறப்பு வெளியீடுகள்
என். ஸ்ரீநிவாஸன் எழுதியது

**100 தலைப்புகளில் 100 புத்தகங்கள்!**

முதன்முறையாகத் தமிழில் வெளிவரும்

**என்சைக்ளோபீடியா**

| | | |
|---|---|---|
| 1. | நம்மவர் செய்த விந்தைகள் | 100 |
| 2. | அவர்கள் செய்த விந்தைகள் | 100 |
| 3. | உலக மகா கொடுங்கோலர்கள் | 100 |
| 4. | உலகப் புகழ் பெற்ற சொற்பொழிவுகள் | 100 |
| 5. | விந்தை உயிரினங்கள் | 100 |
| 6. | அரண்மனை ரகசியங்கள் | 100 |
| 7. | உலகப் புகழ் பெற்ற கட்டடங்கள் | 100 |
| 8. | நம்ப முடியாத உண்மைகள் | 100 |
| 9. | வியப்பூட்டும் உண்மைகள் | 100 |
| 10. | தாவர உலகிலே! | 100 |
| 11. | விந்தைத் தாவரங்களும் மூலிகைத் தாவரங்களும் | 100 |
| 12. | யார் என்ன சொன்னார்கள்? | 100 |
| 13. | நீருலகிலே! | 100 |
| 14. | பாலூட்டிகள் வரிசையிலே! | 100 |
| 15. | தமிழ் வளர்த்த பெருமக்கள் | 100 |

தனிப்பிரதி ஒன்றின் விலை ரூ.100/-

**Dr. சுப்ரமண்ய ஸ்வாமி**

எழுதிய

**ராஜீவ் காந்தி கொலை**

விடை கிடைக்காத
வினாக்களும் கேட்கப்படாத
கேள்விகளும்
(தமிழாக்கம் - சுதாங்கன்)

பரபரப்பான அரசியல்வாதியின்
பரபரப்பான புத்தகம்

விலை ரூ. 125/-

25000க்கும் மேற்பட்ட பழமொழிகளைக் கொண்டது 'வாகீச கலாநிதி' கி.வா. ஜகந்நாதன் தொகுத்த

**தமிழ்ப் பழமொழிகள்** (4 தொகுதிகள்) ரூ. 300/-

காஞ்சீ மஹா ஸ்வாமிகள் ஸ்ரீ சந்திர சேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் திரு அவதாரத்தில் தொடங்கி - திரு அவதாரம் நிறைவு வரை - ஓவியர் சில்பியின் ஏராளமான படங்கள் - புகைப்படங்களுடன் - இரண்டு தொகுதிகள் - (ஸ்ரீ சாம்பமூர்த்தி ஸாஸ்த்ரிகள், குப்புஸ்வாமி ஐயர், பி.என். பரசுராமன் எழுதியது)

**பூஜ்யஸ்ரீ மஹா ஸ்வாமிகள் வரலாறு (ரூ.500/-)**

**'சொல்லின் செல்வன்' பி.என். பரசுராமன்** எழுதிய நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| விதுர நீதி | ரூ. 30/- | சனத்குமாரரின் உபதேசங்கள் | ரூ. 25/- |
| நீதி சதகம் | ரூ. 21/ | பீஷ்மர் சொன்ன தத்துவக் கதைகள் | ரூ. 60/- |
| விபூதி ருத்ராட்சம் மகிமை | ரூ. 37/- | வைராக்கிய சதகம் | ரூ. 16/- |
| சித்தர்கள் சரித்திரம் | ரூ. 35/- | யட்சப் பிரச்னம் ப்ரச்னோத்ர ரத்னமாலிகா | ரூ. 25/- |
| துணுக் துணுக் | ரூ. 21/- | சித்ரகுப்தன் கதைகள் | ரூ. 18/- |
| அஷ்டாவக்ரர் உபதேசங்கள் | ரூ. 33/- | வாரியார் சொற்பொழிவில் கேட்டவை | ரூ. 60/- |
| மஹரிஷிகள் வரலாறு A.V. சுகவனேஸ்வரன் | ரூ. 65/- | An Introduction to the Vedas (Ka.Sri.Sri) | ரூ. 60/- |

**அல்லயன்ஸ் கம்பெனி**

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
244, ராமகிருஷ்ணா மடம் சாலை, மயிலாப்பூர்
சென்னை - 6000 004. ✆ 24941314






# நட்புங்கிறது ஐஸ்வர்யா மாதிரி!

மதுரை யாதவர் கல்லூரி. பிராக்சி போட்டு விட்டு 'கட்' அடிக்கும் ஒன்று இரண்டு மாணவர்கள்கூட ஃபுல் அட்டெண்டன்ஸ்! "நம்ப சேக்காளி பேசப் போறான். விசிலடிச்சு உற்சாகப்படுத்த வேணாமா" என்று கொட்டமடிச்சுக் காத்திருந்தார்கள்.

'கல்லூரி வாழ்க்கையின் வரம், அறிவே! நட்பே!' என்ற ஜிகர்தண்டா தலைப்பில், இனிய, பட்டிமன்றம் துவங்கியது.

முன்னாள் சபாநாயகர் தமிழ்க்குடிமகன் ஆசிரியராகவும், தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் மாணவராகவும் இருந்து, புகழ்பெற்ற யாதவர் கல்லூரியின் முதல்வர் திருவாசகம்... 'விடுதலைப் போராட்டக் கால தலைவர்களின் வருகை போன்ற வரலாற்றுப் பதிவு, 'கல்கி'யின் வருகை' என்று குறிப்பிட்டார்.

மதுரை காமராசர் பல்கலைக் கழக ஒப்பிலக்கியத்துறை தலைவரும், சாகித்ய அகாடமி உறுப்பினருமான முனைவர் இரா. மோகன் நடுவர் பொறுப்பேற்று, வயிறு குலுங்க அல்ல... வயிறு வலிக்கச் சிரிக்க வைத்து விட்டார்.

**கோ. கருணாகரன்** (அறிவே) :

(கல்கி அறக்கட்டளையின் கல்வி நிதி உதவி பெற்ற மாணவர்)

கல்லூரி நட்புதான் மாணவர்களைக் கெடுக்கிறது. வருஷம் முழுவதும் நண்பர்களோடு ஜாலியாகச் சுற்றித் திரிந்து விட்டு, கடைசியில் பார்த்தால் அரியர்ஸ்தான் மிஞ்சும்.

கல்லூரி நட்பு வாழ்நாள் முழுவதும்



தொடர்கிறதா? ஆனால் கல்லூரியில் கற்ற அறிவு, வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து வருகிறது.

இன்றைய கல்லூரி நட்பு, சுயநல நட்பாகவே இருக்கிறது. அந்த நட்பு பணக்கார மாணவர்களை மட்டுமே நண்பர்களாக ஆக்கிக் கொள்கிறது.

நட்பு இல்லாமல் படித்து தேர்வில் பாஸ் பண்ணிவிடலாம். அறிவு இல்லாமல் தேர்வில் பாஸ் பண்ண முடியாது. அதனால் தான் நம்முடைய கல்லூரி வாசகம் 'அறிவே செல்வம்' என்று இருக்கிறது. 'நட்பே செல்வம்' என்று இல்லை.



• 'நட்பே!' அணி



• நடுவர் இரா. மோகன்

**பெ. காந்தி** *(நட்பே)* :

அறிவு எப்படியும் வரும். படிக்காத மேதைகள் இல்லையா...? கல்லூரி வாழ்க்கை ஏன்? ஆசிரியர்கள், மாணவர்கள் ஒன்றாகப் பழகி பழக்கம் வரத்தான். அந்த நட்பில் எத்தனையோ நல்ல பழக்கங்கள் கனிந்து வரும். கல்லூரி என்றாலே தோழமையான உறவுக் கூடு என்றுதான் அர்த்தம்! அதனாலே, நட்புதான் கல்லூரி வாழ்க்கையின் சாரம்.

**ஹெச். அல்தாஜ் பேகம்** *(அறிவே)* :

குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் இன்று இந்த அளவுக்கு உயர்வதற்குக் காரணம் அவருடைய விஞ்ஞான அறிவுதானே தவிர, நட்பு இல்லை.

இன்றைய கல்லூரி நட்பு, தம் அடிக்கவும், அரட்டை அடிக்கவும் தான் பயன்படுகிறது. அது ஆக்க பூர்வமானதாக இல்லை.

**சே. சமீம்** *(நட்பே)* :

நடுவர் அவர்களே! உங்களை இங்கே நடுவராக அமர்த்தியதற்குக் காரணம் அறிவு தான் என்று எதிரணியினர் சொன்னார்கள். நடுவர் பொறுப்பேற்கச் சொல்லி உங்களிடம் வந்த எங்கள் கல்லூரிப் பேராசிரியர்கள், எந்த அடிப்படையில் வந்தார்கள்? நீங்களும் நாங்களும் டாக்டர் பட்டம் வாங்கியவர்கள், நீங்களும் அறிவாளி, நாங்களும் அறிவாளிங்கன்னா சொன்னாங்க? நட்பு.. அந்த நட்பின் அடிப்படையில்தானே நீங்க இங்கே நடுவராக வந்திருக்கீங்க...?

அப்துல் கலாம்... நல்ல அறிவாளிதான். ஆனால் ஏழைக் குடும்பத்தில் பிறந்த அவருடைய அறிவை வெளிக்கொண்டு வந்தது, அவருடைய நண்பர்களான அரவிந்தன், இராமனாதன் என்பவர்கள்தான்.

பேராசிரியர் கோபப்பட்டு பேசிவிட்டார் என்பதற்காக, எத்தனை பேர் படிப்பை விட்டுவிட்டுப் போயிருக்கிறார்கள்? அந்த கோபமான சூழலில் அறிவு வேலை செய்யாது. 'விடுடா மாப்ளே.. பார்த்துக்கலாம்.. மூணு வருஷம்தான், ஒட்டிடலாம். திரும்ப




• 'அறிவே!' அணி

எழுதி பாஸ் பண்ணலாம்" என்று ஆறுதல் சொல்லி, தன்னம்பிக்கையை வளர்ப்பது நட்புதான்.

எதையாவது காரணமாக வைத்து நட்பு வராது. அப்படி வந்தால் அது நட்பாக இருக்காது.

**சி. சுரேஷ்** *(அறிவே)* :

கல்லூரி வாழ்க்கையில் நட்பு நிரந்தரமானது அல்ல. கல்லூரி முடிந்தவுடன் பட்டம் கொடுக்கும்போது, இவருக்கு இவர் நண்பர் என்றா பட்டம் கொடுக்கிறார்கள்?

அவருடைய அறிவுக்குத்தான் பட்டம் கொடுக்கிறார்கள்.

கல்லூரி வாழ்க்கையில் நட்பு என்பது காதலிக்கும் சக மாணவ மாணவியரை திருமணம் செய்து வைக்கத்தான் இருக்கிறது. இன்றைய நட்பு உலகம், அறிவைத் தேடுவதில்லை. நான்கு பேர் சேர்ந்தால் சினிமாவைப் பற்றித்தான் பேசுகிறார்கள். பாரதியைப் பற்றிப் பேசுவதில்லை.

**இரா. தெட்சிணாமூர்த்தி** *(நட்பே) :*

நான்கு நண்பர்கள் சேர்ந்தால் 'ஈவ் டீசிங்' நடக்கும் என்று எதிரணியினர் சொன்னார்களே. இந்த ஆண்டின் தொடக்கத்தில் கைத்தறி நெசவாளர்கள் துயர் துடைக்க, கைத்தறி ஆடை வாங்கி அணிந்து, வீடுவீடாகச் சென்று விற்றோமே... அவர்களுக்கு உதவி செய்தோமே, அது நட்பு இல்லையா?

எதிரணி நண்பர் சொன்னார். நண்பர்களோட சேர்ந்ததினாலேதான் அரியர்ஸ் வைச்சேன்னு. நல்ல நண்பனைப் பார்த்துச் சேர வேண்டியதுதானே? உங்க அறிவு அங்கே வேலை செய்யலையா? நட்பு ஒன்றுதான் சாதி, மதம், இனம், மொழி கடந்து வருவது.

**நடுவர் - முனைவர் இரா. மோகன்** *(தீர்ப்புரை) :*

'நட்பைக் கூட கற்பைப் போல எண்ண வேண்டும்' என்றெல்லாம் சொன்னார்கள். சுய நல நட்பு, நயவஞ்சக நட்பு என்று பல வகையும் சொன்னார்கள். நண்பன், உயிர் நண்பன் யார் என்பதற்கு திருவள்ளுவர் நட்பு, நட்பு ஆராய்தல், பழைமையான நட்பு, தீ நட்பு, கூடா நட்பு, என நிறையச் சொல்லியிருக்கிறார் என்றால், நட்பு எவ்வளவு பெரியது. நட்பு என்று சொன்னால் கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார் நட்புக்கு இணை இருக்குமா? இன்றைய நட்பு ஓடிக் கொண்டிருக்கும் பேருந்தில் ஏறுவதைப் போல, 'நக நட்பு' ஆகிவிட்டது.

நான் இன்று இந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறேன் என்று சொன்னால், வகுப்பறையில் ஆசிரியர் கற்றுக் கொடுத்த அறிவுதான் காரணம்.

மாதா, பிதா, குரு, தெய்வம் வரிசையில் நட்பு இருக்கிறதா என்று கேட்டார்களே! ஃபிரண்ட், ஃபிலாஸபர், கைடு என்று இருக்கிறதே! உங்களுடைய துக்கத்தைப் பகிர்ந்து கொண்டால் துன்பம் பாதியாகக் குறைந்து விடும். சந்தோஷம் இரட்டிப்பாகும்.


வகுப்பறையில் நீங்கள் கற்றுக் கொள்வது நல்ல ஒழுக்கம். நல்ல அறிவு. நல்ல பண்பாடு. கல்லூரி வாழ்க்கை அருமையான வாழ்க்கை. நட்புக்குத் தகுதி இல்லாதவர்களை அறிவுள்ளவர்கள் தூக்கி எறிந்து விடுவார்கள். கல்லூரி வாழ்க்கையின் உரம் நட்பு; கல்லூரி வாழ்க்கையின் வளம் அறிவு.

கல்லூரி வாழ்க்கையில் நட்பு என்பது ஐஸ்வர்யா ராயைப் போல. அறிவு என்பது அன்னை தெரசாவைப் போல.

நட்புக்கு 47 மதிப்பெண்களையும், அறிவுக்கு 51 மதிப்பெண்களையும் வழங்கி, இந்தியாவை உலக அரங்கில் அறிவு என்ற ஆயுதத்தால் வல்லரசாக்கிக் காட்டுவோம் என்று சொல்லி, கல்லூரி வாழ்க்கையின் வரம் அறிவே என்று தீர்ப்பளிக்கிறேன்.

"விசனப்படாதே! நம்ம ஐஸ்™ மூணு மார்க்குதானே குறைச்சு எடுத்திருக்கு. அடுத்த தடவை சரிகட்டிப்புடலாம்..!" என்று விவேக் ஓபராய்களும், சல்மான்கான்களும் தமாஷ் செய்தபடி கலைந்து சென்றனர்.

தொகுப்பு :
**குன்றக்குடி சிங்காரவடிவேல்**
படங்கள் : **ஜெய், கணேஷ்**



## டிப்ஸ் கார்னர்!

உடம்பும் மனசும் டல்லடிச்சா, உடனே ஜில்லுன்னு ஷவர் பாத் எடுங்க. ஆறு மணி நேரத்துக்கு தண்டர் போல்ட் எனர்ஜி கியாரண்டி!

- பாஸ்கி

# உதவும் உள்ளங்கள் இல்லம்



**(ஆதரவற்ற முதியோர் மற்றும் சிறுவர் இலவச இல்லம்)**

9, மேற்கு கரிகாலன் இரண்டாவது தெரு, ஆதம்பாக்கம், சென்னை-88. போன் : 22321236, 22348338

ஆதரவற்ற இந்த இலவச இல்லத்தினர் தயாரித்த மெழுகுவர்த்திகளை வாங்கி, இவர்கள் வாழ உதவுங்கள்.

உணவு, உடை, மருத்துவம், கல்வி முதலியவற்றுக்கும் உதவலாம்.

Cheque / D.D.-யை **'உதவும் உள்ளங்கள்'** என்ற பெயரிலும் அனுப்பலாம்.

நன்கொடைக்கு வரி விலக்கும் உண்டு. (80G)

Website : www.udhavumullangal.com E-mail : udhavum2000@yahoo.com

---



# S.V.முதியோர் இல்லம்



## Charitable Trust (Reg)

இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் டாக்டர்களும், நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எல்லா எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

***முதியோர் சேவை பெரியது!***

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

## S.V. HOME FOR AGED

Charitable Trust (Reg)

**# 50 / 88, Panchali Amman Kovil Street, (Near Arumbakkam Post Office)**
**Arumbakkam, Chennai - 600 106 Tel. Off: 2475 5700, 2475 1356.**
**E-mail:svhome@vsnl.net**



'''விருமாண்டி' பாட்டெல்லாம் கேட்டேன். ரொம்பப் பிரமாதமா வந்திருக்கு'' என்று ஃபோன் செய்து சூப்பர் ஸ்டார் பாராட்டியதில், சூப்பர் ஆக்டர் உற்சாகத்தோடு மீசை முறுக்கிக் கொண்டாராம்.

# 'நியூ' சிவகாமி மாமி!

நீண்ட காலமாகக் கிடப் பிலேயே இருக்கும் 'புகழ்', 'மானஸ்தன்' படங்களுக்கு, திடீர் ஃபைனான்ஸ் புத் துணர்வு கிடைத்திருப்பதில் உற்சாகமாக இருக்கிறார் சரத் குமார்.



'ராகவன்' படத்தில் தனுஷ் நடித்த ஆக்ஷன் காட்சிகளைப் பார்த்த யூனிட், ''அச்சு அசலா, புரூஸ்லீ மாதிரியே ஆக்ரோஷமா நடிச்சிருக்கீங்க'' என்று பாராட்டியதும், உற்சாகமாய் விஸிலடித்து மகிழ்ந்தாராம் தனுஷ்.



'ஒற்றைப் படத்தோடு ஒய்ந்து விடுவோமா?' என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த கிரணுக்கு, 'நியூ' படத்தில், கும்பகோணம் சிவகாமி மாமி என்ற ஜிலீர் கேரக்டர் கொடுத்து உற்சாகப்படுத்தி விட்டாராம் டைரக்டர் சூர்யா.

வேளாவேளைக்குச் சாப்பாடு, சீரான உடற்பயிற்சி, நல்ல ஓய்வு என்று ஆறுமாதம் ரிலாக்ஸ்டாக இருந்ததில், கார்த்திக் மீண்டும் உற்சாகச் சிரிப்பு பூக்கிறார். 'தில்ரூபா,' 'காஷ்மீர்', 'என்றும் உன்னை நேசிப்பேன்' என்று கை நிறையப் படங்கள்!

மணிரத்னம் இயக்கும் 'ஆயுத எழுத்து' இந்தியிலும் தயாராகிறது. இதில் விவேக்கின் தனி காமெடி டிராக் அசத்தலாக வந்திருப்பதால், இந்தியிலும் ரவுண்டு கட்டி அடிக்கும் கனவில் மிதக்கிறார் விவேக்.

"மெட்டு மொத்தம் எட்டு, அத்தனையும் லட்டு" - இது 'தென்றல்' படத்துக்காக வித்யாசாகர் போட்டுக் கொடுத்துள்ள எட்டுப் பாடல்களுக்காக, தங்கர்பச்சான் கொடுத்த உற்சாக சர்டிஃபிகேட்!

"இனிமே அம்புட்டுதேங்" என்று விமர்சிக்கப்பட்ட ஜோ, 'அருள்', 'மன்மதன்', ஏவி.எம் படம் என மறுபடியும் பிஸியாகி விட்டதால் உற்சாகக் கும்மி அடிக்கிறாராம்!



டைரக்டர் சரண் சமீபத்தில் அப்பா ஆகியிருக்கிறார். ஏற்கெனவே 'சஞ்சித்' என்றொரு மகன் இருக்க, இப்போது அழகான பெண் குழந்தை பிறந்திருக்கிறது. பெயர்: சஞ்சனா! மீண்டும் உற்சாகம்!

- டாலி



# உற்சாக உத்வேக அமுதம்!

ஆந்திரா பக்கம் கரையேறிய புயல். கண் கலங்கி நின்ற சென்னைக் குழந்தைக்கு, ஊர்க்காசு மாதிரி, கொஞ்சமாய்க் கொடுத்துவிட்டுப் போன மழை! அந்த நொண நொண மழையிலும், அதிகாலை ஆறரை மணிக் குளிரிலும், ஸ்ரீ கிருஷ்ண கான சபா கிட்டத்தட்ட ஹவுஸ்ஃபுல்!

''நல்லவேளை, கொசு இல்லை!''


''விஜி, அமெரிக்காவிலே தானே இருக்கா?'' போன்ற குசுகுசு விசாரிப்புகள் தவிர, குண்டூசி நிசப்தம்! துளசியும் சாமந்தியும் போட்டுக் கொண்டு, இடுப்பில் கை வைத்து நின்ற பாண்டுரங்க விட்டலன் - ரகுமாயி விக்கிரகத்தை விழுந்து விழுந்து நமஸ்கரித்து விட்டு, சீட்டைத் தேடி ஓடினார்கள் பேரிளம் பெண்கள்.



சரியாக மணி ஏழு! சில்லு வண்டு போல சுறுசுறுப்பாக விட்டல்தாஸ் ஆர். ஜெய்கிருஷ்ண தீக்ஷிதர் நுழைந்ததும், சபையே சடக்கென்று எழுந்து நின்று வணங்கியது.

அரை நிமிட பூஜை, தீபாராதனைக்குப் பிறகு தமது குழுவினருடன் அமர்ந்து, 'ஸ்ரீராம ஜெய்ராம' என்று கணீர்க்குரலில் ஆரம்பிக்க, ஆடியன்ஸும் சேர்ந்துபாட, உற்சாகம் ஓகோ என களை கட்டியது.

ஜெயகிருஷ்ணா தீக்ஷிதரைச் சுற்றி, சின்னஞ்சிறு பொடிசுகள், ஐந்து வயதிலிருந்து




ஏகப்பட்ட சைஸில்! எல்லாமே தஞ்சாவூர், கோவிந்தபுரம் ஸ்ரீ பாண்டுரங்க பஜனாஸ்ரமத்தில், வேதபாடம் பயிலும் குழந்தைகள்.

ஆளுக்கு ஒரு பாட்டைத் துவக்கி வைத்து, வழி நடத்த, ஒவ்வொரு குரலிலும், ஒவ்வொரு ஈர்ப்பு; கிராக் ஜாக் மொறு மொறுப்பு! அதிலும் தீக்ஷிதரின் வலது பக்கம் பளிச் நாமமும், கொத்துமல்லிக் கட்டுக் குடுமியுமாய் உட்கார்ந்திருந்த ஐந்து வயதுக் குழந்தை, கேட்பரீஸ் தித்திப்பு!

''கோபாலா ரா...ரா'' என்று பாடிக் கொண்டே, சரியாகக் கூப்பிடறேனா என்று தீக்ஷிதரைப் பார்த்து சந்தேகக் கண்ணோடு கேட்க, அவர் கள்ளச் சிரிப்போடு உற்சாகப்படுத்தியது ஜோர்!



ஒரு மணி நேரம் பாண்டுரங்க விட்டல நாமத்தில் உற்சாக வெள்ளம் கரை புரண்டிருக்க, தலை துவட்டிக்க வேண்டாமா? அடுத்த அறுபது நிமிஷம் ஒரு கதை!

ரிஷபத் தேவர், தமது சிஷ்யர்களுக்குச் சொன்னதைச் சுவையாகச் சொன்னார்:

கடவுளைத் தொழாத கை - வெறும் மரக்கிளை மாதிரியாம்! கடவுள் நாமத்தைக் கேட்காத காது - பாம்புப் பொந்து மாதிரி! நினைக்காத தலை - ஜஸ்ட், எக்ஸ்ட்ரா லக்கேஜ்! கடவுளை நினைந்து சுவாசிக்காத மூக்கு - பட்டறைத் துருத்தி மாதிரி புஸ்...புஸ்... அவ்வளவுதான். கடவுளைத் தரிசிக்காத கண்களோ - மயிலிறகில் உள்ள கண் மாதிரி, ஒரு பிரயோஜனமுமில்லை.

''ஒரு காரியத்தை ஒருத்தன் பண்ணுவான். இன்னொருத்தன் கவனிப்பான். இரண்டு பேரோட அனுபவமும் வெவ்வேறா இருக்கும். ஆனா பண்ணுகிறவன், அதைக் கேட்கிறவன் இரண்டு பேருக்குமே அளப்பரிய சந்தோஷத்தைக் கொடுக்கிறது பஜனாம்ருதம்தான். எனக்கு உற்சாகமும், உத்வேகமும். தர்றதே ஜனங்களும் என்னோட சேர்ந்து பாடறதுதான்'' என்கிறார் பிரியம் வழியும் குரலில்!

இரு கைகளிலும் சிப்ளாக் கட்டைகளை லாகவமாகச் சுழற்றி, அறுதியிட்டு முடித்தபோது, தீக்ஷிதரைச் சூழ்ந்து கொண்ட ஆடியன்ஸ், ஆட்டோகிராஃப் புத்தகத்தைதான் நீட்டவில்லை. மற்றபடி அப்படி ஓர் உற்சாக முற்றுகை!

- அனு

படங்கள்: யோகா

## டிப்ஸ் கார்னர்!

கவுண்ட் யுவர் ஸ்மால் ப்ளெஸ்ஸிங்ஸ்!
அது எப்போதும் உங்களை உற்சாகமாக வைக்கும்.


- சன் டீ.வி ரத்னா





**வெ**றும் வெண் பொங்கலும் கொத்ஸுவும் தான். ஆனால் அவன் அதை ஆர்வம் மேலிடச் சாப்பிட்டது ராஜாராமனை ஆச்சரியப்பட வைத்தது. அவனுடைய பேச்சும், கிண்டல்களும், குறிப்புகளும் அந்தச் சாதாரண உணவை மிக உயர்ந்த கதிக்கு மாற்றிக் கொண்டிருந்தன. பொதுவாகவே அந்நிய மனிதர்களையோ, நெருங்கிய உறவினர்களையோ கண்டால் கூட, முழுவதும் தங்களை வெளிப்படுத்திக் கொண்டு பேசாத ராஜாராமனின் இரண்டு பையன்களும், ஒரு பெண்ணும் 'சித்தப்பா, சித்தப்பா' என்று அவன் பேச்சில் சிரித்தும், விவாதித்தும், வியந்தும், கூச்சலிட்டும் கலந்து கொண்டனர். இது போன்ற மாலைச்

# மேத்தவன்



சந்திப்புகளை வழக்கமாக்கி கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்ற எண்ணம் எழுந்தது.

''ஜன்மாஷ்டமிக்கு வந்தது. இப்பத்தான் எட்டிப் பார்க்க நேரம் கிடைச்சுதா? விசேஷத்துக்கு தலையைக் காட்டினா போதும்னு இருக்கியா?'' தனது எண்ணத்தை லலிதா கேள்வியாக வெளிப்படுத்துவதாக, ராஜாராமனுக்குத் தோன்றியது.

மன்னி அம்மாவுக்கும் தோழிக்குமான நடுநிலை. பேசும், விவாதிக்கும், கருத்து சொல்லும் நல்ல புஸ்தகம். எல்லா உறவுமுறைகளுமே அழகழகாக சிருஷ்டிக்கப்பட்டு, அதனதன் சக்திற்கேற்ப கொஞ்சம் மனிதாபிமானம், கொஞ்சம் கருணை, கொஞ்சம் பொறாமை, கொஞ்சம் சந்தோஷம் என குலுக்கிப் போடப்பட்ட கலிடாஸ்கோப்பாகக் கலந்து கிடக்கிறது. வாழ்க்கை சுழலச் சுழல, ஒவ்வொரு குணமும் ஒவ்வொன்றுடன் பல நிலைகளில், பல கோணங்களில் சேர்ந்து, வித விதமாய்க் காட்சி அளிக்கிறது.

## சத்தியப் பிரியன்

கொத்துமல்லிச் சட்னியை உள்ளே கொண்டு வைக்கப் போன பொழுது லலிதா கைக்காரியமாக வருவது போன்ற பாவனையுடன், கீழ்க் குரலில், கண்களை வாசலுக்கும், உள்ளுக்கும் உருட்டியபடி "எதுக்கு வந்திருக்கானாம்?" என்றாள்.

"தெரியாது" என்றான் ராஜாராமன்.

"கேக்கலியா?"

"வீட்டுக்கு வந்த தம்பியை, ஏன் வந்தேன்னு கேட்க முடியுமா?" ராஜாராமன் மடக்கியதில் லலிதாவுக்கு வார்த்தை வரவில்லை.

"ஒண்டியா வந்திருக்கானேன்னு கேட்டேன். புக்ஃபேருக்குப் போறோம், ஹோம் எக்ஸிபிஷனுக்குப் போனோம். வழியில மன்னியையும் ஒரு எட்டு பார்த்துட்டுப் போயிடலாம்னு வந்தோம்னு மஹாராணியையும் கூட்டிண்டு, உள்ள ஒரு காலும், வாசப்படில ஒரு காலுமா நிப்பானே. அதான் கேட்டேன்"

"காதில் விழுந்து வைக்கப் போறதுடி"

"விழட்டும்"

"ஏண்டி, ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு மாதிரி இருக்க?"

"நான் என்ன டி.வி. ஸீரியல்ல வர்ற மன்னியா? இருபத்தி நாலு மணி நேரமும் தியாகம் பண்ணிண்டே இருக்க. ஆத்திரம், அழுகை, பொறாமை எல்லாம் கலந்த சாதாரண மன்னிதான். தியாகம் பண்றதுக்குத்தான் பிறவி எடுத்திருக்கேளே மொத்தமா. வயசாக வயசாக, முடியும் ஏறிண்டு போய் முன் நெத்தி பளபளன்னு பெரிசா இருக்கு. நன்னா காட்டுங்கோ. அவா, அவா விரல் நீளத்துக்கு ஏத்தா மாதிரி சின்னதாவோ, பெரிசாவோ தம்பிமார் அத்தனை பேரும் பட்டை போடுவா."



அவன் கிளம்பியதும், "போறச்சே வந்துட்டுப் போ. ராத்திரி சாப்பிட்டுட்டுப் போயிடலாம்" என்றான் ராஜாராமன்.

"வந்துட்டுத்தான் போவேன். ஆனா சாப்பிட இல்லை" அவன் தனது மோட்டார் - பைக்கில் அமர்ந்து கிளம்பினான்.

கணவனும், மனைவியுமாக வாசல் கதவு வரை வந்து வழியனுப்பப் போனார்கள்.

"மாதேஸ்வரன் புண்ணியத்தில் தம்பி தரிசனம் கிடைச்சது" என்றாள் லலிதா.

"பசங்க காதில் விழப்போறது லலிதா"

பதிலே சொல்லாமல் அடுத்த கேள்விக்குத் தாவினாள். "ரெண்டாவது வீடு கட்டிண்டிருக்கானாமே. முடிஞ்சாச்சாமா?" ரெண்டாவது என்பதில் அழுத்தம், கிண்டல் எல்லாம் இருந்தது.

"வீட்டுக்காராகிட்ட சொல்லி பாத்ரூம் பைப்பை மாத்தச் சொல்லுங்கோ. கொட்டிண்டே இருக்கு" நடுவில் ஒரு ஆர்டர்.

உள்ளே போனதும் தொலைபேசியை இயக்கி, "யாரு கிஷோரா! நான் தாண்டா பெரிம்மா பேசறேன். எல்லு பெரிம்மாடா. நீ படிக்கவே மாட்டேங்கறேன்னு ஓங்கப்பா அழுதுட்டுப் போறான். எந்த சப்ஜக்ட் கஷ்டமா இருக்கோ, அதை பாலாஜிகிட்டயோ, முரளிகிட்டயோ கேட்டுக்கக் கூடாதா? நன்னா படிக்கணும்டா கண்ணப்பா. நம்மளவாளுக்கு படிப்புதான் முக்கியமில்லியா? என்ன படம் பார்த்தேன்?

'திருமலை' பார்த்தாச்சா? உன் தங்கை கிட்ட கொடு. என்னடி குட்டிப் பிசாசு. ஸ்கூல் ஃபங்ஷன்னு டான்ஸ் ஆடினாயா? பாலிமர் சானல்ல உன்னைப் பார்த்தேன். வொயிட் ஃப்ராக் ரொம்ப அழகா இருந்த துடா. அம்மாட்ட கொடு! யாரு அபியா.?"

அவளுடைய செய்கை ஆச்சரியமாக இருக்கிறது. மீண்டும் கலிடாஸ்கோப்; ஒளி மாற்றம்; உருவமாற்றம். வினோதங்களும் ஆச்சரியங்களும் இல்லாமல் போய்விட் டால் வாழ்க்கை சலிப்புடையதாகப் போயிருக்கும்.

"அவன் இரண்டாவதா கட்டறது தனி வீடா? ஃப்ளாட்டா?" என்றாள். ராஜாராமன் தனியாகச் சிந்திப்பது அவளுக்குப் பொறுக்கவில்லை.

"தனி வீடு"

"எங்கே?"

"ஹைவேஸ் காலனியில்"

"எத்தனை கிரவுண்ட்?"

"நாலு ஏக்கர். போறுமா?"

"எனக்குன்னு நேரடியாவா சேதி தெரியறது? அங்க கேட்டு, இங்க கேட்டு இது கூட உங்க சித்தப்பா பையன் போஸ்டாபீசில் இருக்கானே, மகாலிங்கம், கார்டு வாங்கப் போயிருந்தப்போ கேட்டான்."

"என்னவோ ஒரே சீரா சிந்தனை ஓடிண்டிருந்தது. ஒவ்வொருத்தரா வந்து கலைச்சிட்டுப் போங்கோ" ராஜாராமன் இரைந்தான்.

"ஆமா ரஸ்ஸல், பெர்னாட்ஷாவோட மூளை. சிந்தனையைப் பூரா டாலரா மாத்திக்க"

வாசலில் மோட்டார் - பைக் சப்தம் கேட்டது. ஸ்விட்ச் போட்டது போல் லலிதா அமைதியானாள். பைக்கை நிறுத்திவிட்டு அவன் உள்ளே நுழைந்தான். பேச்சு மாறியது. சினிமா, டெலிவிஷன், சாப்பாடு.

திடீரென்று எழுந்து கொண்டான் அவன். "கொஞ்சம் காலாற நடந்துட்டு வரலாமே. வர்றியா?"

உள்ளே நெக்கு விட்டது. அண்ணா என்ற ஜபர்தஸ்துடன் மூன்றையும் விரட்டி விரட்டி, சந்தாஸ்ரமம் போனது நினைவில் எழுந்தது. கடைக்குட்டி வெங்கடேசன் இடுப்பு ட்ராயரை மேலே மேலே ஏற்றிக் கொண்டு ஓடி வந்தது, மலை மேலிருந்த ஆலமரத்தில் ஊஞ்சலாடியது, கொய்யாப் பழமும் எலந்தை வடையும் வாங்கித் தின்றது எல்லாம், அதனதன் திரை விலகி பளிச் பளிச் எனத் தோன்றியது.



"ஓ போகலாமே!" ராஜாராமன் சட்டையை மாட்டிக் கொள்ள உள்ளே போனான். நிழல் தொடர்ந்தது.

"என்னத்துக்காம் வாக்கிங் வேண்டிக் கிடக்கு?" என்றது நிழல்.

"எனக்கென்னடி தெரியும்?"

"அடுத்த கவிழ்ப்பா? பாருங்கோ! இனிமே என் அனுமதியில்லாம ஒரு வாக்குறுதியும் உங்க உடன் பிறப்புகளுக்கு செய்யக் கூடாது. இளிச்சவாய்ப் பட்டம் கட்டிண்டது போதும்"

"அதோ அந்த வீடு" என அவன் சுட்டிய இடத்தில் சிறிதளவே கட்டி முடிக்கப்பட வேண்டிய நிலையில் அந்த வீடு இருந்தது. தம்பி என்ஜினியர் என்பதால், பார்த்துப் பார்த்து கட்டியிருக்கும் வீடு.

நேரடியாக வராது என்றாலும், தகவல்கள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. லலிதா முதல் மருமகள். சாமர்த்தியம்

போதாதா? கணவனே கண் கண்ட தெய்வமா? எது காரணம் தெரியவில்லை. இல்லை, மூத்த மருமகளுக்கு கல் சிலைக்கு நைவேத்தியம் மாதிரி, பூச்சாண்டியாக வெண்பொங்கல் உருளியைத் திறந்து காட்டுவதோடு சரியா? இதுதான் எல்லா மூத்த அண்ணாமார்களுக்கும், மன்னிமார்களுக்கும் நிகழ்கிறதா?

லலிதா, ராஜாராமனின் குமாஸ்தா சம்பாத்தியத்தில் நழுவிப் போனவை, என ஒரு தனி லிஸ்ட் வைத்திருக்கிறாள். பசங்களுக்கு கான்வென்ட் படிப்பு இல்லை; கார்ப்பொரேஷன் அல்லது அதற்கு ஈடான தனியார் பள்ளிப் படிப்புதான். பீரோ, பீரோவாய் புடைவை இல்லை. ஐந்தடுக்கு பீரோவில் ஒரு அடுக்கில் பாதி அளவு புடைவைகள்தான். சி.டி. பிளேயர் இல்லை. கடை வீதிச் சுற்றல் இல்லை. க்ளப்பில் மெம்பர் இல்லை. பசங்களுக்கு படிப்புக்கு ட்யூஷன் இல்லை. பாட்டு, டான்ஸ் என எந்த அதிகப்படியான கலைப்பயிற்சியும் இல்லை. ஐம்பது ரூபாய் சந்தாத் தொகையில் உள்ளூர் நூலகத்தில் மூன்று புஸ்தகம். ஆறரை மணிக்குக் காலையில் விழும் ஆங்கில தினசரியைத் தவிர, வேறு வாராந்திரிகள் கிடையாது. ரேஷன் அரிசிதான்.

"முதுகைக் குனிஞ்சு காமிங்கோ. மூணு தம்பிமாரும், ஒரு தங்கையும் கால் வெச்சு ஓரே தாவா தாவின கால்தடம் பார்க்கணும்" என்பாள் கேலியாக.

"நல்லா இருக்கு... எப்போ குடி வரப் போற?"

"நாங்க ஒண்ணு மனசுல நினைச்சுண்டிருக்கோம்."

"நீங்கன்னா?"

"ரமணி, வெங்கடேசன், நான்"

"என்ன நினைச்சிண்டிருக்கேள்?"

"மாட்டேன்னு சொல்லிடாத, ராஜாராமன்" சட்டென்று தம்பி, அண்ணனின் கரங்களைப் பற்றிக் கொண்டான்.

செயற்கையாகத் தெரியவில்லை எனினும், வினோதமாக இருந்தது.

"மூத்தவனாப் பிறப்பதை யாரும் விரும்பிக் கேட்டுண்டு பிறப்பதில்லை. உனக்குன்னு மட்டுமில்லை, எல்லா மூத்த அண்ணனுக்கெல்லாமே நிர்பந்திக்கப்பட்ட இழப்புகள், தியாகம் என்ற பெயரில் திணிக்கப்படுகிறது. இது இது, இப்படித்தான் நடக்கணும் என்பதற்கு ஏற்பவே எல்லாம் அமையறது. அண்ணனா பொறப்பது, தம்பியா பொறப்பது எல்லாம். அப்பா உன்னை பாங்கில் சேரச் சொன்னப்போ மாட்டேன், நான் என்ஜினியர் ஆகணும்; ஆடிட்டர் ஆகணும்னு நீ முரண்டு பண்ணியிருந்தா, நாங்க என்ன ஆயிருப்போம்?"

"அதுக்கு?"

"அம்மாவோட திதிக்கு ரமணி வந்தப்போ அவன்தான் சொன்னான். நெலம் வாங்க எல்லாருமா பைசா போட்டோம். உன் பசங்க லட்ச லட்சமா சம்பாதிச்சு வீடு, வீடா கட்டட்டும். அதுவரையில் இது உன் வீடு. எங்களுக்காக நீ, மன்னி, குழந்தைகள் இந்த வீட்டில்தான் குடியிருக்கணும். சம்மதமா?" என்றான் தம்பி.

ராஜாராமன் பதில் கூறாமல் வந்த வழியே 'விடு விடு', என நடக்கத் தொடங்கினான்.

"பதில் சொல்லாமப் போறியேண்ணா?"


"நீளம், அகலம், உயரம் என்ற முப்பரிமாணங்களுக்கு மேலே ஒரு வீடு இல்லமாக மாற, நான்காவது பரிமாணம் தேவைப்படறது இல்லையா?" என்றான் ராஜாராமன் தம்பியைப் பார்த்து. மிதமான புன்னகை அவன் முகத்தில் தெரிந்தது. தம்பி அந்தப் புன்னகையை சந்தோஷமாக வாங்கிக் கொண்டான். ●

## டிப்ஸ் கார்னர்!

எப்போதும் பாஸிடிவ்வாகப் பேசுபவர்களுடன் நட்பை வளர்த்துக் கொள்ளுங்கள். அவர்களுடைய உற்சாகம் உங்களையும் மலர்ச்சியுடன் வைக்கும்.

**- ஜேம்ஸ் வசந்தன்**






இயற்கையை சிருஷ்டி செய்த கடவுள், அருமையான மூடில் இருந்தபோது பூக்களைப் படைத்திருக்க வேண்டும். நறுமணம், வண்ணம், மென்மை, கவர்ச்சி மட்டுமல்லாது, ஒரு சில மலர்களுக்கு போனஸாக, மருத்துவத் தன்மையும் அளித்திருக்கிறான். அந்த போனஸில் பிறந்த கமகம சிகிச்சை தான் அரோமா தெரபி (மணவியல் சிகிச்சை!).

பின்மாலைப் பொழுதில் பவழமல்லி மலரும்போது வெளிப்படும் மணத்தை அனுபவித்தவர்கள், இந்த சிகிச்சையின் பயனைச் சந்தேகிக்க மாட்டார்கள்.

'காட்டே ஃபோஸே' என்ற கிரேக்க மருத்துவர்தான் அரோமா சிகிச்சைக்கு முன்னோடி என்று கருதப்படுகிறது. டிஸ்டிலேஷன், சால்வென்ட் எக்ஸ்ட்ராக்ஷன், எக்ஸ்பிரஷன் ஆஃப் ஆயில் என்ற மூன்று முறைகளில் பூக்களிலிருந்து நறுமண எண்ணெய் பெறப்படுகிறது.

தாவரங்களிடமிருந்து பெறப்படும் ஆதார எண்ணெயை (எஸென்ஷியல் ஆயில்) அப்படியே பயன்படுத்தாமல், அதைச் சுமந்து செல்லக்கூடிய வேறு ஓர் எண்ணெயுடன் கலந்து, (கேரியர் ஆயில்) பலவிதமான சிகிச்சைகள் தரப்படுகின்றன. பாதாம் எண்ணெய், கார்ன் ஆயில், சூரியகாந்தி எண்ணெய், ஜோஜோபா எண்ணெய், ஆலிவ் எண்ணெய் போன்றவை கேரியர் ஆயிலாகப் பயன்படுத்தப்படுகின்றன.



"முடிப் பராமரிப்பு, சருமப் பராமரிப்பு, தூக்கமின்மை, கருவளையங்கள், பரு நீக்கும் சிகிச்சை, தவிர, உற்சாகமான மன நிலை ஏற்படவும் அரோமா சிகிச்சையைப் பயன்படுத்தலாம்" என்கின்றனர். இம்மார்டல் பியூட்டி பார்லர் அனு, லதா.

**துலவனம் :** சிறந்த ஆன்டிசெப்டிக். சோர்வு நீக்கி புத்துணர்வு தரும்.

**மல்லிகை :** நுகரச் செய்தாலே மன அமைதி ஏற்படும். தலைவலி நீங்கி, தூக்கம் வரும். தலைநிறைய பூ வைத்துப் பாருங்கள், நாள் முழுக்க ஃப்ரெஷ் ஃபீலிங் கிடைக்கும். ஆண்களானால் அறையில் பூவை வாங்கி வைக்கலாம்.

**தாமரை :** உச்சி முதல் உள்ளங்கால் வரை குளிர்ச்சியும் மலர்ச்சியும் ஏற்படும்.

**குங்குமப்பூ :** உடலுக்கு ஆரோக்கியமும் வலிமையும் தரும். சருமமும் புதுப் பொலிவு பெறும்.



• லதா

**ரோஜா :** சிறந்த அஸ்ட்ரின்ஜென்ட் - சருமத் துவாரங்களை இறுக்கி, இளமைப் பொலிவு தரும். களைப்பை நீக்கி, சுறுசுறுப்புத் திலகமாக்கும்.

**சம்பங்கி :** கோடைக்கேற்ற குளிர்ச்சியான மலர். குளிக்கும் நீரில் சம்பங்கி எண்ணெய் சில சொட்டுக்கள் சேர்த்துக் குளிக்க, நாள் முழுக்க உழைத்த சோர்வு பறந்தே போகும்.

மலர்கள் மட்டுமின்றி, தாவரங்களின் இதர பகுதிகளிலிருந்தும் வாசனைத் திரவியங்கள் தயாரிப்பதுண்டு.










கல்லூரி வகுப்புகளில் கொட்டாவி டீச்சர்களால் ரொம்ப போரடிக்கிறதா? கைக்குட்டையில் ரோஜா எண்ணெய் மூன்று சொட்டு விட்டு, அடிக்கடி நுகர்ந்து பாருங்கள். பழைய சுறுசுறுப்பு பத்தே நிமிஷங்களில்.

ஆயிரம் பிரச்னைகளால் மனசு அலை பாய்கிறதா? எலாங் - எலாங் எண்ணெயை, கை கால்களில் தடவிக் கொண்டு படுங்கள். நிம்மதியான குறட்டைச் சப்தம் கேட்கும்!

ஹோம்வர்க் செய்யாமல், டீவி. முன்பு 'தொப்' என்று விழுந்து கிடக்கும் குழந்தைகளின் பாதங்களில், பெப்பர்மின்ட் ஆயிலைத் தடவினால் உற்சாகத்தோடு பாடம் படிக்கக் கிளம்புவார்கள். நாம் இன்னும் உற்சாகத்தோடு மெகா சீரியலைத் தொடரலாம்!

கால்வலி, கழுத்து வலி என்று ஏகப்பட்ட புகார்களுடன் திரும்பும் உத்தியோகஸ்தர்கள், நாட வேண்டியது யூகலிப்டஸ் தைலத்தைத் தான். சூடு பொறுக்கும் வெந்நீரில், யூகலிப்டஸ் தைலம் கலந்து, இருபது நிமிடம் கால்களை அதில் வைத்துக் கொண்டால், உடல்வலி பறந்து உற்சாகம் பிறக்கும்.

மணப் பெண்களுக்கு திருமணம் நெருங்க நெருங்க, ஒரு வித பயம் அலைக்கழிக்கும். ஜிஎல்ஒய் அரோமா சிகிச்சை அவர்களுக்கு உச்சி முதல் உள்ளங்கால் வரை உற்சாகமளிக்கும்.



கணவன் மனைவிக்கிடையே ஊடலா? லாவண்டர் எண்ணெய் இருக்க பயமேன்? இரண்டு சொட்டு லாவண்டர் எண்ணெய் தலையணையில் தடவி விடுங்கள். சிடு சிடு மூடு மாறி, சிருங்கார மூடு சிக்கெனப் பிடித்துக் கொள்ளும்.

**சு**ம்மா ஒரு சின்ன டெஸ்ட்! இன்னிக்கு வீட்டுக்குப் போகும்போது, ஒரு முழம் வாசனைப்பூ வாங்கிட்டுப் போய் நில்லுங்க. வீட்டில் உற்சாகம் வானைப் பிளக்கலைன்னா, நாங்க காதுல பூ சுத்திக்கறோம்!

\- அபி

படங்கள் : ஸ்ரீஹரி

# சுட்ட பழம் தந்த ஊர்!



* தாழாக்குடியில் கவனிப்பற்று...



* நெல்லிமடத்து ஔவையார்

பசுமை போர்த்திய நெல் வயல்களின் பின்னணியில் தடாகை மலை. இதன் அடி வாரத்தில் தாழாக்குடி கிராமம். ஊரை ஒட்டி இடிபாடுகளோடு கிடக்கிறது ஔவை ஆலயம். பழைமையான சோழர் காலத் தூண்களோடு காட்சி தரும் இந்தக் கோயில் எழுப்பப்பட்டிருக்கும் இடத்தில்தான் ''சுட்ட பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா?'' என்று முருகவேள், ஔவையைப் பார்த்துக் கேட்டதாக செவி வழி நம்பிக்கை.

கருப்பட்டிக் கூழும், சர்ச்சைக்குரிய வடிவங்களில் கொழுக் கட்டையும் நைவேத்தியமாகப் படைத்து ஔவையம்மனை வழிபடுகிறார்கள் ஊர் மக்கள். இந்த ஔவைக்கு 'நெல்லிமடத்து ஔவையார் அம்மன்' என்று பெயர் விளங்கினாலும், அழகிய பாண்டிய புரத்தை அடுத்துள்ள குறத்தி மலையில், குடை வரைக் கோவிலாக உள்ள ஔவைக் கோயில் தான் அதியமான் காலத்தைச் சேர்ந்தது என்று அடித்துச் சொல்கிறார், வரலாற்று ஆய்வாளர் பத்மநாபன். காரணம் 'அதிகன் ஊரான அழகிய பாண்டியபுரம்' என்று கல்வெட்டுகளில் வருகிறது என்கிறார்.

குமரி மாவட்டத்தில் உள்ள மூன்றாவது ஔவை கோயில், முப்பந்தல் இசக்கி அம்மன் ஆலயத்தில் உள்ளது. இங்கு ஔவைக்குப் பூஜை செய்த பின்னரே இசக்கி அம்மனுக்குப் பூஜை.

- சக்கரம்



# என்னைத் தெரியுமா?

குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் கலந்து கொண்ட நிகழ்ச்சி அது. திருச்சியில் தூய வளனார் கல்லூரில் நடந்த அந்த நிகழ்ச்சி முடியும் தருவாயில், பரிசுப் பொருள்களுடன் மேடை ஏறிச் செல்ல சில மாணவர்கள் முயல, பாது காப்பு அதிகாரிகள் டென்ஷ னாகித் தடுத்தார்கள். அதில் ஒரு சுறு சுறு பையன்! அவன் கையில் பளிச்சென்ற தியா கைய்யர் ஓவியம்! அந்த மாண வனை மேடைக்கு வர விடுமாறு அப்துல்கலாம் சொல்ல, காஷ்யப் மகேஷுக்கு ஒரே மகிழ்ச்சி.

ஓடோடிச் சென்று, கணிப் பொறியில் தாம் வரைந்த ஓவி யத்தைக் கலாமிடம் பரிசளித் தார். ஸ்ரீ ராமர் பட்டாபிஷேகத் துடன் தியாகய்யர் ஓவியத்தைப் பார்த்து நெகிழ்ந்த கலாம், அதைக் கையில் பிடித்துக் கொண்டு, போஸ் கொடுத்தார்.

"சார்... உங்களோட கவிதைக்கு நான் மெட்டு போட்டிருக்கேன். பாடிக் காட்டட்டுமா?" என்று கேட்க, அப்துல் கலாம் அனுமதி தந்தார்.

"வளமான நாடாக்குவோம்... இள உள்ளங்கள் பொறியேற்றியே" ராகத் துடன் காஷ்யப் மகேஷ், பாட ஆரம்பித் தார். அந்த உற்சாகம் குடியரசுத் தலை வருக்கும் தொற்றிக் கொள்ளவே, தாமும் இணைந்து பாடத் துவங்கி விட்டார்.

காஷ்யப் மகேஷுக்கு பன்னிரண்டு வயது. இசை, ஓவியம் இரண்டிலும் மிகுந்த ஆர்வம் கொண்ட உற்சாக மின்னல்!

மேடை ஏறி முதன் முதலாகப் பாடிய போது வயது ஏழு கூட நிரம்பவில்லையாம்! தூக்கிவிட்டு மேடை ஏற்றியவர், திண்டுக்கல் ஐ.லியோனி. தமது வீட்டின் புதுமனைப் புகுவிழாவின் போது, ஐ. லியோனி சுருதி செட் செய்து தர, அப் போதே பையன் பிச்சு உதறியது எம்.ஜி.ஆர் பாட்டை...: "என்னைத் தெரியுமா...?"




இப்போது தனிக் கச்சேரி, ஆல்பம், ஒலிநாடா, சி.டி என மகேஷ் காஷ்யப் ஏக பிஸி!

கட்டுரை, படம்:
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



## டிப்ஸ் கார்னர்!

உங்களுக்குப் பிடிச்ச இசையைக் கேளுங்க! உற்சாகம் தன்னாலே கொப்பளிக்கும்.

- சந்தியா ராஜகோபால்

# ஆதிசக்தி கருமாரி!

ஆனந்தி

சென்னைக்கு வெகு அருகே உள்ளது திருவேற்காடு. வெள்வேல மரங்கள் இருந்த படியால் வேற்காடு என்று பெயர். அருள்மிகு பாலாம்பிகை உடன்உறை வேதபுரீச்வரர் கோயில் கொண்ட தலம். சேக்கிழார் சுவாமிகள் வாக்கினால்,

"நற்சூதராம் மூர்க்கர்" வாழ்ந்து சிவத் தொண்டும், சிவனடியார் தொண்டும் செய்த ஊர் வேற்காடு.

சம்பந்தர் பெருமானின் பாடல் பெற்ற அரிய தலம் ஆதலால், ஆயிரத்து முந்நூறு வருடங்களுக்கு முற்பட்டது. 'வெள்ளியான் உறை வேற்காடு' என்று பாடுகிறார் சம்பந்தர். 'திருவேற்காடுறை வேதபுரீசுரர் தருசேயே..' என்று அருணகிரிநாதர் முருகப் பெருமானைப் பாடியிருக்கிறார். வேற்கண்ணியம்மையின் திருக் கரத்தினால் முருகப் பெருமான், வேதபுரியில் (வேற்காடு) வேல் பெற்றுத் திருச்செந்தூரில் படைவீடு அமைத்து, அசுரர்களை வென்றார் என்று தலபுராணம் கூறுகிறது.



ஒரு சமயம் சிவபெருமான் வேற்கண்ணியம்மைக்குத் தம் ஆற்றல் முழுவதையும் அளித்து, நீயே சிவசக்தியாகி ஐந்தொழிலையும் செய்து வர வேண்டும் என்று சொன்னார். அன்னையே சிவசக்தி சொரூபமாக விளங்குவதை அகத்தியர் கண்டு பரவசம் அடைந்தார். குறுமுனியின் தவப் பயனால், அம்பிகை ஓம்கார பீடத்தில் எழுந்தருளினாள். ஏழு முனிவர்கள் ஏழிசையால் யாழிசை எழுப்ப, அம்பிகையும் மகிழ்ந்து ஏழு வடிவங்களில் காட்சி தந்தாள். அறியாமை இருளை அழிக்கும் ஞானத் திரி சூலத்தை ஏந்தி, அருள்வடிவாக நின்ற பராசக்தி, 'அந்தரி, வானத்தி, பார்ப்பனி, காமாட்சி, மீனாட்சி, விசாலாட்சி, கருமாரி' என்ற ஏழு சக்திகளாக, அகத்தியருக்கும் மற்ற முனிவர்களுக்கும் காட்சி தந்தாள். முதல் ஆறு பேரும் மற்ற தலங்களுக்குச் சென்றார்கள். இளையவளான கருமாரி, வேதபுரியில் தங்கி இரண்டு உருவங்களாக நிலை பெற்றாள். முதல் உருவம் ஜோதி வடிவமாக, சந்திரகலைகளைப் பொழியும் மதிவதனமாக அமுத கிரணங்களைப் பொழிந்தது. இரண்டாவது வடிவம் கருநீல மேனியுடன் வெள்வேல மரத்தினடியில் நாக வடிவம் பெற்று, நடனமாடத் தொடங்கியது.

"அகர சிகர அமுத மகர அழகு மாரிக்
குண்டலி
தகர குழலி வகர
யகர தருண மாரிக்
குண்டலி
இகர நடன யகர
நகர இனியமாரிக்
குண்டலி
உகர நகர மகர சிகர
வகர யகரக் குண்டலி"

என்று அகத்தியர் கருமாரியம்மனைப் போற்றித் துதித்தார்.

அம்பிகையைத் துதித்து, அவளுடைய அளப்பரிய கருணையால் அகத்திய முனிவர் ஞானத்தமிழைப் பெற்றாராம். சூத முனிவர் இருபதாயிரம் முனிவர்களுக்குக் கூறியதை, அருட்கவி கருமாரி தாஸர் எளிய சொற்களால் அமைத்த


-தருஸ்

பாக்களால் எடுத்துக் கூறியிருக்கிறார். ஏழாயிரத்தொரு எழுசீர்க் கவிகளால் அமைந்த இந்த நூல் 1969ஆம் ஆண்டுதான் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த நூலின் காரண கர்த்தா தேவி உபாஸகரான ராமதாஸ சுவாமிகள். 'உலகெலாம்' என்று நடராஜப் பெருமான் சேக்கிழாருக்கு அடி எடுத்துக் கொடுத்ததையே, இவரும் கருமாரிதாஸருக்கு அருளினாராம். அதிலிருந்து பிறந்த எளிய தமிழ்க் கவிதைகள் படித்து இன்புறக் கூடியவை. தமிழையும் சுவைக்கலாம். அன்னையின் அருளையும் பெறலாம்.

*'ஐஞ்சத்தி ஐஞ்சிவனை ஆள்கின்ற*
*ஆதிசக்தி*
*ஐந்தொழில் செய் கரிய மாரி'*

என்று ஐந்து தொழில்களையும் செய்கிறவளாக, ஐந்து சிரங்களை உடைய சிவபெருமானையே ஆள்கின்றவளாகக் கொண்டாடுகிறார்.

*'கலைத் தேவி கலையில் உறும்*
*காரணியே கலை படைத்த*
*நாரணியே கரிய மாரி.'*

கலைகள் தோன்றக் காரணமாக இருந்தவளே கருமாரி தேவிதான், என்கிறார் கவி.

அகத்திய முனிவர் தை மாதப் பௌர்ணமியன்று தமக்காகவே காட்சி தந்த அன்னையை உளம் உருகி வணங்கினாராம். அன்னை திருநீறளித்து "திருநீரே ஒளி அளிக்கும், ஞானத்தமிழ் அளிக்கும்" என்று கூறி, "சிவமளிக்கும் தமிழைப் பரப்புக" என்று உத்தரவிட்டாளாம்.

*'திருநீற்றால் அருள் ஞானத் தமிழ்பெற்றுச்*
*சைவமுறும்*
*தமிழ் மொழியைப் பரப்பு கென்றாள்.'*


கருமாரியம்மனைத் துதித்து அவளைத் தரிசித்து, அவள் சந்நிதியில் திருநீரு அணிந்து கொண்டால், ஞானத் தமிழ் கைவரப் பெறும். வேறு என்ன வேண்டும் நமக்கு.

*'நாகவடிவுற்றோனாய்ப் புற்றோங்கி*
*தன்னடனம்*
*புரிந்தருள் நாக மாரி'*யைத் தேடிச் சென்றால், கோயம்பேடு அங்காடியைத் தாண்ட வேண்டும். லாரிகளும், தண்ணீர் வாகனங்களும் எவ்வளவு தூரம் தடை செய்தாலும், கஷ்டப்பட்டு முன்னேறிச் சென்று, ஒரு வழியாக வேற்காட்டை அடைந்தால், மீண்டும் வளைந்து வளைந்து சென்று கோவிலை அடைய வேண்டும். கோபுர வாசலைத் தாண்டியதும் பெரிய மரம். அது வெள்வேலமரமா என்று பலரைக் கேட்டும் பதில் இல்லை... அன்னை கருமாரியின் சந்நிதிக்கும் வளைந்து வளைந்து தான் செல்ல வேண்டும். வரிசையில் நிற்பதற்கு அவ்வளவு ஏற்பாடு. அம்மன் இரண்டு விதமாகவே கருவறையில் காட்சி தருகிறாள். முகத்தைக் காட்டி தேகம் முழுவதையும் மறைத்த கோலம். முழு வடிவமும் கண்களுக்குப் புலனாகும்படியான மற்றொரு கோலம். உற்சவ அன்னைக்கு அலங்காரம் செய்து கொண்டிருந்த அர்ச்சகர் சொன்னார், "அம்மா வரப்ரஸாதி. ஒரு காலத்தில் பூமி வறண்டு, சூடேறி ஜீவன்கள் எல்லாம் தவித்தன. அம்பாளை வேண்டிக் கொண்ட போது மனமிரங்கி, அத்தனை உஷ்ணத்தையும் தன் சரீரத்தில் ஏற்றுக் கொண்டாள். அதனால் கறுப்பாகிவிட்டத் தன் உடலைக் கண்டால் எல்லாரும் பயப்படுவார்கள், என்று முகமண்டலத்தை மட்டும் காட்டி அருள்கிறாள். பின்னால் உள்ள தேவியை நன்றாகத் தரிசிக்கலாம்."

ஆயிரம் சிறிய கலசங்களுக்கு நூல் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். சங்குகள் அழகாக அடுக்கப்பட்டிருக்கின்றன. ஒருவர் சங்குகளுக்குப் பூஜை செய்கிறார். "இன்று என்ன விசேஷம்?" என்று கேட்டதற்குப் பதில் வரவில்லை. ஏன் தரிசனம் செய்ய வருபவர்களிடம் இவ்வளவு அலட்சியம் என்று தெரியவில்லை. அங்கு நின்று கொண்டிருந்த ஒருவர் "எண்ணூறு ரூபாய் கட்டினா சங்காபிஷேகம் செய்வாங்க. ஐயாயிரம் ரூபாய் கட்டினால், இப்பவே வேணுமின்னாலும் கலசாபிஷேகம் செய்வாங்க" என்றார்.

நமக்கு தரிசன பாக்கியமே போதும் என்று தோன்றியது.

(தொடரும்)



## டிப்ஸ் கார்னர்!

தினப்படி அஜெண்டாவில் நிச்சயம் உடற்பயிற்சி இருக்க வேண்டும். நாட்டியம், நீச்சல், வாக்கிங்னு. ஏதாவது ஒண்ணு அரைமணி நேரம் செஞ்சாலே நாள் முழுக்கத் தெம்பா இருக்கும்.

- விஜய சாரதி



# ‘சோ’ எனப் பொழியும் சந்தோஷம்!



டாக்டர் கே.ஸ்ரீ. ஸ்ரீதர்


**“இதுக்குதான், இன்னதுக்குதான் என்று வகை தொகையே இல்லாமல், கவலைப்படுற ஆசாமியா நீங்க? அப்ப, உங்களுக்கு பாக் மருத்துவம் உடனடி பலனளிக்கும்” என்கிறார் டாக்டர் கே.ஸ்ரீ. ஸ்ரீதர்.**

‘பாக் மருத்துவமா? முரட்டு ஆசாமி முஷாரஃப் நாட்டுல, உற்சாகம் தரும் உன்னத மருத்துவமா?” என்று விழித்த போது, “இது வேறே பாக்” என்று சொல்லி கவலை தீர்த்தார்.

“லண்டனைச் சேர்ந்த டாக்டர் எட்வர்டு பாக் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்ட மலர் மருத்துவம்தான் ‘பாக்’ தெரபி. பிரபல அலோபதி டாக்டரா ரொம்ப நல்லா பிராக்டீஸ் பண்ணிக்கிட்டு இருந்தவர், பூக்களுக்கு மருத்துவ குணங்கள் உண்டென்று தற்செயலாகக் கண்டு பிடிச்சதும், அதிலேயே இறங்கிவிட்டார். நிறைய ஆராய்ச்சிகள் செய்தபிறகு, 1928ல் ‘பாக் தெரபி’யை அறிவித்தார். கிட்டத்தட்ட முப்பத்தெட்டு வகை மலர்களுக்கு, நோய்களைத் தீர்க்கிற அபூர்வ ஆற்றல் இருக்கிறதைக் கண்டுபிடித்தார். இப்ப மேலை நாட்டுல எல்லாம் ‘பாக்தெரபி’ ரொம்ப பாப்புலர். குறிப்பா மனம் சார்ந்த நோய்களுக்கு” என்கிறார்.

‘பாக்’ அய்யா மருத்துவப்படி, சோர்வு நீங்கி, கலகலப்பா இருக்க, ‘சோ’வைத்தான் நாடணும். ‘சென்டாரி, ‘ஹார்ன்பீம்’, ‘ஆலீவ்’ என்ற மூன்று மலர் மருந்துகள் கலந்ததுதான் ‘சோ’!

“சிலர் இயல்பாகவே உற்சாகம் குறைந்து காணப்படுவார்கள். டைபாயிட், மலேரியா, போன்ற ஜுரம் வந்தவர்கள், ஆஸ்துமா, வலிப்பு, ஹார்மோன் பிரச்னை, மாத விடாய்க் கோளாறு, ரத்த சோகை உள்ளவர்களும் சோர்வாகத்தான் இருப்பார்கள்.



இத்தகையவர்களுக்கு, உடனடியாகப் புத்துணர்ச்சி தருகிறது ‘சோ’ மலர் மருந்து! இந்த மருந்தைச் சாப்பிடும்போது, தூக்கமின்மை, படபடப்பு, ஒற்றைத் தலைவலி போன்றவையும் குணமாகிவிடும். இன்னொரு விஷயம். ‘பாக்’ மருந்துகள் பக்க விளைவுகள் இல்லாதவை. அதனால் உற்சாகமாகப் பரிந்துரைக்கலாம்” என்றார் டாக்டர் கே.ஸ்ரீ. ஸ்ரீதர்.

**- ஏ.எஸ்.**

# புக்பேங்க்







**வழி தெரிந்து வழிபடுவோம் - பு.மா.ஜயசெந்தில்நாதன்**

கால ஓட்டத்தின் வேகத்தில், கம்ப்யூட்டர் மயமாகிவிட்ட அவசர உலகத்தில், கடவுளைப் பார்த்து 'ஹாய்' சொல்லிவிட்டுப் போவதே வழிபாடு என்றாகிவிட்டது. இந்தியாவுக்குப் பெருமையே அதன் பாரம்பரியத்தால்தான், பண்பாட்டால்தான், அவை தரும் ஆன்ம பலத்தால்தான். அவை நிலைக்க, தழைக்க, செழிக்க வேண்டுமானால், ஆன்மிகமும், அறிவும் இணைந்து ஆன்ம பலம் பெருக வேண்டும். அதற்கு ஓர் அருமையான வழி, வழிபாடு. அதை முறையாக, சரியாக, குறையாமல் செய்யவும், அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சொல்லவும் உதவும் வழிகாட்டி இந்நூல்.

**இந்து சமய மன்றம், காஞ்சிபுரம் - 2, விலை. ரூ.20/-**

**இருள் விடிவதற்கே - பிரியன்**

காதல் வந்து கனவுகளைக் களவாடி விட்டாலும் சரி, காலம் வந்து வாழ்வைப் புரட்டி விட்டாலும் சரி, அனுபவத்தைச் சொல்லும்போது கவிஞனாகி விடுகிறான் மனிதன். காதலையும், உலகின் மோதலையும் கலந்து கூறும் உரைநடைக் கவிதைகளின் தொகுப்பு.

**மணிமேகலை பிரசுரம், 7. தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை - 17, விலை ரூ.24/-**

**நீ வென்றுவிட்டாய் கண்மணி - இடைப்பாடி அமுதன்**

பணமும், ஜாதியும் பேச்சுக்கு இரண்டாம் பட்சமென்று சொன்னாலும், வாழ்வின் போக்குக்கு முதலாவதாய் நடைமுறையில் கொண்டு வாழும் மனிதர்கள்தாம் அதிகம். இதில் சமூக, வர்க்க மாற்றங்களை சாத்தியப் படுத்த முயலும் ஓர் இளைஞனின் காதல் கதை. சம்பவங்களின் கோர்வையில் சற்று அழுத்தம் குறைந்தாலும், குணம்தான் முக்கியம் என்னும் அடித்தளம், குறிக்கோளாய் இருந்து வாசிக்க வைக்கிறது.

**கவிதா பப்ளிகேஷன், 8. மாசிலாமணி தெரு, தி. நகர், சென்னை - 17, விலை. ரூ. 60/-**

**ஸ்ரீ தியாகப்பிரம்ம ஆராதனை உத்ஸவ வரலாறு - வை. ராதாகிருஷ்ண ஐயர்**

மொழி, இனம், தேசம் அனைத்தையும் கடந்த இசை - பிரும்மத்தின் ஸ்வரூபம். ஆனால், தனியொரு மனிதரைச் சார்ந்து இசை விழாவாகக் கொண்டாடப்படும் போது, அதில் ஸ்ருதி பேதங்கள் வருவது இயல்புதான். 1906ல் துவங்கிய தியாகராஜ ஆராதனையிலும் மதமாத்சரியங்கள், அபிமான, தராதர, கௌரவ பேதங்கள், இப்படி எத்தனையோ.

'மற்றவர் துன்புறுத்தினால் 'ராமா' என்று அழைத்து முறையிடலாம். ராமனே துன்புறுத்தினால் யாரை அழைப்பது?' என்று ராமனது வில்லால் நசுக்கப்பட்ட தவளை கேட்டதாக ஒரு கதை உண்டு. "உத்ஸவக் குழப்பங்களுக்குக் காரணமே தியாகராஜர்தான். தம்மை ஆதரித்த தமிழகத்தின் மொழியைத் தம் ஆராதனைப் பொருளாக அவர் கொள்ளாததுதான்" என்று நூலாசிரியர் ஒப்புக் கொள்கிறார். படிக்க சுவாரசியத்தையும், படிப்பினைக்கு அவசியத்தையும் ஏற்படுத்தும் நூல்.

**எம். ராம்மோகன், 11-B, சூர்யா அப்பார்ட்மெண்ட், 18/16, பாலையா அவென்யூ, மயிலை, சென்னை - 4, விலை ரூ. 25/-**

**- விஷ்வக்**

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka
Supplement to the Kalki issue Dated 11.1.2004





# அன்னை தெரசாவைப் போல்...




## ...16 வித நோய்களைத் தீர்ப்பதில்

பரிவுடன்கூடிய பராமரிப்பில் அன்னை தெரசா ஓர் முன்னோடி. அதேபோல், 16 வித சரும நோய்களைக் குணமாக்கும் மென்மையான ஸ்பரிசத்திற்கு, இதோ பன்முகத் திறன்கொண்ட ஓர் ஒப்பற்ற ஆயில்.

FranchOil NH - தென்கிழக்கு ஆசியாவில் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு தனது தெய்வீகத் தொடுதலை வழங்கி வருகிறது.

FranchOil NH - பயன்படுத்திப் பாருங்கள் - இது கடவுள் அனுப்பியது என்பதைக் கண்டு கொள்வீர்கள்!

Certified by:
* University of Madras.
* Open International University for Complementary Medicine, Colombo.

FRANCH HERBS TECHNOLOGIES LIMITED
Fax: 044 - 2644 4370
E-mail: franch@eth.net